HEAVENLY LADDER MINISTRIES

# மிருகங்கள்

வெளிப்படுத்தின விசேஷத்தின்
13ம் அதிகாரத்தின் விளக்கவுரை

MD JEGAN

இந்த

புத்தகம்

படிப்பதற்கு மட்டுமே!

உங்கள் வீட்டு

அலமாரியை

அலங்கரிப்பதற்கு

அல்ல!

# மிருகங்கள்

(வெளிப்படுத்தின விசேஷம் — 13-ம் அதிகார விளக்கவுரை)

M.D. ஜெகன்.

HEAVENLY LADDER MINISTRIES

First Edition: April, 2016.

Number of Copies: 1000

Printed at: LORD'S printers, Chennai.

Author: MD. Jegan.

Owned and Published by: HEAVENLY LADDER MINISTRIES.

For copies and Queries:
HEAVENLY LADDER MINISTRIES,
1, Suresh Nagar Main Road,
Janaki Nagar Extn.
Valasaravakkam,
Chennai 87.
+91 9444342018

# அத்தியாயங்கள்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் | 8 |
| 2. | ஏழு தலைகளும் ரோமாபுரியும் | 16 |
| 3. | நவீன ஐரோப்பா | 26 |
| 4. | சபையின் சரித்திரம் | 34 |
| 5. | நான்கு மிருகங்கள் | 42 |
| 6. | தீர்க்கதரிசனத்தில் அமேரிக்கா | 50 |
| 7. | வானத்திலிருந்து அக்கினி | 68 |
| 8. | பேசும் சிலை | 82 |
| 9. | மிருகத்தின் முத்திரை | 92 |
| 10. | முடிக்கும் முன் | 107. |

# நுழைவாயில்...

இவ்விளக்கவுரை ஏன்? சிறு விளக்கம்!

"இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன்" *(வெளி 3:20)* என்றார் இயேசு கிறிஸ்து. அவருக்கு கதவு திறக்கப்படுகிறதோ இல்லையோ, வெளிப்படுத்தின விசேஷத்திற்கு கதவு கண்டிப்பாக அடைக்கப்பட்டிருக்கிறது. கடைசி காலத்தின் திறவுகோல் கேட்பாரற்று கிடக்கின்றது – பல அரிய இரகசியங்கள் சபைகளிலே விளக்கப்படாமல் முத்திரிக்கப்பட்டிருக்கின்றன.

காரணங்களைக் கேட்டால் சாரைசாரையாய் அணிவகுக்கின்றன. படித்தால் புரியாது என பிதற்றல்வாதிகள் ஒருபுறம், பாமரனுக்கு விளங்காது, படித்த மேதாவிகளுக்கு மட்டுமே புலப்படும் என புலம்பல்கள் மறுபுறம், எங்கு காணினும் மிருகங்கள் – பயமாய் இருக்கிறது என தொடைநடுங்கிகளின் தர்க்கங்கள் ஒருபுறம், ஆசீர்வாத செய்திகளே போதும், இது போன்ற ஆழமான செய்திகள் இப்போது அவசியமில்லை என அரைவேக்காட்டு ஊழியர்கள் ஒருபுறம் என நாலாபுறமும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கு எதிர்கணைகள் ஏகமாய் உள்ளன.

உண்மையிலேயே இந்த ஒரு புத்தகம் தான் படித்தால் மட்டும் அல்ல, கேட்டாலே பாக்கியம் *(வெளி 1:3)* என வேதம் விவரிக்கிறது. இரண்டாவது இது பாமரனுக்கு புரியாத புத்தகமா என்றால், இதை எழுதின யோவான் அப்போஸ்தலனே படிப்பறிவில்லாதவர் *(அப் 4:13)*. அப்படியிருக்க எல்லோரும் நிச்சயமாய் விளங்கிக் கொள்ள முடியும். மூன்றாவது, பயமாய் இருக்கின்றது, எங்கு நோக்கினும் மிருகங்கள், வாதைகள், அழிவுகள் – இதைப் படிப்பதற்கே இப்படி பயந்தால் இவையெல்லாம் நிதர்சனமாய் நம் கண்களுக்கு முன் நிறைவேறப் போகின்றதே, எப்படி எதிர்கொள்வார்கள்? இவைகள் அப்படி எழுதப்பட்டதே அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளத்தான் – கடைசியாய் விசுவாசிகள் சபைக்கு

வாரமொருமுறை வரும் போது ஆசீர்வாத செய்தியையே பேசிப்பேசி, அவர்கள் அதற்கு அடிமையாய் உள்ளனர் – அவர்களை விடுதலையாக்கும் செய்தி வெளிப்படுத்தின விசேஷத்தில் தான் உள்ளது.

இப்புத்தகம் பெரிய சமுத்திரத்தில் இறங்கி இருக்கும் ஒரு சிறு படகு போல. பிரயாணம் வெகு தூரம் – வெளிப்படுத்தின விசேஷத்திற்கு முழு விளக்கவுரை என்பது உடனே முடிகிற காரியம் அல்ல, இது ஒரு அற்பமான ஆரம்பப் பணி – ஆனால் முடிவு கர்த்தர் கரத்தினால் சம்பூரணமாய் இருக்கும்.

ஏன் எடுத்தவுடன் 13-ம் அதிகாரத்தின் மிருகங்களைக் குறித்து விளக்கவுரை என்ற வினாவிற்கு விடை என்னவெனில், இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் எல்லாம் இக்காலத்திற்கு உரியன, குறிப்பாக 20-ம் நூற்றாண்டிற்குப் பிறகு நடைபெறும் சம்பவங்கள் – எனவே விசுவாச – வாசகர்கள் இதைப் படிக்கும் போது நிகழ்கால சம்பவங்களோடு ஒன்றிப் போக முடியும்.

மேலும் – இம்மிருகங்களைக் குறித்து அநேக விளக்கவுரைகள் ஆங்கில மொழியில் வெளி வந்துள்ளன, அதிலும் பெரும்பான்மையானவை தவறான கருத்துக்களைப் பதிவு செய்தபடியால், இவ்விளக்கவுரை அவசியமெனப்பட்டது.

முடிக்கும் முன், இப்புத்தகம் வேதாகமம் அல்ல, அதற்குத்துணை நூலும் அல்ல. எனவே வேதாகமத்தைப் படித்துவிட்டு நேரம் கிடைக்குமாயின் இப்புத்தகத்தை வாசியுங்கள். மேலும், இதில் உங்களுக்கு ஏதாகிலும் சந்தேகம் தோன்றுமாயின் தைரியமாய் எங்கள் அலுவலக அலைபேசி எண்ணிற்கு அழையுங்கள் (அலுவலக நேரத்தில் மட்டும்).

கர்த்தர் தாமே உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவாராக! (யோவான் 16:13)

சர்வ வல்லவரின் சீரிய பணியில்

**M.D. ஜெகன்.**



# 1

**“பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.”**

*முதலாவதாக வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரம் முதலாம் வசனத்தின் விளக்கத்தைக் காண்போம்.*

இந்த வசனத்தின் துவக்கத்தைக் கவனிக்கும்போது **பின்பு** என்று ஒரு வார்த்தையோடு துவங்குகிறது. இதன் அர்த்தம் இதற்கு முன்பதாக அநேக காரியங்கள் சம்பவித்திருப்பதை விளக்குவதற்கே. வெளிப்படுத்தின விசேஷத்தைப் பொறுத்தவரையில் எல்லாக் காரியங்களும் ஒழுங்கும் கிரமமுமாகத் தான் கொடுக்கப்பட்டுள்ளன, ஆனால் இதனை அதிகாரங்கள் வாரியாக பிரித்திருக்கிறபடியினாலே அநேக காரியங்களை நாம் வேறு விதமாகப் புரிந்து கொள்கிறோம். அதிகாரங்களின் பிரிவினையை எடுத்துவிட்டுப் பார்க்கும் போது, சில தொடர்புகளைக் கவனிக்க முடியும்.

உதாரணமாக 6-ம் அதிகாரம் முதல் 11-ம் அதிகாரம் வரை ஒரு தொடர்பு இருப்பதை நம்மால் பார்க்க இயலும். 6-ம் அதிகாரத்தின் முடிவிற்கும், 7-ம் அதிகாரத்தின் துவக்கத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கும். 7-ம் அதிகாரத்தின் முடிவும், 8-ம் அதிகாரத்தின் துவக்கமும் தொடர்புடையனவாக இருக்கும். அதாவது 6-ம் அதிகாரத்தில் 6 முத்திரைகள் உடைக்கப்பட்டு இந்த 8-ம் அதிகாரத்தில் 7-ம் முத்திரை உடைக்கப்படுதலோடு துவங்குகிறது. 8-ம் அதிகாரத்தின் முடிவின் தொடர்ச்சியை 9-ம் அதிகாரத்தில் காணலாம். எப்படியெனில் தூதர்கள் எக்காளம் ஊதுகிற காரியங்களில் நான்காம் தூதன் எக்காளம் ஊதும் வரை 8-ம் அதிகாரத்தில் விளக்கப்பட்டு, 9-ம் அதிகாரத்தின் முதல் வசனம் ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதுதலோடு துவங்குகிறது. அப்படியாகவே 10-ம் அதிகாரம் **பின்பு** என்று துவங்குவது, 9-ம் அதிகாரத்தின் முடிவும், 10-ம் அதிகாரத்தின் துவக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன எனக் காட்டுகின்றது. மேலும் 11-ம் அதிகாரமும் **பின்பு** என்று துவங்குவது, 10-ம் அதிகாரத்தின் முடிவும் 11-ம் அதிகாரத்தின் துவக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன எனக் காட்டுகின்றது.

12-ம் அதிகாரத்தை நாம் பார்க்கும் போது ஒரு புதிய காரியம் ஆரம்பமாகின்றது. அதின் தொடர்ச்சியாக 13-ம் அதிகாரத்தின் முதல் வசனம் **பின்பு** என்றும், அதின் தொடர்ச்சியாக 14-ம் அதிகாரத்தின் முதல் வசனம் **பின்பு** என்றும், அதின் தொடர்ச்சியாக 15-ம் அதிகாரத்தின் முதல் வசனம் **பின்பு** என்றும் துவங்குகிறதையும் காண இயலும். அதின் தொடர்ச்சியாக 16-ம் அதிகாரத்தின் முதல் வசனம் **அப்பொழுது** எனத் துவங்குகிறது. 17-ம் அதிகாரம் முதல் வேறு காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது 6 முதல் 11 வரை ஒரு தொடராகவும், 12 முதல் 16 வரை ஒரு தொடராகவும்

இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள இயலும். அதற்குப் பிறகு வரும் அதிகாரங்களில் வேறு காரியங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

வெளிப்படுத்தின விசேஷத்தின் *6* முதல் *11*-ம் அதிகாரங்கள் மற்றும் *12* முதல் *18*-ம் அதிகாரங்கள் வரையிலான சம்பவங்களைக் குறித்தும், அவைகளுக் கிடையேயான தொடர்புகளைக் குறித்தும், இச்சிறு புத்தகத்தில் நம்மால் விளக்க இயலாது. கர்த்தருக்குச் சித்தமானால், ஆண்டவரின் வருகை தாமதிக்குமானால் வருங்காலங்களில் இவ்வதிகாரங்களின் விளக்கங்களைக் காண்போம். இப்போது *13*-ம் அதிகாரத்தின் விளக்கத்திற்கான முதல் அத்தியாயத்திற்குள் கடந்து செல்வோம்.

இவ்வதிகாரத்தின் முதல் வசனத்தின் முதல் வார்த்தையான '**பின்பு**' என்பது, அதற்கு முன்பதாக அநேக சம்பவங்கள் நடந்திருப்பதைக் காட்டுகின்றதாக மேலே பார்த்தோம். அந்த வார்த்தையை அடுத்து தொடராக அமைந்திருப்பது :

பின்பு நான் '***கடற்கரை மணலின்***' மேல் நின்றேன்

இந்த கடற்கரை மணல் என்றால் என்ன? பொதுவாக இந்த கடற்கரை மணல் என்பதைக் குறித்து அநேக வியாக்கியானங்கள் தரப்பட்டாலும் இந்த கடற்கரை மணலுக்கு உண்மையிலேயே பரிசுத்த வேதம் தருகின்ற வியாக்கியானம் என்ன? இதை அறிய வேண்டுமானால் ஆதியாகமம் புத்தகத்திற்கு பக்கங்களைத் திருப்ப வேண்டும்.

**ஆதியாகமம் *15:5* - அவர் அவனை வெளியே அழைத்து; நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்.**

இந்த வசனத்தில் தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிக்கையில், அவன் சந்ததி வானத்தின் நட்சத்திரங்களைப் போல இருக்கும் என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

**ஆதியாகமம் *22:17* - நான் உன் சந்ததியை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும்...**

இந்த வசனத்தில் ஆபிரகாமின் சந்ததிக்கு ஆசீர்வாதத்தைக் கூறுகையில் தேவன் முந்தைய வசனத்தில் நாம் பார்த்த வானத்தின் நட்சத்திரங்களைப் போல என்னும் வார்த்தையுடன் நிறுத்தாமல், கடற்கரை மணலைப் போல என்னும் வார்த்தையையும் சேர்த்து பயன்படுத்துகிறார்.

தேவன் ஏன் இந்த கடற்கரை மணலைப் போல என்ற வார்த்தையை சேர்க்க வேண்டும்? அநேக தேவ ஊழியர்கள் கூட வாக்குத்தத்தங்களைக் கொடுக்கும் போது இந்த வேத வசனத்தை வைத்துக் கொண்டு கர்த்தர் இவ்விதமாய் உங்களை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் இரட்டைத்தனையாய் ஆசீர்வதிப்பார் என்று பிரசங்கிப்பதைக் கேட்டிருக்கிறோம். உண்மையிலேயே அது இரண்டு மடங்கான ஆசீர்வாதம் தானா என்று சற்று கூர்ந்து கவனிப்போமானால் ஆதியாகமம் 15-ம் அதிகாரத்தில் வானத்தின் நட்சத்திரங்களைப் போல என்று கூறி ஆசீர்வதித்த ஆண்டவர் ஆதியாகமம் 22-ம் அதிகாரத்தில் கடற்கரை மணலைப் போல என்று கூறுவதன் காரணத்தை, ஆதியாகமம் 16 மற்றும் 17-ம் அதிகாரங்களில் காணலாம்.

ஆதியாகமம் 16-ம் அதிகாரத்திலே ஆகார் வருகிறார். அவர் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கிறார். அந்தப் பிள்ளையை கர்த்தர் ஆசீர்வதித்ததாக எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. காரணம், ஆகாரினிடத்தில் கர்த்தர் பேசும் போது சற்று கவனித்துப் பார்ப்போமானால் ***"அவன் துஷ்ட மனுஷனாய் இருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லோருக்கும் எதிராகக் குடியிருப்பான்"*** என்று 12-ம் வசனத்தில் கூறுகின்றார். கவனிக்க, "அவனை ஆசீர்வதிப்பேன்" என்ற வார்த்தையை ஆண்டவர் கூறவே இல்லை. ஆனால் 17-ம் அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமோடு பேசிக்கொண்டிருக்கிற சமயத்திலே, 18-ம் வசனத்திலே ஆபிரகாம் இஸ்மவேலுக்காக ஒரு விண்ணப்பத்தை ஏறெடுக்கிறார். அவ்வாறு அவர் விண்ணப்பம் செய்தபடியினாலே, அவருக்கு மறுமொழியாக அதே அதிகாரத்தின் 20-ம் வசனத்தில் கர்த்தர் அவரை நோக்கி, ***"நீ இஸ்மவேலுக்காகவும் விண்ணப்பம் செய்தபடியினாலே"*** என்று சொல்லி அவனையும் நான் ஆசீர்வதிப்பேன் என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார். இப்போதுதான் ஆசீர்வாதம் இஸ்மவேலுக்கு வருகிறது. இதன் பிறகுதான் ஆதி - 22:17-ல், ***"வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை***

***மணலைப் போலவும் உன்னைப் பெருகப் பண்ணுவேன்"*** என்று ஆசீர்வதிக்கிறார். இங்கே வானத்து நட்சத்திரங்கள் என்று இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்தும், கடற்கரை மணல் என்று இஸ்மவேல் சந்ததியைக் குறித்தும் சொல்லப்படுகிறது.

வேதத்தில் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து எங்கெல்லாம் சொல்லப்படுகிறதோ, அங்கெல்லாம் அவர்களை வானத்து நட்சத்திரங்களைப் போல என்று குறிப்பிடுவதைப் பார்க்க இயலும்.

"**உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப் பண்ணினார்; இதோ, இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப் போலத் திரளாயிருக்கிறீர்கள்**" என்று உபாகமம் - *1:10*, இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து கூறுகின்றது. இந்த வசனத்தில் கடற்கரை மணல் என்ற வார்த்தை இல்லாததைக் கவனிக்கவும்.

**உபாகமம் *10:22* - உன் பிதாக்கள் எழுபது பேராய் எகிப்துக்குப் போனார்கள்; இப்பொழுதோ உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப் போலாக்கினார்.**

இங்கேயும் வானத்தின் நட்சத்திரங்களைப் போல என்று தான் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து சொல்லப்படுகிறதே தவிர கடற்கரை மணல் என்று குறிப்பிடப்படவில்லை. இது எதைக் குறிக்கிறது என்றால் வானத்திற்குரிய சந்ததி அதாவது உண்மையிலேயே ஆசீர்வாதத்திற்குரிய சந்ததி இஸ்ரவேல் சந்ததியாகவும், பூமிக்குரிய சந்ததியான கடற்கரை மணலைப் போன்ற சந்ததி இஸ்மவேல் சந்ததி எனவும் வேதம் பிரித்துரைக்கின்றது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் வைத்திருந்த ஸ்தானம் வானத்தின் நட்சத்திரங்களைப் போல மேலானது என்பதற்கு இன்னும் அநேக ஆதாரங்கள் வேதத்தில் உண்டு. *(உதாரணமாக ஆதி - 26:5, யாத் - 32:13, நெகே - 9:23 ஆகியன).*

இஸ்ரவேலர்கள் கர்த்தரை விட்டு தூரம் போய், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதை செய்தவுடனே, ஓசியா *1:10*-ல், ***"என்றாலும், இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும், எண்ணவும் கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும்"*** என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்படியென்றால் இஸ்ரவேல் ஜனங்களின் வானத்து நட்சத்திரம் என்ற ஸ்தானம் பறிக்கப்பட்டு அதற்குப் பதிலாக கடற்கரை மணலைப் போல மாறிவிட்டார்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் 13-ம் அதிகாரத்தின் கடற்கரை மணல் என்பது யாரைக் குறிக்கின்றது? அதை அறிந்துகொள்ள இவ்வசனம் நிறைவேறுகிற காலக்கட்டத்தை கவனிக்க வேண்டும். இந்த 13-ம் அதிகாரத்தின் முதல் வசனம், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலமான, 7 ஆண்டுகால உபத்திரவகாலத்தில் தான் நிறைவேறுகிறது. அந்த நாளிலே தீர்க்கதரிசியானவர், ***"பின்பு, நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன்"*** என்று கூறுகின்றார்.

ஆகவே இந்த கடற்கரை மணல் என்பது அந்தி கிறிஸ்துவின் ஆட்சி துவங்குவதற்கு முன்பு நிகழ்கின்ற சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கடையாமல், கைவிடப்பட்டு, அந்தி கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் பூமியில் இருக்கப் போகின்ற புறஜாதி மக்களையும், இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாத இஸ்ரவேல் ஜனங்களையும் குறிக்கின்றது. இந்த வருகையில் கைவிடப்பட்ட கடற்கரை மணலின் கூட்டத்தில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட போதிலும், முடிவு பரியந்தம் இரட்சிப்பைக் காத்துக் கொள்ளாமலும், வருகைக்கு ஆயத்தமில்லாமல், நிர்விசாரமாய் வாழ்ந்த விசுவாசிகளும், ஊழியர்களும் உள்ளடங்குவர். இந்த கைவிடப்பட்ட மக்கள் கூட்டத்தின் மத்தியில்தான் யோவான் தீர்க்கதரிசி நிற்பதாகவும், அவர் ஒரு மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வருவதைக் காண்பதாகவும் இவ்வசனம் கூறுகின்றது.

**“ஒரு தீர்க்கதரிசி தீர்க்கதரிசனத்தை உரைக்கும் போது எந்த இடத்தில் நிற்கிறார் என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.”**

இவ்விடத்திலே நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால் தேவன் ஒரு தீர்க்கதரிசியின் மூலமாக ஒரு தீர்க்கதரிசனத்தை உரைக்கும் போது, எந்த இடத்தில் தேவன் தீர்க்கதரிசியை நிற்கச் செய்து தீர்க்கதரிசனத்தை உரைக்கிறார்

என்பது மிகவும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால் எந்த இடத்தைக் குறித்து அல்லது யாரைக் குறித்து தேவன் தீர்க்கதரிசனத்தை உரைக்கிறாரோ, அங்கே, அந்த இடத்திலே, அவர்கள் மத்தியிலே தீர்க்கதரிசியானவர் நேரடியாகவோ அல்லது ஆவிக்குள்ளாகவோ கண்டிப்பாக இருக்க வேண்டும். உதாரணமாக வெளிப்படுத்தின விசேஷம் - *17:3*-ல் யோவான் தீர்க்கதரிசி தன்னை தூதனானவன் "ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான்" என்று சொல்லுகிறார். அதே போல எசேக்கியேல் தீர்க்கதரிசி "கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி...."*(எசே – 37:1)* தீர்க்கதரிசனத்தை உரைக்கச் செய்ததாக கூறுகிறார்.

மேலும் யோனா நினிவேயின் மக்களுக்கு தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டுமானால் அவர் நினிவேயில் இருந்து தான் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டுமேயொழிய தர்ஷீசில் இருந்து சொல்லக் கூடாது. ஆகவே இந்த முதல் வசனத்தில் சபை எடுத்துக் கொள்ளப்படுதலில் கைவிடப்பட்ட ஜனங்களின் அதாவது கடற்கரை **மணலி**ன் மத்தியில் தீர்க்கதரிசி நிற்பதாகவும், அவர்களை நோக்கி சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருவதாகவும் வேதம் விவரிக்கின்றது. இந்த வசனத்தில் சமுத்திரம் என்றால் என்ன என்றும், மிருகம் என்றால் என்ன என்றும் பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

*வெளி 13:1 - பின்பு, நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது **சமுத்திரத்திலிருந்து** ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்*

சமுத்திரம் என்றால் என்ன? இதனை அறிந்து கொள்ள முதன் முதலாக தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கின உண்மை வரலாற்றை விவரிக்கின்ற ஆதியாகமம் புத்தகத்திற்கு செல்ல வேண்டும்.

**ஆதியாகமம் *1:9,10* - பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று, தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பேரிட்டார்....**

இவ்வசனத்தின் படி சமுத்திரம் என்றால் தண்ணீர்கள் நிறைந்த இடம் என்று

*பார்க்கிறோம். சரி, அப்படியென்றால் தண்ணீர் என்பது எதைக் குறிக்கிறது? விடை காண வெளிப்படுத்தின விசேஷத்திற்குச் செல்வோம்.*

**வெளிப்படுத்தின விசேஷம்** *17:15* **- "பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமாம்."**

*மேற்கண்ட வசனங்களின் படி சமுத்திரம் என்பது தண்ணீர்கள் சேர்ந்த இடம் மற்றும் தண்ணீர்கள் என்பது பல பாஷைகளுடைய, பல பிரிவுக்காரர்களின் கூட்டத்தைக் குறிக்கின்றது. ஆகவே சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருதல் என்பது பற்பல பாஷைகளுடைய, பற்பல பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கூட்டங்களின் மத்தியில் இருந்து ஒரு மிருகம் எழும்பி வருகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.*

*அடுத்ததாக வசனத்தின் அடுத்த பகுதியினைப் பார்ப்போம்.*

**வெளி** *13:1* **- அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு** ***மிருகம்*** **எழும்பி வரக் கண்டேன்.**

*இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள மிருகம் என்றால் என்ன? இது ஒரு மிக முக்கியமான பகுதி. இந்த மிருகம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் கூற முற்பட்டு அநேகர் தவறிப் போயிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர் துணையோடு கூட இந்த வேத பகுதியை நாம் சற்று ஆராய்வோம்.*

*பழைய ஏற்பாட்டில் தானியேல் புத்தகத்தில் நான்கு மிருகங்களைக் குறித்து கொடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, நாம் தியானித்துக் கொண்டிருக்கிற இந்த வெளிப்படுத்தின விசேஷத்திலேயே நான்கு மிருகங்களைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது.*

**முதலாம் மிருகம் : வெளிப்படுத்தின விசேஷம் -** *12:3* **அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.**

**இரண்டாம் மிருகம் : வெளிப்படுத்தின விசேஷம் -** *13:1* **பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி**

வரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

மூன்றாம் மிருகம் : வெளிப்படுத்தின விசேஷம் *13:11* - பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது.

நான்காம் மிருகம் : வெளிப்படுத்தின விசேஷம் *17:8* - நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப் போகிறது. உலகத்தோற்ற முதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

இந்த நான்கு மிருகங்களும் ஒன்று தானா?, இந்த நான்கு மிருகங்களின் வாயிலாக வேதம் நமக்கு ஒரே காரியத்தைத் தான் சொல்ல முற்படுகிறதா? என்றால் இல்லை. இந்த நான்கு மிருகங்களும் வெவ்வேறானவை. இவை ஒவ்வொன்றின் மூலமாகவும் வேதம் தனித்தனியாக அநேக காரியங்களைக் கற்பிக்கின்றது.

அவைகளில் ஒன்று தான், நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிற வெளி – *13:1*ன் படி சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகின்ற மிருகம். இதைக் குறித்து விவரமாய் அறிய தானியேல் புத்தகத்திற்கு செல்ல வேண்டும். ஏனென்றால் தானியேல் புத்தகமே வெளிப்படுத்தின விசேஷத்தின் துணை நூல் ஆகும். வெளி – *13:1*-ல் சொல்லப்பட்டுள்ள மிருகத்திற்கு ஒப்பாக தானியேல் புத்தகத்தில் ஏழாம் அதிகாரத்தில் சமுத்திரத்திலிருந்து எழும்பி வரும் நான்கு மிருகங்களைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

> **“ தானியேல் புத்தகமே வெளிப்படுத்தின விசேஷத்தின் துணை நூலாகும். ”**

**தானியேல் *7:2,3* - தானியேல் சொன்னது: இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.**

இந்த வசனங்கள் சமுத்திரத்திலிருந்து நான்கு மிருகங்கள் எழும்பி வருவதைக் குறிப்பிடுகின்றன. இவற்றில் மிருகம் என்பது எதைக் குறிக்கின்றது என்பதை இதே அதிகாரத்தின் *23*-ம் வசனம் மிகத் தெளிவாக் குறிப்பிடுகின்றது.

**அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நான்காம் ராஜ்யமாம்.**

மேற்கண்ட வசனங்களிலிருந்து ஒரு மிருகம் என்பது ஒரு இராஜ்யத்தை உணர்த்துவதை அறியலாம். இராஜ்யம் என்றால் அரசாங்கம்.

கடற்கரை மணல் – கைவிடப்பட்ட மக்கள்

சமுத்திரம் – பல ஜனக் கூட்டமாகிய மக்கள் திரள்

*(People, multitudes, nations and tongues)*

மிருகம் – அரசாங்கம் *(Government)*

ஆகவே பின்பு நான் கடற்கரை மணலின் மேலே நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன் என்ற வசனத்தின் முதல் பகுதி வெளிப்படுத்தும் காரியமாவது :

பின்பு நான், சபை எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கடையாமல் கைவிடப்பட்டுப் போன மக்கள்திரளின் மத்தியில் நின்றேன். அப்பொழுது பற்பல மொழி பேசும், பல பிரிவுகளைக் கொண்ட, பலதரப்பட்ட மக்கள் கூட்டங்களின் மத்தியில் இருந்து ஒரு அரசாங்கம் எழும்பி வரக் கண்டேன். இந்த இராஜ்யத்தின் அதாவது அரசாங்கத்தின் பெயர், முத்திரை மற்றும் இந்த அரசாங்கத்தின் இலக்கம் ஆகிய காரியங்களே வெளிப்படுத்தின விசேஷம் *13*-ம் அதிகாரம் முழுவதும் விவரிக்கப்பட்டுள்ளது. அவற்றைப் பற்றி விரிவாக இனி வரும் அத்தியாயங்களிலே பார்ப்போம்



# 2

*வெளி 13:1 – அதற்கு (மிருகத்திற்கு)* ***ஏழு தலைகள்*** *இருந்தன.*

இவ்வசனத்தின் மிருகம் என்றால் மக்கள்திரளின் மத்தியில் இருந்து எழும்பி வருகின்ற ஒரு இராஜ்யத்தை அதாவது அரசாங்கத்தைக் குறிப்பதாக கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். இப்போது அதற்கு ஏழு தலைகள் இருந்ததாக வேதம் சொல்கின்றது.


*இந்த ஏழு தலைகள் என்பது என்ன?*

வெளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரத்தில் 9 மற்றும் 10 வசனங்களில் இதற்கான விளக்கம் தரப்பட்டுள்ளது. **ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம். அவைகள் ஏழு இராஜாக்களாம்.**

இவ்விரு வசனங்களின் மூலமாக ஏழு தலைகள் என்பதற்கு ஏழு மலைகள் என்று ஒரு அர்த்தமும், ஏழு இராஜாக்கள் என்று மற்றுமோர் அர்த்தமும் உள்ளதை அறிய முடிகின்றது. ஏழு தலைகளைப் பற்றிய விளக்கத்தைக் காணும் முன் ஒரு காரியத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. என்னவென்றால் வேதத்திலே குறிப்பாக வெளிப்படுத்தின விசேஷத்திலே ஒரு தரிசனத்திற்கு இரு வேறு அர்த்தங்கள் இருப்பதைக் காண இயலும். உதாரணமாக வெளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரத்தில் ஒரு ஸ்திரீயைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. இதே அதிகாரத்தின் 18-ம் வசனம் இந்த ஸ்திரீயை ஒரு நகரம் என்று குறிப்பிடுகிறது. அதே வேளையில் ஸ்திரீ என்பது ஒரு சபையையும் குறிக்கும் (எபேசியர் 5:23). இதைப் போல ஒரே காரியத்திற்கு இரு வேறு அர்த்தங்களை வேதத்தில் அநேக இடங்களில் காண இயலும். இது கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் விசேஷ அம்சமாகும். ஒரே தரிசனம், அதற்கு இரண்டு விளக்கங்கள். இப்போது நாம் பார்த்து கொண்டிருக்கின்ற ஏழு தலைகளுக்கு வருவோம். இதற்கும் கர்த்தர் இரு வேறு அர்த்தங்களைக் கொடுத்திருக்கிறார்.

> **“ஒரே தரிசனம், இரு வேறு அர்த்தங்கள் - இது கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் விசேஷமாகும்.”**

அதாவது “***அந்த ஏழு தலைகளும் ஏழு மலைகளாம். அவைகள் ஏழு ராஜாக்களாம்***” என்று வசனம் சொல்லுகிற படி ஏழு தலைகள் என்பது ஏழு மலைகளையும், அதே நேரத்தில் பூமியில் ஆளுகை செய்கின்ற ஏழு ராஜாக்களையும் உணர்த்துகின்றது.




ரோம் நகர அமைப்பு

சரி. நாம் இதன் முதல் பாகத்தை எடுத்துக் கொள்வோம். ஏழு தலைகள் என்பது ***ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.*** இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்த ஏழு மலைகளை அறிந்து கொள்ள வேண்டுமானால் வெளி *17*-ம் அதிகாரத்தில் இவ்வேழு மலைகளின் மேல் அமர்ந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ள ஸ்திரீயைப் பற்றின காரியங்களை அறிய வேண்டும்.

**வெளி *17 : 18* - நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான்.** இவ்வசனத்தில் உள்ள "***பண்ணுகிற***" என்ற வார்த்தை மிக முக்கியமானது. ஏனென்றால் வெளிப்படுத்தின விசேஷத்திலே இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற காலக்கட்டங்களைக் குறிக்கும் வார்த்தைகள் மிக முக்கியமானவை. உதாரணமாக வெளிப்பாடு - *17:8* ஒரு மிருகத்தைப் பற்றிக் கூறுகின்றது :

நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது *(இறந்த காலம்)*

இப்போது இல்லை *(நிகழ்காலம்)*

அது பாதாளத்திலிருந்து ஏறி வந்து நாசமடையப் போகிறது *(எதிர்காலம்)*

நான் சில விளக்க உரைகளைப் பார்த்த போது, இந்த காலங்களைக் கவனிக்காமல் தவற விட்டதினாலே, தவறான புரிதலோடு அநேக காரியங்கள் எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. மேலும் ஒரு உதாரணமாக வெளி – *17:10*-ம் வசனத்தைப் பார்ப்போம். **அவைகள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்க வேண்டும்.**

இவ்வசனம் குறிப்பிடுகிற ஒருவன் இருக்கிறான் என்பது நிகழ்காலத்தைக் குறிக்கின்றது, அதாவது இவ்வசனங்கள் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட கி.பி.90 முதல் கி.பி.96 வரையிலான காலகட்டத்தில் அதற்கு முன்பு விழுந்து போனவர்கள் ஐவர்; வர இருப்பது இன்னும் ஒருவன். ஆனால் அந்த ஐந்து இராஜாக்களை யோவான் காலத்திலேயே கடந்து போன காலமாகக் கருதாமல், இப்போது உள்ள கால கட்டத்தின் இராஜாக்களை அந்த ஐந்து இராஜாக்கள் எனத் தவறாகப் புரிந்து கொள்வோரும் உண்டு.

அதைப் போல 18-ம் வசனம் சொல்லுகிறது, நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் இராஜாக்கள் மேல் இராஜ்யபாரம் ***பண்ணுகிற*** மகா நகரமேயாம் என்று. இதில் பண்ணுகிற என்ற வார்த்தை, நிகழ்காலத்தை அதாவது இந்த வசனம் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட அந்த நாட்களைக் குறிக்கின்றது. தேவன் பத்மு தீவில் வைத்து யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொடுத்த காலகட்டம் கி.பி.96 முதல் கி.பி.100 வரை. மிகச் சரியாக, அந்த நாட்களில் பூமியில் ஆளுகை செய்து கொண்டிருந்த மகா நகரம் எதுவென்றால் ரோம் மகாநகரமேயாகும். இதைத்தான் 'இராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரம்' என்று வேதம் குறிப்பிடுகின்றது. இந்த ரோமப் பேரரசு இரண்டு இடங்களில் இருந்து ஆளுகை செய்தது.

முதலாவது அவர்கள் துருக்கி நாட்டில் உள்ள கான்ஸ்டாண்டின் நோபிளையும், இரண்டாவதாக வாடிகனின் தலைமையகமான ரோமில் இருந்தும் ஆளுகை செய்தார்கள். இந்த ரோமர்கள் துருக்கியில் உள்ள கான்ஸ்டாண்டின் நோபிளை கி.பி.1-ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே தலைநகரமாகக் கொண்டிருந்தனர். நான்காம் நூற்றாண்டிலே அவர்கள் இந்த ரோமிற்கு இடம் பெயர்ந்தார்கள். இதைக் குறித்த சரித்திரப் பூர்வமான காரியங்களை இந்நூலின் மற்றுமொரு அத்தியாயத்திலே பார்க்கலாம். இந்த ஏழு மலைகள் என்பது மிகச் சரியாக ரோம் நகரத்தைத் தான் குறிக்கின்றது. காரணம் உலகத்தில் ஏழு மலைகளின் மேல் ஒரு நகரம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றால் அது ரோம் நகரம் மட்டுமே. அவையாவன : 1.குயிரினல், 2.விமினல், 3.கேப்பிட்டலின், 4.அவன்டின், 5.பேலண்டின், 6.சீலியன், 7.எஸ்குயிலின். இந்த ஏழு மலைகளின் மேல் தான் ரோம் நகரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றளவும் ரோம் நகரம் இவ்வேழு மலைகளின்மேல் தான் நின்று கொண்டிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் *13*-ம் அதிகாரத்தின் முதல் வசனம் சொல்லுகிற *"**சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன். அதற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் இருந்தன**"* என்ற பகுதியில் ஏழு தலைகள் என்பது இந்த ரோம் நகரத்தைத் தான் குறிக்கின்றது. அதாவது கைவிடப்பட்ட மக்கள்திரளின் மத்தியில் இருந்து ஒரு ராஜ்யம் *(அரசாங்கம் – Government)* எழும்பி வரும் என்றும் அதற்கு ரோம் நகரம் தலைமைபீடமாக இருக்கும் என்றும் இந்த முதல் வசனம் விளக்குகின்றது. என்ன ஒரு பெரிய ஆச்சரியம் என்றால், இந்த வசனம் கொடுக்கப்பட்ட காலக்கட்டத்திலே ரோம சாம்ராஜ்யம் பூமியில் ஆளுகை செய்து கொண்டிருந்தாலும், ரோம் நகரம் அதன் தலைமைபீடமாக இல்லை. பத்மு தீவில் யோவானுக்கு இந்த வசனம் கொடுக்கப்பட்ட காலமாகிய கி.பி.*96* முதல் கி.பி.*100* வரையிலான காலத்தில், துருக்கியில் உள்ள கான்ஸ்டாண்டின் நோபிளைத் தான் ரோமர்கள் தலைமையகமாகக் கொண்டு ஆளுகை செய்தனர். இவர்கள் பின் நாட்களில் ரோமைத் தலைமையகமாகக் கொண்டு ஆளுகை செய்யப் போகின்றனர் என்பதனை ரோம் தலைமையகமாக மாறுவதற்கு ஏறக்குறைய *200* ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வசனங்களின் மூலம் வேதம் தீர்க்கதரிசனமாக, மிகத் துல்லியமாக முன்னுரைக்கின்றது. இதுவரையில் ஏழு தலைகள் என்பது ஏழு மலைகள் என்று வெளி – *17:9* குறிப்பிடுவதையும் அதற்கான விளக்கத்தையும் பார்த்தோம்.

அதே வேளையில் ஏழு மலைகள் உணர்த்துகின்ற மற்றுமோர் அர்த்தத்தையும் பார்ப்போம். **வெளி – *17:10* அவைகள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக் காலம் தரித்திருக்க வேண்டும்.**

இவ்வசனம் கூறுகின்ற விளக்கம் என்னவென்றால் இதுவரைக்கும் பூமியில் ஆளுகை செய்த, செய்ய இருக்கின்ற சாம்ராஜ்யங்கள் மொத்தம் ஏழு. அவையாவன :

*1.எகிப்திய சாம்ராஜ்யம் - கி.மு.1400 (Egyptian Empire)*

*2.அசீரிய சாம்ராஜ்யம் - கி.மு.1000 (Assyrian Empire)*

*3.பாபிலோனிய சாம்ராஜ்யம் - கி.மு.700 (Babylonian Empire)*

*4.மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் - கி.மு.538 (Medo-Persian Empire)*

*5.கிரேக்க சாம்ராஜ்யம் - கி.மு.333 (Greek Empire)*

இதனோடு ஐந்து சாம்ராஜ்யங்கள் முடிவடைந்தன. இதைத்தான் மேற்கண்ட வசனத்தில் ***ஐந்து பேர் விழுந்தார்கள்*** என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மேற்கண்ட வசனத்தின் தொடர்ச்சியாக ***ஒருவன் இருக்கிறான்*** என்று கூறப்பட்டுள்ளது. இது ஆறாவது சாம்ராஜ்யமான ரோம சாம்ராஜ்யத்தைக் *(Roman Empire)* குறிக்கின்றது. இது ஆளுகையைத் துவக்கிய காலம் கி.மு.64. யோவானுக்கு இவ்வசனம் கொடுக்கப்பட்ட நாட்களில் பூமியில் ஆளுகை செய்து கொண்டிருந்தது இந்த ரோமர்களே. இதை விளக்குவதற்குத்தான் ஆவியானவர் நிகழ்காலத்தைக் குறிக்கும் "இருக்கிறான்" என்ற வார்த்தையைக் குறிப்பிட்டிருக்கிறார். யோவான் காலத்தில் ஆளுகையில் இருந்த இந்த ரோம சாம்ராஜ்யம் கி.பி.538-ல் முடிவுக்கு வந்தது.


*7.ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் (பாப்பரசர் சாம்ராஜ்யம் – Papal Empire) – கி.பி.538*

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் கி.பி.538-ம் ஆண்டு பாப்பரசர் தலைமையில் 10 நாடுகளோடு கூட துவங்கிற்று. வசனத்தின் தொடர்ச்சியாக "***மற்றவன் இன்னும் வரவில்லை. வரும்போது அவன் கொஞ்ச காலம் தரித்திருக்க வேண்டும்***" என்று கூறப்படுவதும் இந்த பாப்பரசர் சாம்ராஜ்யத்தையே. இந்த ஏழு சாம்ராஜ்யங்கள்தான் அங்கே ஏழு தலைகளாக கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரையில் ஏழு தலைகள் என்ற வார்த்தை குறிப்பது ஏழு மலைகளின் நகரமாகிய ரோமையும், ஏழு சாம்ராஜ்யங்களையும் குறிப்பதைப் பார்த்தோம். முதல் சாம்ராஜ்யம் எகிப்தில் துவங்கி ஏழாம் சாம்ராஜ்யம் ரோம் நகரத்தை தலைமையகமாகக் கொண்டு அமைக்கப்பட்டது வரையிலான ஏழு சாம்ராஜ்யங்களுக்கும், ரோம் நகரத்திற்குமான தொடர்புகளையும் கண்டோம்.

வெளி – *13:1*-ல் கூறப்பட்டுள்ள மிருகத்திற்கு ஒப்பாக வெளிப்படுத்தின விசேஷம் - *17:3*, ஏழு தலைகளை உடைய சிவப்பு நிறமுள்ள ஒரு மிருகத்தை குறிப்பிடுகின்றது. அது மட்டுமல்லாது வெளிப்படுத்தின விசேஷம் - *12:3*, ஏழு தலைகளை உடைய சிவப்பு நிறமுள்ளதான ஒரு மிருகம் இருப்பதையும், அது ஒரு வலுசர்ப்பம் என்றும் குறிப்பிடுகின்றது.

நான் இந்த ஒப்புமையை இவ்விடத்திலே கொடுப்பதற்கு ஒரு காரணம் உண்டு. வெளிப்படுத்தின விசேஷம் யோவானுக்கு கொடுக்கப்பட்ட இந்த முதலாம் நூற்றாண்டில் தான் உலகமெங்கும் சுவிசேஷம் பரவத் தொடங்கினது. இன்றைக்கும் நீங்கள் கவனித்தால், ஒரு மிக முக்கியமான பொதுவான கருத்தை, காரியத்தை உலகத்தின் எல்லா பகுதிகளிலும் நாம் பார்க்க இயலும். அது என்னவென்றால் ஏழு தலைகள் உள்ள வலுசர்ப்ப வழிபாடு. உதாரணமாக இலங்கை தேசத்திற்குச் செல்வீர்களானால் அங்கே புத்த கோவில்களிலே இப்படிப்பட்ட ஏழு தலை பாம்பை மக்கள் வழிபடுவதைப் பார்க்க இயலும். நம் நாட்டிலும் அநேக பகுதிகளில் ஏழு தலை பாம்பை மக்கள் வழிபடுவதை நாம் அறிவோம்.

இப்போது அநேகருக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம். இப்போது நாம் பார்த்த ஏழு தலை பாம்பு என்பதும், வெளிப்படுத்தின விசேஷத்தின் *13*-ம் அதிகாரம் முதல் வசனத்தில் கூறப்பட்டுள்ள ஏழு தலைகளையும், பத்து கொம்புகளையுமுடைய மிருகம் என்பதும் ஒன்றுதானா என்றால் இல்லை. வெளி – *13:1* குறிப்பிடுவது இதுவரையில் உலகில் இல்லாத வேற்றுருவமான மிருகத்தை அதாவது ஒரு அரசாங்கத்தையே அன்றி பாம்பை அல்ல. இதைக் குறித்து வருகிற அத்தியாயங்களிலே விரிவாகக் காணலாம். அப்படியென்றால் இந்த ஏழு தலை சர்ப்ப வழிபாடு எப்படி உலகில் வந்திருக்கக் கூடும்?


ஏழு தலைப் பாம்புடன் புத்தர் சிலை

ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களின்படி, உலகில் கி.பி *3* மற்றும் கி. *4*-ம் நூற்றாண்டுகளில் இருந்துதான் இந்த ஏழு தலைகளைக் கொண்ட சர்ப்பத்தை மக்கள் வழிபடத் தொடங்கியுள்ளனர். அதற்கு முன்பு வரை பாம்பு வழிபாடு இருந்துவந்த போதிலும், ஏழு

தலைகள் உள்ள பாம்பு என்று உருவகப்படுத்தப்பட்டு, சிற்பங்களில் வடிக்கப்பட்டு வழிபாட்டிற்குரியதாக மாற்றப்பட்டது கி.பி.3 அல்லது கி.பி 4-ம் நூற்றாண்டுகளில் இருந்துதான். இதற்கு ஒரு உதாரணமாக இலங்கையில் உள்ள புத்த கோவில்களில் காணப்படுகின்ற ஏழு தலை பாம்புச் சிற்பங்கள் கி.பி.5-ம் நூற்றாண்டைச் சார்ந்தவையே என்று இலங்கையில் அனுராதாபுரத்தில் உள்ள தொல்பொருள் ஆய்வு மையத்தில் உள்ள குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. ஆகவே இந்த ஏழு தலை பாம்பு வழிபாட்டிற்கான அத்தனை ஆதாரங்களும், சுவிசேஷம் பரவத் தொடங்கிய, வெளிப்படுத்தின விசேஷம் கொடுக்கப்பட்ட முதலாம் நூற்றாண்டிற்கு பிந்தைய காலத்தையே சேர்ந்தவை என்பதால் ஒருவேளை இவைகள் நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் இருந்துதான் எடுக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற ஐயமும் தோன்றுகின்றது.

> **“கி.பி 3 மற்றும் 4ம் நூற்றாண்டுகளில் இருந்து தான் ஏழு தலைகளைக் கொண்ட சர்ப்பத்தை மக்கள் வழிபட்டனர்”**



# 3

வெளி – *13 : 1*

**பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் இருந்தன.**

***மிருகங்கள்***

இதற்கு முந்தைய அத்தியாயங்களிலேயே மிருகம் என்பது ஒரு அரசாங்கத்தைக் குறிப்பதையும், ஏழு தலைகள் என்பது மகா நகரமாகிய ரோம்—அவ்வரசாங்கத்திற்குத் தலைமையாக இருப்பதையும் விளக்கமாகக் கண்டோம்.

அடுத்தபடியாக நாம் இந்த மிருகத்திற்கு உள்ளதாக கூறப்பட்டுள்ள *10* கொம்புகளைக் குறித்துப் பார்க்கப் போகிறோம். இந்த *10* கொம்புகள் என்றால் என்ன? வெளிப்படுத்தின விசேஷம் *17*-ம் அதிகாரம் *12*–ம் வசனம் இவ்விதமாய் குறிப்பிடுகிறது.

**நீ கண்ட பத்து கொம்புகளும் *10* ராஜாக்களாம்** இவ்வசனத்தின் படி அம்மிருகத்தின் பத்து கொம்புகள் என்பது கடைசி காலத்தில் எழும்பவிருக்கும் அரசாங்கத்தில், ஆளுகை செய்யும் பத்து ராஜாக்களைக் குறிக்கின்றது. இந்த ராஜாக்கள் என்னென்ன காரியங்களைச் செய்வார்கள் என்பதை வெளிப்படுத்தின விசேஷம் - *17:12,13* வசனங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

**இவர்கள் மிருகத்துடனே ஒரு மணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.**

இந்த பத்து ராஜாக்களைக் குறித்து அறிந்து கொள்ளும் முன்னர் ஒரு காரியத்தை நாம் நினைவிற் கொள்வோம். என்னவென்றால் வெளிப்படுத்தின விசேஷம் *13*-ம் அதிகாரம் அந்தி கிறிஸ்துவின் அரசாங்கத்தை அதாவது சாம்ராஜ்யத்தைக் குறித்தும், *17*-ம் அதிகாரம் அந்திகிறிஸ்துவைக் குறித்தும் விவரிக்கின்றது. இதற்குரிய விளக்கத்தை கர்த்தருக்குச் சித்தமானால் பின்னொரு சமயம் மற்றுமோர் புத்தகத்தில் காணலாம்.

இந்த பத்து ராஜாக்களும் *17*-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிருகமாகிய அந்திகிறிஸ்துவிற்கும், *13*-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்திகிறிஸ்துவின் அரசாங்கத்திற்கும் துணையாக நிற்பதை மேற்கண்ட வசனங்கள் விவரிக்கின்றன.

இவ்வசனங்களை இன்னும் சற்று ஆழமாக ஆராய்வோம். யோவானுக்கு இவ்வசனங்கள் கி.பி.*96* முதல் கி.பி.*100* வரையிலான காலத்தில் கொடுக்கப்பட்டன. வெளி – *17:12* "இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை" என்று கூறுகின்றது.

அப்படியென்றால் அந்திகிறிஸ்துவிற்கு உறுதுணையாய் நிற்கும் இந்த பத்து ராஜாக்கள் எப்போது வருவார்கள்? இவர்கள் கடைசிநாட்களில் ஆளுகைக்கு வருவார்கள் என்று வேதம் கூறுகின்றது. தானியேல் - *7:7,8* வசனங்களிலே இந்த பத்து கொம்புகளைக் குறித்து, அதாவது பத்து ராஜாக்களைக் குறித்து முன்னுரைக்கப்பட்டுள்ளது. இவர்கள் காலத்திலே தான், இயேசு கிறிஸ்துவின் அரசாட்சி பூமிக்கு வருவதாக தானியேல் புத்தகம் *2*-ம் அதிகாரம் *44*-ம் வசனம் கூறுகின்றது. அப்படியானால் இந்த பத்து ராஜாக்கள் இயேசு கிறிஸ்துவின் வருகையை ஒட்டியதான கடைசி காலத்தில் வர வேண்டிய ராஜாக்கள்.

இந்த பத்து ராஜாக்களும் யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் கொடுக்கப்பட்ட காலத்தில் அதாவது கி.பி.*96* முதல் கி.பி.*100* வரையிலான காலக்கட்டத்தில் ராஜ்யபாரம் பெறவில்லை. மேற்கண்ட விளக்கத்தின் படி இந்த பத்து ராஜாக்களும் கடைசி நாட்களில் எழும்பி ஆளுகைக்கு வந்து ராஜ்யபாரத்தைப் பெற்று, வெளி – *17:13*-ன் படி தங்களுடைய வல்லமையையும், அதிகாரத்தையும் *17*-ம் அதிகாரத்தின் மிருகமாகிய அந்திகிறிஸ்த்துவிற்கு கொடுப்பார்கள். இப்படியாக அந்திகிறிஸ்துவிடம் தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் ஒப்படைப்பதற்கு முன்பாக சில காலம் இவர்களும் அந்திகிறிஸ்வோடு கூட ராஜாக்கள் போல சரிசமமாக அதிகாரம் பெற்றுக் கொள்கிறார்கள். அதற்குப் பிறகு தங்கள் காரியங்களை எல்லாம் அந்திகிறிஸ்துவிடம் ஒப்படைக்கிறார்கள்.

இந்த பத்து ராஜாக்கள் தான் அந்திகிறிஸ்துவிற்கு வழியை ஆயத்தம் பண்ணக் கூடியவர்கள். இவர்கள் தான் அவனுக்கு வல்லமையையும், அதிகாரத்தையும் கொடுக்கக் கூடியவர்கள். இதைப் புரிந்து கொள்வதற்கு வசதியாக ஒரு ஒப்புமையைக் காண்போம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருவதற்கு முன்பு, எப்படி யோவான் ஸ்நானகன் வந்து வழியை ஆயத்தப்படுத்தி, எல்லாவற்றையும் தயார் செய்த பின்பு இயேசு கிறிஸ்து வெளிப்பட்டாரோ, அதைப்போல இந்த பத்து ராஜாக்களும் கடைசி நாட்களில் வர இருக்கும் கடைசி ராஜாவாகிய அந்தி கிறிஸ்து வருவதற்கு முன்பாக வந்து அவனுக்கு வழியை ஆயத்தப்படுத்தி, அவனுக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் தயார் செய்து நிறுத்துவார்கள்.

அவ்வாறு ஆயத்தம் பண்ணின பின்பு தாங்கள் பூமியில் பெற்றுக்கொண்ட வல்லமையையும், அதிகாரத்தையும் அவன் கையில் ஒப்படைப்பார்கள். இன்னும்

சொல்லப்போனால் அந்திகிறிஸ்துவிற்கான முழு அதிகாரத்தையுமே இவர்கள் தான் பெற்றுக் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். அதோடு கூட மாத்திரமல்ல. இந்த பத்து கொம்புகளைக் குறித்து மேலும் வெளி – *17:16* கீழ்கண்ட விதமாக கூறுகின்றது.

**நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக் கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்.**

வெளிப்படுத்தின விசேஷம் *17*-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்திரீ என்பது ஏழு தலைகளின் மேல் அமைக்கப்பட்டுள்ள நகரமாகிய ரோம் நகரத்தைக் குறிக்கும் என முந்தைய அத்தியாயங்களிலே பார்த்தோம். மேற்கண்ட வசனம் விளக்குவது என்னவென்றால் இந்த பத்து ராஜாக்களானவர்கள் கடைசியாக ரோம் நகரத்தை அழிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். கடைசி கால சரித்திரத்திலே இந்த பத்து ராஜாக்களின் பங்கு மிகவும் முக்கியமானது. அதனோடு கூட இவர்களது உதவி அந்திகிறிஸ்துவிற்கு அதிகமாகத் தேவைப்படும். அந்திகிறிஸ்துவானவன் ராஜாவாக மாறுவதற்கு இவர்கள்தான் தேவையான எல்லாக் காரியங்களையும், ஆயத்தங்களையும் செய்வார்கள். இவை எல்லாவற்றையும் செய்துவிட்டு, கடைசியாக ரோம் நகரத்தை முற்றிலும் அழிக்கவும் செய்வார்கள் இந்த பத்து ராஜாக்கள்.

இதுவரையில் வெளி – *13:1* குறிப்பிடுகின்ற பத்து கொம்புகள் என்பது பத்து ராஜாக்களைக் குறிக்கின்றது என்றும் அவர்கள் கடைசி நாட்களில் எழும்பி என்னென்ன காரியங்களைச் செய்வார்கள் என்றும் கண்டோம். இவ்வசனத்தின் தொடர்ச்சியைப் பார்ப்போம்.

**அதின் கொம்புகளின்மேல் *பத்து முடிகளும்,* அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.** இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள முடி என்பது என்ன? முடி என்றால் ஆளுகையைக் குறிக்கும். உதாரணமாக பொன் முடி என்றால் பொற்கிரீடம் என்று பொருள், முடிசூட்டு விழா என்றால் ஒருவரை ராஜாவாக ஏற்படுத்தி, அதற்குரிய கிரீடத்தை அவர் தலையில் வைக்கும் விழா என்று பொருள். மேற்கண்ட வசனத்தில் பத்து கொம்புகளின் மேல் பத்து முடிகள் *(10 Crowns)* என்பது அந்திகிறிஸ்துவிற்கு உறுதுணையாய் நிற்கும் பத்து ராஜாக்களும் அந்திகிறிஸ்துவோடு கூட ராஜாவாக ஆளுகை செய்வதை விளக்குகின்றது. இதைத்தான் வெளி – *17:12*

"***இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக் கொள்கிறார்கள்***" என்று குறிப்பிடுகின்றது. பத்து ராஜாக்களின் இந்த ஆளுகையைத்தான் பத்து கொம்புகளின் மேல் பத்து முடிகள் என்று வெளி – *13:1* விளக்குகின்றது.

இவ்வசனத்தின் தொடர்ச்சியாக, "***அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன***" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தூஷணமான நாமம் என்றால் என்ன? அதை அறிவதற்கு முன் தேவ தூஷணம் என்றால் என்ன என்று அறிந்து கொள்வோம். மத்தேயு *9*-ம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஒரு திமிர்வாதக்காரனைக் கொண்டு வருகிறார்கள். இயேசு கிறிஸ்து அவனை சுகமாக்குவதற்கு முன்பாக, மகனே, திடன் கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று கூறுகின்றார்.

பாவங்களை மன்னிக்க இயேசு கிறிஸ்துவிற்கு சகல அதிகாரமும் இருந்தபோதிலும் அதனை உணராத வேதபாரகரில் சிலர் இயேசு கிறிஸ்துவை தேவதூஷணம் சொல்லுகிறார் என்று உள்ளத்தில் நினைக்கின்றனர். அதாவது அவர்களின் எண்ணங்களின் படி, இயேசு கிறிஸ்து தான் ஒரு மனிதனாயிருக்க மற்றொரு மனிதனுடைய பாவங்களை மன்னிப்பதாக கூறுவதால் அவர் தேவதூஷணம் சொல்லுகிறார் என்று எண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தான் தேவனானபடியினாலே பூமியிலே பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டென்று மறுமொழியாக அவர்கள் எண்ணங்களுக்கு பதிலளிக்கிறார்.

> **"பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் எந்த ஒரு மனிதனுக்கும் இல்லை, அது தேவனுக்கு மட்டுமே உண்டு"**

இந்த சத்தியத்திற்கு மாறாக இன்றைக்கும் ஒரு சில கிறிஸ்தவ பிரிவுகளிலே மக்கள் ஒரு மனிதனிடத்திற்குச் சென்று பாவ அறிக்கை செய்வதையும், அதன் பின்னர் அவர் அறிக்கை செய்தவருக்கு பாவ மன்னிப்பைத் தருவதையும் காண

முடிகிறது. ஆனால் உண்மையாகவே மனிதருடைய பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் எந்தவொரு மனிதனுக்கும் இல்லை. அது தேவனுக்கு மட்டுமே உண்டு.

அப்படியென்றால் எந்தவொரு மனிதனாகிலும் உன் பாவங்களை மன்னிக்கிறேன் என்றும் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றும் சொல்வாரேயானால் அதுவே தேவதூஷணமாகும். ஆனால் இவற்றை கைக்கொண்டு வரும் பிரிவினர் தங்களுக்கு ஆதாரமாகக் கூறுவது, யோவான்ஸ்நானனிடம் மக்கள் சென்று, பாவ அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்ற நிகழ்வையே. ஆனால் நாம் நன்றாக கவனிப்போமேயானால் மத்தேயு *3:6* மற்றும் மாற்கு *1:5* ஆகிய இரு வேதப்பகுதிகளுமே குறிப்பிடுவதாவது, ***"யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்."*** இவ்வசனத்தின் பொருள் என்னவென்றால் மக்கள் யாவரும் யோவான்ஸ்நானன் இருக்கும் இடத்திற்குச் சென்றனர், அவரவர் தங்கள் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டனர், பின்பு யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றனர் என்பதேயாகும்.

இப்போது நாம் ஒரு திருச்சபைக்குச் சென்று நம்முடைய பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிடுகிறோம். தேவனிடத்தில் மனந்திரும்பி மன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறோம். இதை நாம் எப்படி ஒரே வரியில் விளக்குவோம்? திருச்சபைக்கு சென்று, பாவ அறிக்கையிட்டு, பாவ மன்னிப்பைப் பெற்றோம் என்று தானே. இதன் பொருள் நாம் பாவ அறிக்கையிட்டது திருச்சபையினிடத்தில் அல்ல, தேவனிடத்தில். அது போலவே, மக்கள் யோவான் இருக்குமிடம் சென்று, தங்கள் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டு அதன் பின்னர் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அடுத்ததாக அவர்கள் கூறும் இரண்டாம் ஆதாரம்: **யோவான் - *20:23* எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.**

பாவத்தைப் பொறுத்தவரையில் இரண்டு வகைகள் உண்டு. *1.*மனுஷனுக்கு விரோதமான பாவம், *2.*தேவனுக்கு விரோதமான பாவம். ஒரு நபர் நமக்கு

விரோதமாக பாவம் செய்யும் போது, உதாரணமாக ஒருவர் நம்மை அடித்துவிட்டாலோ அல்லது திட்டிவிட்டாலோ, அந்த நபரை நாம் மன்னிப்போமானால் அவருக்கு அந்த பாவம் மன்னிக்கப்படும். ஏனென்றால் அது உங்களுக்கு விரோதகமாக செய்யப்பட்ட பாவம். ஆனால் தவறான பழக்கவழக்கங்கள், விபச்சாரம், கொலைபாதகம், விக்கிரக ஆராதனை முதலான பாவங்களை நாம் செய்துவிட்டு, ஒரு ஊழியக்காரரிடத்தில் சென்று பாவமன்னிப்பைக் கேட்போமானால் அந்த பாவம் மன்னிக்கப்படாது. அதை தேவன் மட்டுமே மன்னிக்க இயலும். இந்த வித்தியாசத்தை சரியாக புரிந்து கொள்ளாததினால் தான் இன்றைக்கு அநேகர் தாங்கள் செய்த பாவங்களுக்கு, சம்பந்தமே இல்லாத வேறு ஒருவரிடத்தில் சென்று பாவ மன்னிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தைகைய காரணங்களினால் ஒரு மனிதன் மற்ற மனிதர்களுடைய பாவங்களை தான் மன்னிப்பதாக கூறுவதை தேவதூஷணம் என்கிறோம்.

அடுத்தபடியாக, யோவான் *10:33*-ல் இயேசு கிறிஸ்து தன்னை தேவன் என்று சொன்னபடியினால், அவர் மனிதனாயிருக்கையில் அவர் தன்னை தேவன் என்று தேவதூஷணம் சொல்லுகிறார் என்று கூறி யூதர்கள் இயேசுவின் மேல் கல்லெறியப் பார்க்கிறார்கள். மெய்யாகவே இயேசு தேவன் என்றும், அவரே கிறிஸ்து என்றும் நாம் நன்றாய் அறிவோம். ஆனால் இந்த வேதப்பகுதியில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான காரியம் என்னவெனில் மனிதர்கள் தன்னை தேவன் என்று கூறுவது தேவதூஷணமாகும். தாயின் கருவில் தோன்றும் மனிதன் ஒரு நாளும் சர்வ வல்லமையுள்ள தேவனாக மாறவே முடியாது. மனிதன் தேவ சாயலாக மாற முடியுமேயன்றி ஒருபோதும் தேவனாக மாற முடியாது. காரியங்கள் இப்படியிருக்க மனிதர்கள் யாராவது தங்களை தேவன் என்று கூறிக்கொண்டால் அதுவே தேவதூஷணமாகும்.

அந்திகிறிஸ்துவைக் குறித்து நாம் வேதத்தில் ஆராய்ந்தால் *2* தெசலோனிக்கேயர் *2:4*-ல் அவனுடைய சுபாவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. **அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனெனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவை எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.** இவ்வசனத்தில் நாம் காண்கின்றபடி மனிதன்

தன்னை தேவன் என்று கூறிக்கொள்ளுதல் தேவதூஷணம் ஆகும். இந்த சுபாவம் வரப்போகின்ற அந்திகிறிஸ்துவின் சுபாவங்களில் ஒன்றாகும்.

> **"தாயின் கருவில் தோன்றும் மனிதன் தேவ சாயலாக மாற முடியுமேயன்றி ஒரு நாளும் தேவனாக மாறவே முடியாது"**

முந்தைய அத்தியாயங்களில் ஏழு தலைகள் என்பது ஏழு மலைகளின் மேல் அமைக்கப்பட்ட நகரமாகிய ரோமைக் குறிப்பதையும், அதே வேளையில் உலகத்தை ஆளுகை செய்யும் ஏழு சாம்ராஜ்யங்களைக் குறிப்பதையும் கண்டோம். ஆகவே மேற்கண்ட விளக்கங்களின் படி, மிருகத்தினுடைய ஏழு தலைகளின் மேல் தூஷணமான நாமம் இருந்தது என்பது இந்த உலகத்தை ஆளுகை செய்யும் இந்த ஏழு சாம்ராஜ்யங்கள் மற்றும் ரோம் நகரம் ஆகிய இவ்விரண்டிலும் மனிதனானவன் மக்களுடைய பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டென்று சொல்வதைக் காட்டும் தேவதூஷணமான நாமமும், மனிதன் தன்னை தேவன் என்று சொல்லி தேவதூஷணம் செய்வதைக் காட்டும் நாமமும் காணப்படுகின்றன என்பதை தெளிவாகப்புரிந்து கொள்கிறோம்.

இவைகளே வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தின் முதலாம் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகின்ற மிருகம், அதனுடைய ஏழு தலைகள், பத்து கொம்புகள், கொம்புகளின் மேலான பத்து முடிகள் மற்றும் தலைகளின் மேலான தூஷணமான நாமம் ஆகியவற்றைப் பற்றின விளக்கமாகும். இவைகள் யாவும் முதலாம் வசனத்தின் விளக்கங்கள் மட்டுமே. இந்த காரியங்கள் யாவும் எங்ஙனம் தீர்க்கதரிசனமாக நிறைவேறுகின்றன என்று இனி வரும் அத்தியாயங்களிலே காண்போம்.



# 4

இதுவரையில் வெளிப்படுத்தின விசேஷம் *13*-ம் அதிகாரத்தின் முதல் வசனத்திற்கான விளக்கங்களைப் பார்த்தோம். நாம் கண்ட அவ்விளக்கங்கள் யாவும் முதல் வசனம் குறிப்பிடுகின்ற தரிசனத்திற்கான நேரடி விளக்கங்கள் மட்டுமே. இவைகள் எப்படி நிறைவேறுகின்றன என்பதை இனி காண்போம்.

வெளி – *13:1* கூறுகின்ற சமுத்திரத்திலிருந்து எழும்பி வரும் மிருகம் மற்றும் அதனுடைய ஏழு தலைகள், பத்து கொம்புகள் மற்றும் பத்து முடிகள் யாவும்

தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துகின்ற காரியங்கள் என்னவென்றால் திருச்சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, உபத்திரவ காலமான ஏழு ஆண்டுகள் துவங்கும். இதில் முதல் மூன்றரை ஆண்டுகள் உபத்திரவ காலம் எனவும், அடுத்த மூன்றரை ஆண்டுகள் மகா உபத்திரவகாலம் எனவும் கூறப்படுகின்றது. இந்த உபத்திரவ காலத்தில் உலகத்தில் வரப் போகிறதான ஒரு இராஜ்யத்தைக் குறித்தும், அந்த இராஜ்யம் எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதைக் குறித்தும் தான் வெளி - *13:1* குறிப்பிடுகின்றது. இந்த இராஜ்யமானது பத்து நாடுகளின் (பத்து ராஜாக்களின்) கூட்டமைப்போடு, ரோம் நகரை தலைநகராகக் கொண்டு எழும்பி வர இருப்பதாக வேதம் கூறுகின்றது.

இது, திருச்சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, ஜனங்களை உபத்திரவப்படுத்தவும், குறிப்பாக முதல் மூன்றரை ஆண்டுகளிலே கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களையும், அடுத்த மூன்றரை ஆண்டுகளிலே யூதர்களையும் உபத்திரவப்படுத்தப் போகின்றது. இவ்வரசாங்கத்தை **Anti Christ Government** – எதிர் கிறிஸ்தவ அரசாங்கம் என்றும் அழைக்கலாம். கிறிஸ்தவத்திற்கு எதிரான அரசாங்கங்கள் உலகம் முழுதும் எழும்பும். இவ்வரசாங்கங்களுக்கெல்லாம் தலைவனாக ஒருவன் வருவான். அவனைத்தான் *1* யோவான் - *2:18* அந்தி கிறிஸ்து என்று குறிப்பிடுகின்றது.

அந்தி கிறிஸ்து என்பதற்கு மிகச் சரியான மொழி பெயர்ப்பு எதிர் கிறிஸ்து அதாவது கிறிஸ்துவிற்கு எதிரானவன் என்பதாகும். இவன் கிறிஸ்துவிற்கும், கிறிஸ்தவத்திற்கும் எதிரானவனாக இருப்பான். இந்த அந்தி கிறிஸ்துவின் அரசாங்கம் எழும்பி வரும் போது, அதற்கு உதவி செய்யும் படி பத்து நாடுகளின் கூட்டமைப்பானது அந்தி கிறிஸ்துவிற்கு உதவியாக வரும். இந்த பத்து நாடுகளின் கூட்டமைப்பானது அந்தி கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பாகவே வந்து வழிகள் எல்லாவற்றையும் அவனுக்கு ஆயத்தம் செய்து, தங்கள் வல்லமையையும், அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுப்பார்கள் என்று வெளி - *17:13* விவரிக்கின்றது. அதாவது இந்த பத்து நாடுகளின் கூட்டமைப்பானது எல்லாவற்றையும் ஆயத்தம் பண்ணி தங்கள் வல்லமையோடும், அதிகாரத்தோடும் இருக்கையில் அவர்களைத் தலைமையேற்று நடத்த அவர்கள் மத்தியில் இருந்து ஒருவன் எழும்பி வருவான். அவன் எழும்பி இந்த முழு உலகத்தையும் ஆளுகை செய்யத் தொடங்குவான்.

அப்பொழுதுதான் மேற்கூறியபடி இவர்கள் தங்களது வல்லமையையும், அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுப்பார்கள்.

இந்த தீர்க்கதரிசனம் எப்படி நிறைவேறியிருக்கிறது? இந்த பத்து நாடுகளின் கூட்டமைப்பு, அந்திகிறிஸ்துவிற்கு முன்பாக வெளிப்பட்டு, அவனுக்கு வழியை ஆயத்தம் பண்ண வேண்டும் என்று வேதத்தில் முன்னுரைக்கப்பட்டுள்ளபடி, நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நாட்களிலே இந்த பத்து நாடுகளின் கூட்டமைப்பானது உருவாகி வலிமை பெற்று வருகின்றது. இந்த பத்து நாடுகளும் எவைகள் என்று காணும் முன்னர், இவற்றைக் குறித்த சில கருத்துக்களைக் காண்போம்.

இந்த பத்து நாடுகளைக் குறித்து பொதுவாக இருவேறு கருத்துக்கள் பரவலாகக் கூறப்படுகின்றன. முதலாவது பூமியனைத்தையுமே பத்து பாகங்களாகப்பிரித்து ஆளுகை செய்வார்கள் என்றும், இரண்டாவதாக உலகில் உள்ள பத்து நாடுகள் இணைந்து முழு உலகையும் ஆளுகை செய்வார்கள் என்றும் இருவேறு கருத்துக்கள் சொல்லப்பட்டுக் கொண்டே வருகின்றன. உண்மையாகவே இந்த காரியங்கள் எப்படியாக சாத்தியப்பட இருக்கின்றன என்றால், குறிப்பிட்ட பத்து நாடுகள் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, அக்கூட்டமைப்பிற்கு தலைவனாக ஒருவனைக் கொண்டுவந்து, அவன் இந்த பத்து நாடுகளைக் கொண்டு, அவற்றின் தலைவர்களைக் கொண்டு உலகத்தை ஆளுகை செய்வான். ஒருவேளை அந்திகிறிஸ்து உலகத்தை பத்து பாகங்களாகப் பிரித்து, அவற்றை மேற்கண்ட பத்து நாடுகளின் தலைவர்களைக் கொண்டு ஆளுகை செய்யவும் வாய்ப்பிருக்கின்றது.

இந்த பத்து நாடுகளும் முன்பாகவே வெளிப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளபடியே, இவைகள் நம் காலத்திலேயே உருவாகி கிரியைகளை நடப்பித்துக் கொண்டிருக்கின்றன. இந்த பத்து நாடுகள் எவைகள் என்று பார்ப்போம். கி.பி.538-ம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் என்று அழைக்கப்பட்ட பாப்பரசர் சாம்ராஜ்யம் எழும்பி வந்தது.

சரித்திரத்தில் நாம் சற்று பின்னோக்கிப் பார்ப்போமானால், ரோம சாம்ராஜ்யமானது பூமியெங்கும் பரவி இருந்த நாட்களிலே, இயேசு கிறிஸ்துவின் காலத்திற்குப் பின்னர் கி.பி.476-ம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கிழக்கு ரோம்,

மேற்கு ரோம் என்று பிரிக்கப்பட்டு, கிழக்கு ரோமிற்கு ஒரு தலைவரையும், மேற்கு ரோமிற்கு ஒரு தலைவரையும் கொண்டு ஆளுகை நடைபெற்று வந்தது. அதற்குப் பிறகு கி.பி.538-ம் ஆண்டு கிழக்கு ரோமும், மேற்கு ரோமும் இணைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் ***(Reformed Roman Empire)*** உருவாக்கப்பட்டது. அதற்குத் தலைவராக ரோமன் கத்தோலிக்க மதத்தலைவரான பாப்பரசர் *(Pope)* நியமிக்கப்பட்டார். அவர் உலகத்தின் பெரும் பகுதியை தனக்குக் கீழாக ஆளுகை செய்து கொண்டு வந்தார். இதற்கு பின்பு வந்த அநேக பாப்பரசர்கள் *(Popes)* ராஜ்யபாரத்தில் இருந்துகொண்டு ஆளுகையைத் தொடர்ந்து வந்தனர். இவ்வாறு பாப்பரசர்களின் ஆளுகையானது கி.பி.1798-ம் ஆண்டு வரை ஏறக்குறைய 1260 ஆண்டுகள் தொடர்ந்தது.

இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் கி.பி.538-ம் ஆண்டு பாப்பரசர் தலைமையில் தொடங்கினபோது, அவருக்குக் கீழாக ஐரோப்பிய சாம்ராஜ்யமானது பத்து நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அந்த பத்து நாடுகளாவன அலமனிஸ், விசிகோத், பிராங்க்ஸ், சுவஸ், பர்கண்டியன்ஸ், ஆங்கிலோ சாக்சன்ஸ், லாம்பர்ட்ஸ், வேன்டல், ஹெருலிஸ், ஆஸ்ட்டிரகோத்ஸ். இந்த பத்து நாடுகளையும் அவர் தன்னகத்தே வைத்து, அதற்கு பத்து ராஜாக்களை நியமித்து, அந்த பத்து ராஜாக்கள் பூமியை ஆளுகை செய்யும் படியும், அவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக தலைவராக தான் இருந்தும் இந்த ஆளுகையை தொடர்ந்து கொண்டிருந்தார். இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யமானது கி.பி.1798-ம் ஆண்டு ஒரு பின்னடைவைச் சந்தித்தது. இதனை வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரம் 3-ம் வசனம் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது.

**அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி...**

பிரெஞ்சு தேசத்தின் மாவீரன் நெப்போலியனுக்கு உலகத்தைப் பிடிக்கின்ற ஆசை வந்து, நாடுகளைப் பிடிக்கத் துவங்கும்போது ஐரோப்பாவின் பெரும்பகுதியாக பத்து நாடுகளைத் தன்னகத்தே வைத்து ஆளுகை செய்து கொண்டிருந்த பாப்பரசரைப் பிடிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அவர் பாப்பரசரை பிடிக்கலாமா வேண்டாமா

என்று யோசனை செய்து கொண்டிருந்த காலக்கட்டத்திலே, அநேகர் நீ தான் அவரைப் பிடிக்க வேண்டும் என்று உத்வேகத்தைக் கொடுத்தனர். அவரும் எழும்பி பாப்பரசர் பியஸ் *VI*-ஐ *(Pope Pius VI)* பிடித்து சிறைச்சாலையில் போட்டார். இது *1798*-ல் நடைபெற்றதான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம். இச்சம்பவத்தைத்தான் மேற்கண்ட வசனம் ஏழு தலைகளில் ஒன்றிற்கு சாவுக்கேதுவான காயம் அடைந்ததாக கூறுகின்றது. ஏழு தலைகள் என்பது ஏழு ராஜாக்கள் மற்றும் ஏழு மலைகளைக் குறிக்கின்றது என்பதனை முந்தைய அத்தியாயங்களில் விரிவாகக் கண்டோம். இதில் ஏழாம் தலையான, ஏழாம் ராஜ்யமான, ஏழு மலைகளின் மேல் அமைந்துள்ள ரோமைத் தலைநகராகக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் சாவுக்கேதுவான காயத்தை அடைந்தது.

இந்த அரசாட்சி முடிவுக்கு வந்ததாக அநேகர் எதிர்பார்த்தனர். ஆனால் வெளி – *13:3* தொடர்ச்சியாக, அதின் காயம் சொஸ்தமாக்கப்பட்டதாகக் கூறுகின்றது. அந்தப்படியே இந்த மிருகத்தின் காயமும் சொஸ்தமாக்கப்பட்டது. இந்த ராஜ்யம் மீண்டும் உயிர் பெற்றது. *1929*-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் *11*-ம் தேதி மீண்டும் பாப்பரசர் பியஸ் *XI*-ஐ வாடிகன் நகரத்திற்கும், ரோமன் கத்தோலிக்கத்திற்கும் தலைவராக அபிஷேகம் பண்ணினார்கள். இதற்கான உத்தரவை பிறப்பித்தவர் இத்தாலிய தேசத்தின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்து, பின்பு அத்தேசத்தின் சர்வாதிகாரியாக மாறிய ஜெனரல் முசோலினி.

இவ்வாறாக வேதம் கூறியபடியே இந்த சாம்ராஜ்யம் பிழைத்துக் கொண்டது. இவ்விடத்திலே அதிசயமான ஒரு ஒத்திசைவை நாம் காண்பது அவசியம். வாடிகன் மேல் பாப்பரசர் ராஜாவாக எற்படுத்தபட்டதை *1929*-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் *11*-ம் நாள் வெளிவந்த ***San-Fransisco Chronicle*** என்ற ஆங்கில நாளேட்டில் "***Healing the wound after many years***" என்று குறிப்பிட்டுள்ளது. வேதத்தின் ஒவ்வொரு வார்த்தையும்



முசோலினி பாப்பரசர் ஒப்பந்தம்

சத்தியம் என்பதற்கு இது ஒரு சிறிய அத்தாட்சி. சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது என்று வெளி - *13:3* குறிப்பிட்டபடி, அந்த தீர்க்கதரிசனம் பூமியில் நிறைவேறினதை *11-02-1929* அன்றைய நாளிதழ் ***Healing the wound after many years*** என்று குறிப்பிடுகிறது.

ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில், முன்பு இதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பத்து நாடுகளும் தனித்தனி நாடுகளாக பிரிந்து, தனித்தனியே ஆளுகை செய்து கொண்டிருந்தன. வேதத்தின் தீர்க்கதரிசனங்களின் படி, தனித்தனியே இயங்கும் இந்த பத்து நாடுகளும் இணைந்து ஒரு கூட்டமைப்பு உருவாக வேண்டும். அந்திகிறிஸ்துவின் ஏழு ஆண்டு கால ஆட்சியில் இந்த பத்து நாடுகளும் இணைந்துதான் ஆளுகை செய்ய வேண்டும். இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக *1949*-ம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபிறகு இங்கிலாந்து தேசத்தின் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு யோசனையைச் சொன்னார். முதலாம் உலக யுத்தத்திற்கு ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளே காரணம். அப்படியே இரண்டாம் உலக யுத்தத்திற்கும் காரணம் ஜெர்மனி, போலந்து ஆகிய ஐரோப்பிய நாடுகளே. இப்படியாக ஐரோப்பிய நாடுகளில் ஒரு யுத்தம் துவங்குமானால், அது ஒரு உலக யுத்தமாக மாறி விடுகிறது. எனவே இனி ஐரோப்பிய நாடுகளுக்குள் ஒரு யுத்தம் வராதபடிக்கும், அது உலக யுத்தமாக மாறாமல் இருப்பதற்கும், ஐரோப்பியர்களுக்குள்ளே ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று விரும்பினார். தேவனுடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுகின்ற வேளை வந்தபடியினாலே *1949*-ம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைத்து ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அக்கூட்டமைப்பின் பெயர் ஐரோப்பிய ஒன்றியம் *(European Union)*. துவக்கத்தில் அந்த கூட்டமைப்பிற்கு ஐரோப்பிய பொருளாதார கழகம் *(European Economical Committee)* என்று பெயர்.

இக்கூட்டமைப்பு உருவான *1949*-ம் ஆண்டு இதில் *6* நாடுகளும், *1950*-ம் ஆண்டில் *9* நாடுகளும் *1951*-ம் ஆண்டில் *10* நாடுகளுமாக வளர்ந்தது. இந்த *10* நாடுகளும் சேர்ந்தவுடன், "இந்த பத்து நாடுகள் கூட்டமைப்பானது இனி விஸ்தாரப்படுத்தப்படாது. இக்கூட்டமைப்பில் இனி இந்த பத்து நாடுகள் மட்டுமே இருக்கும், இவைகளோடு கூட மற்ற நாடுகள் சேர்ந்து கொள்ளலாம். இவ்வாறாக


இணையும் மற்ற நாடுகள் முந்தின *10* நாடுகள் விதிக்கின்ற சட்ட திட்டங்களைத் தான் கைக்கொள்ள வேண்டும்" என்று அறிவித்தது. அதாவது இந்த பத்து நாடுகள் தான் முடிவெடுக்கக் கூடிய அதிகாரம் ***(Veto Power)*** கொண்டவையாக இருக்கும். இணையும் மற்ற நாடுகள் எல்லாம் இவர்கள் சொல்லைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களாக இருப்பார்கள். இக்கூட்டமைப்பின் தலைவர் கூட இந்த பத்து நாடுகளில் ஒன்றில் இருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அறிவித்தார்கள். இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட நாடுகள் எல்லாம் ஒவ்வொன்றாக அதனோடு கூட்டு சேர ஆரம்பித்தன.

இவ்வாறாக வெளி – *13:1* மற்றும் *17:12* தீர்க்கதரிசனமாக உரைக்கின்றபடி அந்தி கிறிஸ்துவிற்கு வழியை ஆயத்தப்படுத்தும் பத்து நாடுகள் எழும்பி வந்தாயிற்று. இந்த பத்து நாடுகளும் எவைகள் என்று சரித்திரத்திலே பின்னோக்கிப் பார்ப்போமானால் போப் எந்த பத்து நாடுகளோடு கூட ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யத்தை கி.பி.*538*-ம் ஆண்டு துவக்கினாரோ, அதே பத்து நாடுகள் தான் *1951*-ம் ஆண்டு இந்த ஐரோப்பியக் கூட்டமைப்பில் இணைந்துள்ளன. ஆனால் இவைகளின் பெயர் மட்டும் மாற்றமடைந்தள்ளது.


| | |
|---|---|
| *1.*அலமனிஸ் *(Alamanis)* | – ஜெர்மனி *(Germany)* |
| *2.*விசிகோத் *(Visigoths)* | – ஸ்பெயின் *(Spain)* |
| *3.*பிராங்க்ஸ் *(Franks)* | – பிரான்ஸ் *(France)* |
| *4.*சுவஸ் *(Sueves)* | – போர்ச்சுக்கல் *(Portugal)* |
| *5.*பர்கண்டியன்ஸ் *(Burgundians)* | – சுவிட்சர்லாந்து *(Switzerland)* |
| *6.*ஆங்கிலோ சாக்சன்ஸ் *(Anglo Saxons)* | – இங்கிலாந்து *(England)* |
| *7.*லாம்பர்ட்ஸ் *(Lombards)* | – இத்தாலி *(Italy)* |
| *8.*ஆஸ்டிரகோத்ஸ் *(Ostrogoths)* | – நெதர்லாந்து *(Netherlands)* |
| *9.*வேன்டல் *(Vandals)* | – பெல்ஜியம் *(Belgium)* |
| *10.*ஹெருலிஸ் *(Herulis)* | – லக்ஸம்பர்க் *(Luxembourg)* |


இவ்வாறாக கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் படி அந்தி கிறிஸ்துவிற்கு வழியை ஆயத்தம் பண்ணும் பத்து ராஜாக்கள், பத்து நாடுகளின் கூட்டமைப்பாக *1951*-ம் ஆண்டு எழும்பி வந்து விட்டனர். அந்த நாட்களில் இக்கூட்டமைப்பின் முக்கியப் பொறுப்பில் இருந்த பால் ஹென்றி ஸ்பாக்ஸ் *(Paul-Henri Spaak)* சொன்ன வார்த்தை தான் மிகவும் முக்கியமானது.

***எங்களுக்கு இந்த கூட்டமைப்பு போதுமானது. இப்போது எங்களுக்குத்தேவை ஒரு தலைவன். அது பிசாசாய் இருந்தாலும் பரவாயில்லை அல்லது கடவுளாக இருந்தாலும் பரவாயில்லை. What we want is a man of sufficient stature to hold the alliances of all people and to lift us out of the economic morass into which we are sinking. Send us such a man, and be he God or devil, we will receive him.***





நமக்குத் தெரிந்திருக்கின்றபடி சகரியா – *14:4*-ன் படி இயேசு கிறிஸ்து ஒலிவமலையின் மேல் வந்திறங்கி, எருசலேமை மையமாக வைத்துத்தான் ஆயிரம் ஆண்டுகள் ஆளுகை செய்யப்போகிறார். அப்படியானால் அவர்கள் சொன்ன இரண்டு வாய்ப்புகளிலே ஒன்று கடவுள் மற்றொன்று பிசாசு. கடவுள் அங்கிருந்து (ரோமில்) வரப் போவதில்லை என்பது தெரிந்தாகிவிட்டது. இனி அங்கிருந்து வரப் போகிறவன்தான் பிசாசு. இப்படியாக இந்த பிசாசின் மகன் தான் உலகத்தை ஆளுகை செய்யப் போகிறான்.







# 5



வெளி - *13:2*

நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.

***மிருகங்கள்***

முந்தைய அத்தியாயங்களில், முதல் வசனம் குறிப்பிடுகின்ற மிருகம் என்பது ஒரு அரசாங்கம் என்பதைக் கண்டோம். இவ்வரசாங்கத்தின் தோற்றம் வித்தியாசமாக இருப்பதைக் கவனியுங்கள். இவ்வசனத்தின்படி வரப் போகின்ற அந்தி கிறிஸ்துவின் ராஜ்யமானது மூன்று மிருகங்களைப் போலவும், அவைகளின் குணாதிசயங்களின் கலவையைப் போலவும் இருக்கப் போகின்றது. இந்த அரசாங்கம் பார்ப்பதற்கு ***"சிறுத்தையைப் போலவும், கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அடுத்ததாக அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும்"*** இருப்பதாக வசனம் கூறுகின்றது. இந்த மூன்று மிருகங்களை தானியேல் புத்தகத்திலேயும் காணலாம்.

**தானியேல் - *7:3,4,5,6,7* அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. முந்தினது சிங்கத்தைப் போல இருந்தது; அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது; அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப் போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. பின்பு கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன்; அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது; எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது.**

**அதன் பின்பு, சிவிங்கியைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன்; அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது; அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது**

**அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப் போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்து கொம்புகள் இருந்தது.**

இந்நான்கு மிருகங்களும் நான்கு ராஜ்யங்களைக் குறிப்பதாக தானி – *7:23* கூறுகின்றது. இந்த நான்கு மிருகங்களைப் பற்றியதான வேத வாக்கியங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டுமாய் வருவதற்கு முன்பதாக, பூமியில்

ஆளுகை செய்யும் அரசாங்கங்களைக் குறித்து தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துகின்றது.

தானியேலின் காலத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் காலம் வரை பூமியில் ஆளுகை செய்யும்படி எழும்பி வந்த சாம்ராஜ்யங்கள் மொத்தம் நான்கு.

முதலாவதாக மேற்கண்ட வசனங்களில் தானியேல் *7:4* கூறுகின்ற சிங்கத்திற்கொப்பானது பாபிலோனிய சாம்ராஜ்யமாகும். இது நேபுகாத்நேச்சாரின் காலத்தில் உச்சத்தை அடைந்தது. அதற்குப் பின்பு தானி – *7:5* கூறுகின்ற கரடிக்கு ஒப்பானது மேதிய பெர்சிய சாம்ராஜ்யமாகும். இந்த சாம்ராஜ்யம் கி.மு.*538*-ம் ஆண்டு கோரேஸ் தலைமையில் எழும்பி வந்தது. அடுத்ததாக தானி – *7:6* குறிப்பிடுவது சிவிங்கிக்கொப்பான சாம்ராஜ்யமாகும். சிவிங்கி என்றால் சிறுத்தை *(Leopard)* என்று பொருள். இது கிரேக்க சாம்ராஜ்யத்தைக் குறிப்பதாகும். இந்த கிரேக்க சாம்ராஜ்யம் அலெக்ஸாண்டர் தலைமையில் கி.மு.*333*-ல் எழும்பி வந்தது. நான்காவதாக தானி – *7:7* குறிப்பிடுகின்ற கெடியதும், கொடியதுமான சாம்ராஜ்யம், கி.மு.*64*-ல் அகஸ்து ராயன் தலைமையில் எழும்பி வந்ததான ரோம சாம்ராஜ்யமாகும். இந்த காலக்கட்டத்தில் தான் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார். இந்த நான்கு மிருகங்களும் அதாவது இந்த நான்கு சாம்ராஜ்யங்களும் எப்படிப்பட்டவைகளாக இருக்கும் என்பதைக் குறித்துதான் தானியேலுக்கு *7*-ம் அதிகாரம் முழுவதும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சரி. இப்போது நாம் வெளி – *13:2*-க்கு வருவோம். அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது பார்வைக்கு சிறுத்தையைப் போல் இருப்பதாக இவ்வசனம் கூறுகின்றது. மேற்கண்ட நான்கு சாம்ராஜ்யங்களிலே சிறுத்தை என்பது கிரேக்க சாம்ராஜ்யத்தைக் குறிக்கின்றது. ஆகவே அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது பார்ப்பதற்கு முந்தின கிரேக்க சாம்ராஜ்யத்தைப் போல இருக்கப் போகின்றது. சிறுத்தைக்கும், கிரேக்க சாம்ராஜ்யத்திற்கும் என்ன ஒற்றுமை? என்ன விசேஷம்?

இருக்கின்ற எல்லா மிருகங்களைக் காட்டிலும் சிறுத்தை தான் அதிவேகமாக ஓடக்கூடியது, பாய்ந்து செல்லக் கூடியது. அதற்கு ஒப்பாக கிரேக்க சாம்ராஜ்யத்தின் வரலாற்றைச்சற்றே திருப்பிப் பார்ப்போமானால் அலெக்ஸ்சாண்டர் தனது *23*-வது வயதிலே இவ்வுலகத்தைப் பிடிக்க ஆரம்பித்து, *33* வயதிலே தன்னுடைய வாலிபப் பிராயத்திலே இந்த முழு உலகத்தின் பெரும்பகுதியைத் தன் ஆதிக்கத்தின் கீழ்

கொண்டுவந்து மரித்துப் போனார் என்று அறிய இயலும். இவ்வாறாக உலகத்தின் 70 சதவீதப் பகுதியை பிடிக்க அவர் எடுத்துக் கொண்ட காலம் மொத்தம் 11 ஆண்டுகள் மட்டுமே.



கிரேக்க சாம்ராஜ்ஜியம் கி.மு. 333

இந்தப் பகுதிகள் அனைத்தும் அலெக்ஸ்சாண்டரால் மிக வேகமாக, மிகக் குறுகிய காலத்தில், அவர் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு கிரேக்க சாம்ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டன. வரப் போகின்ற அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யமும், சிறுத்தைக்கு ஒப்பான இந்த கிரேக்க சாம்ராஜ்யத்தைப் போல மிக வேகமாக இவ்வுலகத்தை தனது ஆளுகையின்கீழ் கொண்டு வர இருக்கின்றது. அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யம் 42 மாதங்களுக்குள்ளாக அதாவது மூன்றரை ஆண்டுகளுக்குள்ளாக முழு உலகத்தையும் தனது ஆளுகைக்குக் கீழ் கொண்டுவரும் என்று வெளி – 13:5 கூறுகின்றது. மேலும் இந்த சாம்ராஜ்யமானது உலகத்தின் ஒரு பகுதியை மட்டுமல்ல, உலகத்தின் அத்தனை தேசங்களையும், அத்தனை ஜனங்களையும் தன்னுடைய ஆளுகைக்குக் கீழாக யுத்தத்தின் மூலம் கொண்டுவரும் என்று வெளி – 13:7 கூறுகின்றது.

**மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர்மேலும், ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.**

இவ்வசனங்களின் மூலமாக வரப்போகின்ற அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது முந்தின கிரேக்க சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் மிகவும் வேகமானதாக மூன்றரை வருடங்களிலேயே ஒட்டுமொத்த உலகத்தையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் என்று அறிகின்றோம். இந்தக் காரணங்களால் தான் அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யம் சிறுத்தையைப் போல் இருந்ததாக வெளி – *13:2* குறிப்பிடுகின்றது. (மேற்கண்ட வசனங்களில் குறிப்பிடுகின்ற பரிசுத்தவான்கள் என்பது சபை எடுத்துக் கொள்ளப்படுதலில் பங்கடையாமல் கைவிடப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களைக் குறிப்பதாகும்)

இரண்டாவதாக வெளி – *13:2,* அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யத்தைக் குறித்து, ***"அதின் கால்கள் கரடியின் கால்களைப் போல"*** இருந்ததாக குறிப்பிடுகின்றது. கரடி என்பது மேதிய-பெர்சிய சாம்ராஜ்யத்தைக் குறிக்கும். மேற்கண்ட வசனத்தின்படி அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யத்தின் கால்கள் கரடியின் கால்களைப் போல இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சாம்ராஜ்யத்தைப் பற்றி தானியேல் - *7:5*-ல் கரடி ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்றதாக கூறுகின்றது. ஒரு புறம் சாய்ந்து நின்றது என்பதன் பொருள் என்னவென்றால், இந்த மிருகம் ஒருபுறம் பலம் வாய்ந்ததாகவும், ஒருபுறம் பலவீனமானதாகவும் உள்ளதைக் காண்பிக்கின்றது. கைகள் பலவீனப்பட்ட மனிதன் சாய்ந்து நிற்பதில்லை. ஆனால் கால்கள் பலவீனப்பட்ட மனிதன் தன் பலவீனத்தின் நிமித்தம் ஒரு புறமாய்ச்சாய்ந்து நிற்பதைக் காண இயலும். அதுபோலவே, அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது ஒரு புறம் பலம் வாய்ந்ததாகவும், ஒருபுறம் பலவீனமானதாகவும் இருக்கப் போகின்றது. இதைத்தான் தானியேல் *2:42*-ல் உலகத்தின் கடைசி சாம்ராஜ்யமான அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது, இரும்பும் களிமண்ணுமான சாம்ராஜ்யம் என்றும், அது ஒரு பங்கு உரமும், ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும் என்றும் வேதம் கூறுகின்றது. அதாவது அந்தி கிறிஸ்துவின் பத்து நாடுகள் கூட்டமைப்பில் சில நாடுகள் சக்தி வாய்ந்த நாடுகளாகவும், பொருளாதார ரீதியாக வளமான நாடுகளாகவும், சில நாடுகள் பலவீனமாகவும், பொருளாதாரத்தில் தடுமாறுகின்ற நாடுகளாகவும் இருக்கும்.

வெளி - *13:2*-ல் தொடர்ச்சியாக ***"அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போல"*** இருந்ததாக குறிப்பிடுகின்றது. தானியேல் - *7:4* விளக்குகின்றபடி சிங்கம் என்பது பாபிலோனிய சாம்ராஜ்யத்தைக் குறிக்கின்றது. தானியேல் *4*-ம் அதிகாரத்தில்

பாபிலோனிய ராஜாவான நேபுகாத்நேச்சாருக்கு பெருமை யானவைகளைப் பேசும் வாய் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய வாழ்க்கையின் வீழ்ச்சிக்கும், பின்பு எழுச்சிக்கும் இந்த வாய்தான் காரணமாக இருந்தது.

**"அவருடைய வாழ்க்கையின் வீழ்ச்சிக்கும், பின்பு எழுச்சிக்கும் வாய்தான் காரணமாக இருந்தது."**

தானியேல் - *4:30*-ல் ***"இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக் கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா"*** என்று அவன் சொன்னபோது, அடுத்த வசனத்தில் இந்த வார்த்தை அவன் வாயில் இருக்கும்போதே அவனுடைய ராஜ்யம் அவனை விட்டு நீக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே சிங்கத்தின் வாய் என்பது பாபிலோனிய சாம்ராஜ்யமானது தன் வாயினால் பெருமையானவைகளைப் பேசுவதை வெளிப்படுத்துகின்றது. அந்திகிறிஸ்துவைக் குறித்து வெளி – *13:5*-ல் ***"பெருமையானவைகளையும், தூஷணங்களையும் பேசும் வாய் அதற்கு கொடுக்கப்பட்டது"*** என்று கூறுகின்றது. இவ்வசனத்தின் மூலம் அந்திகிறிஸ்துவானவன் தேவனுக்கு விரோதமான தூஷணமான வார்த்தைகளையும், மேலும் தன்னைக் குறித்தும், தன் இராஜ்யத்தைக் குறித்தும் பெருமையானவைகளைப் பேசும் வாயையும் கொண்டவனாக இருக்கப்போவதைத் தெரிவிக்கின்றது.

இதற்கு ஒத்த வேதவசனமாக தானியேல் *7:8*ல், பத்துக் கொம்புகளுக்கிடையில் ஒரு சின்ன கொம்பு எழும்பி வருவதாக அந்திகிறிஸ்து வர இருப்பதைக் குறித்துக் கூறி, "அதற்கு பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது" என்று குறிப்பிடுகின்றது. இவ்வசனங்களில் கூறப்பட்டுள்ள தூஷணமான வார்த்தைகள் என்னவென்று கடந்த அத்தியாயங்களில் விரிவாகக் கண்டோம்.

தானியேல் *11:37.38*-ல் அந்திகிறிஸ்துவானவன் ***"அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்த தேவனையும் மதியாமலும்,***

***எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்குவான்"*** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல 2 தெசலோனி – 2:4 ***"அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப் படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்"*** என்று அந்திகிறிஸ்துவைக் குறித்து கூறப்பட்டுள்ளது. இவைகள் எல்லாம் அவனுடைய பெருமையைக் காட்டுகிறதான காரியங்கள். இப்படியாக வரப் போகிறதான அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது மிகவும் பெருமையானவைகளைப் பேசுகிறதாய் இருக்கப் போகின்றது.

இதற்கு ஒப்பாக இன்றும் சில அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுடைய ஆட்சியைக் குறித்துப் பேசும்போது, எமது ஆட்சி இன்னின்னதைச் செய்தது என்று பெருமையாக பேசுகிறதை நாம் கவனிக்க இயலும். சில நேரங்களில் அவர்கள் எல்லா எல்லைகளையும் தாண்டி, தங்களைக் கடவுளாகவே பாவித்து தங்களை உயர்த்திக் கொள்வதையும் காண முடிகின்றது. அது போன்றதொரு காரியத்தைத் தான் அந்திகிறிஸ்துவும் செய்யப் போகிறதாக மேற்கண்ட வசனம் குறிப்பிடுகின்றது.

ஆகவே, அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது சிறுத்தைக்கு ஒப்பான கிரேக்க சாம்ராஜ்யத்தைப் போல அதிவேகமானதாகவும், கரடிக்கு ஒப்பான மேதிய-பெர்சிய சாம்ராஜ்யத்தின் கால்களைப் போல ஒருபுறம் பலம் வாய்ந்ததாகவும், ஒரு புறம் பலவீனமானதாகவும், சிங்கத்திற்கு ஒப்பான பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் வாயைப் போல பெருமையானவைகளையும், தூஷணமானவைகளையும் பேசுகின்ற சாம்ராஜ்யமாகவும் இருக்கும் என்று அறிகின்றோம்.

**வெளி *13:2* வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.** இவ்வசனத்தில் வலுசர்ப்பம் என்பது வெளி – *12:9* மற்றும் வெளி - *20:2*-ன் படி பிசாசைக் குறிக்கின்றது. அப்படியானால் மேற்கண்ட வசனத்தில், பிசாசானது அந்திகிறிஸ்துவிற்கு தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் கொடுப்பதாக கூறுகின்றது. இதற்கு ஒப்பாக, இயேசு கிறிஸ்துவிடம் பிசாசானது, ***"உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளை எல்லாம் உமக்குத் தருவேன்"*** என்று கூறுவதை

மத்தேயு *4-ம்* அதிகாரத்தில் காண இயலும். இவ்வசனங்களில் சிங்காசனம் என்பது இராஜ்யத்தைக் குறிக்கின்றது. அவைகளின் மகிமை என்பது அதின் பலத்தையும், அதிகாரத்தையும் குறிக்கின்றது.

வெளி – *13:2*-ல், பிசாசானது வரப் போகின்ற அந்திகிறிஸ்துவிற்கு உலகத்தின் அத்தனை இராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும், தன் அதிகாரத்தையும், தன் பலத்தையும் கொடுப்பதாக மேற்கண்ட வசனம் கூறுகின்றது. இதில் நாம் மிக முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டிய காரியம் என்னவெனில், வரப் போகிற அந்தி கிறிஸ்துவின் சாம்ராஜ்யமானது, பிசாசை வழிபடுகின்ற சாம்ராஜ்யமாக இருக்கும். இயேசு கிறிஸ்து பிசாசைப் பணிந்து கொள்ளாமல் **"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக"** என்று கூறியதன் விளைவாக, பிசாசிடமிருந்து இயேசு கிறிஸ்து உலகத்தின் ராஜ்யங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் வரப் போகிற அந்தி கிறிஸ்துவிற்கு பிசாசானது உலகத்தின் சகல இராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் கொடுக்கின்றபடியால், அந்திகிறிஸ்துவானவன் பிசாசைப் பணிந்து கொள்கிறவனாக இருப்பான் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. அதாவது அவன் சாத்தான் வழிபாட்டுக்காரனாயும், சாத்தானைப் பணிந்து கொள்கிறவனாயும் இருப்பான். இப்படியாக வெளி – *13:2* முழுவதும் வரப்போகிற அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யத்தின் அமைப்பையும், தன்மையையும், அதின் பலத்தையும் விளக்கிக் கூறுவதாகவே அமைந்துள்ளது.





வெளி - *13:3*

“அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும், சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி...”

இந்த வசனப்பகுதி இரண்டு முறை நிறைவேற இருப்பதாக அநேக வேத வல்லுநர்கள் கருதுகின்றனர். இதன் ஒரு நிறைவேறுதலாக கடந்த அத்தியாயங்களிலே ஏழு தலைகளில் ஒன்றான ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் காயமடைந்ததையும், பின்பு அந்த காயம் குணமாக்கப்பட்டதையும் விரிவாகக் கண்டோம். *1798*-ம் ஆண்டு பாப்பரசர் மாவீரன் நெப்போலியனால் சிறைபிடிக்கப்பட்டார். அத்தோடு பாப்பரசரின் சாம்ராஜ்யம் முடிவுற்றதாக அநேகர் எண்ணிக்கொண்டிருந்தனர். *1929*-ம் ஆண்டு பாப்பரசர் மீண்டும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு, அவருடைய சாம்ராஜ்யம் மீண்டுமாய் எழும்பி வருகையில், சாவுக்கேதுவான அந்த காயம் சொஸ்தமாக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் பிழைத்துக் கொண்டது.

வெளி *13:3* - ***பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி...*** மேற்கண்ட வசனத்தின் நிறைவேறுதலாக, மீண்டும் எழும்பி வந்ததான இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யத்தை, பாப்பரசரின் அதிகாரத்தை வெகு ஜனங்கள் தீவிரமாய் பின்பற்றத் துவங்கினர். இன்றைய நிலவரப்படி உலக மக்கள் தொகையில் எட்டில் ஒரு பங்கு ஜனங்கள் அதாவது *110* கோடி பேர் பாப்பரசரின் அதிகாரத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அதே வேளையில், இதே போன்ற சாவுக்கேதுவான காயமும், அது சொஸ்தமாக்கப்படுதலும், ஜனங்கள் ஆச்சர்யத்தோடு அதைப் பின்பற்றுகிற காரியங்களும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்திலும் நடக்க இருக்கின்றது என்று வேத வல்லுநர்கள் விவரிக்கின்றனர். அந்திகிறிஸ்து எழும்பி அவனுடைய சாம்ராஜ்யம் பூமி முழுவதும் ஆளுகைக்கு வருகையில், மூன்றரை ஆண்டுகளில் அவனது ஆட்சியில் ஒரு பெரிய மாற்றம் வரும். இந்த மூன்றரை ஆண்டுகளில் அவனது அரசாட்சிக்கு பெரிய விதமான எதிர்ப்புகள் தோன்றும். சொல்லப்போனால் இரண்டு சாட்சிகளின் ஊழியத்தின் மூலமாக அவனது ஆட்சிக்கு பெரிய பின்னடைவு ஏற்படும். வெளி *11*-ல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த இரண்டு சாட்சிகளும் அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்வதினால் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்குப் பெரும் சவாலாக இருப்பார்கள். ஆனாலும் அந்த இரண்டு சாட்சிகளையும் அவன் மேற்கொண்டு தன் அரசாட்சியை ஸ்திரப்படுத்துவான். முதல் மூன்றரை ஆண்டு காலத்தில் இது சம்பவிக்கும். இதன் விளக்கம் வெளி – *13:7*-ல் தரப்பட்டுள்ளது.




**மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல்...**

இவ்வசனத்தை தவறாக புரிந்து கொள்பவர்கள் அநேகர். பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் சபையானது உபத்திரவ காலத்திற்குள்ளாக கடந்து போகும் என்றும், அந்திகிறிஸ்துவானவன் சபையை மேற்கொள்ளுவான் என்றும் அநேகர் தவறாக புரிந்து கொள்கின்றனர். இவ்வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்தவான்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்து சபையின் பரிசுத்தவான்கள் அல்லர். அவர்கள் யாரெனில் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தில் ஊழியம் செய்ய இருக்கின்ற இரண்டு சாட்சிகளும், அவர்களைப் பின்பற்றப்போகும் ஒரு இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் இஸ்ரவேல் ஜனங்களுமே ஆவர். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் என்று நியாயப்பிரமாண கால பரிசுத்தவான்கள் அழைக்கப்படுவது போல, இவர்களும் உபத்திரவகால பரிசுத்தவான்கள் எனப்படுகின்றனர். இவர்களைத்தான் அந்திகிறிஸ்து மேற்கொள்ளுவான். அவனது

ஏழாண்டு கால ஆட்சியில் முதல் மூன்றரை ஆண்டுகளில் பூமியின் குடிகளைத் தன் வசப்படுத்த அநேக பொய்யான அற்புதங்களையும், அடையாளங்களையும், காரியங்களையும் அவன் செய்தாலும் *(2 தெச 2:9)*, மேற்கண்ட இரண்டு சாட்சிகளின் ஊழியத்தால் அவனுக்கு பெருத்த பின்னடைவு ஏற்படும். இவ்விரு சாட்சிகளையும் அவன் ஜெயித்தவுடன் பூமியின் ஜனங்கள் ஆச்சரியத்தோடே அவனைப் பின்பற்றுவார்கள். இதுவே வெளி – *13:4*-ன் விளக்கம்.

**பாப்பரசரின் ஆட்சிக்காலத்தையும், அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தையும் இணைக்கும் ஓர் ஒப்பீடு:**

- கி.பி.*538*-ல் பாப்பரசர் பத்து நாடுகளின் ராஜாவாக ஒருங்கிணைக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யம் எழும்பி வந்தது.
- கி.பி.*1798*-ல் சாவுக்கேதுவான காயம் – நெப்போலியன் பாப்பரசரை சிறைபிடித்தல்
- கி.பி.*1929*-ல் சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது – முசோலினி பாப்பரசரை வாடிகனின் ராஜாவாக அறிவித்தல்
- ஜனங்கள் ஆச்சரியத்தோடே பாப்பரசரைப் பின்பற்றுதல்
- கி.பி.*1951*-ல் ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு பத்து நாடுகளோடு கூட எழும்பி வந்தது.
- அந்திகிறிஸ்து வெளிப்படுதல்
- முதல் மூன்றரை வருடங்களில் யுத்தங்கள் மூலம் உலகம் முழுவதையும் பிடித்தல்
- இரண்டு சாட்சிகளின் ஊழியத்தால் பின்னடைவு – சாவுக்கேதுவான காயத்தைச் சந்தித்தல்
- அந்திகிறிஸ்து அவ்விரு சாட்சிகளையும் கொன்று தன் ஆட்சியை ஸ்திரப்படுத்தல் – சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்படல்
- ஜனங்கள் அந்திகிறிஸ்துவை ஆச்சரியத்தோடே பின்பற்றுதல்.

**வெளி *13:5* - பெருமையானவைகளையும், தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது. அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.**

தூஷணமான நாமம் என்றால் என்னவென்று கடந்த அத்தியாயங்களில் முதல் வசனத்தின் விளக்கத்தில் பார்த்தோம். மேற்கண்ட வசனம் குறிப்பிடுகின்ற பெருமையானவைகளைப் பேசும் வாய் என்பதும், வெளி – *13:2* குறிப்பிடும் சிங்கத்தின் வாய் என்பதும் ஒரே காரியத்தைத் தான் உணர்த்துகின்றன. சிங்கம் என்பது தானியேல் *7*-ம் அதிகாரத்தின்படி பாபிலோனிய சாம்ராஜ்யத்தைக் குறிக்கும். பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பெருமையாய்ப் பேசின காரியம் தானியேல் *4*-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ***“ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா”*** என்று பெருமையாய் சொன்ன வேளையில், இந்த வார்த்தை அவன் வாயில் இருக்கும்போதே அவன் மனுஷரினின்று தள்ளப்பட்டதை தானி – *4:31,32* விவரிக்கின்றது.

அந்திகிறிஸ்துவும் இவைகளுக்கு ஒப்பாக பெருமையானவைகளைப் பேசி, பரலோகத்தின் தேவனுக்கு முன்பாக தன்னை உயர்த்துவான்.

**அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்தத் தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி... *(தானியேல் - 11:37)***

**அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். *(2 தெசலோனி – 2:4)***

மேற்கண்ட வசனங்களின் படி அந்திகிறிஸ்துவானவன் தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், பெருமையானவகளைப் பேசுகிறவனாயும் இருப்பான். மேலும் வெளி – *13:5*-ல் தொடர்ச்சியாக அந்திகிறிஸ்து நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. ஒரு வருடத்திற்கு பன்னிரு மாதங்கள், இரண்டு வருடங்களுக்கு இருபத்து நான்கு மாதங்கள், மூன்று வருடங்களுக்கு முப்பத்து ஆறு மாதங்கள், மூன்றரை வருடங்களுக்கு நாற்பத்திரண்டு மாதங்கள்.

அதாவது அவனது ஆட்சிக் காலமான ஏழு வருடங்களில் முதல் மூன்றரை வருடங்கள் அவன் கடுமையாய் யுத்தம் செய்வான். அது மட்டுமல்லாது அவன் யுத்தத்தின் மூலமாக பூமியின் ஜனங்கள் அத்தனை பேரையும் தன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வருவான் என்று வெளி – *13:7* குறிப்பிடுகின்றது.

**மேலும் பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல் ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர் மேலும் ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.**

இப்படியாக பூமியின் குடிகளில் ஒருவரும் தப்பிப் போகாதபடிக்கு அத்தனை பேரும் அந்திகிறிஸ்துவின் கைகளில் முதல் மூன்றரை ஆண்டுகளுக்குள்ளாக ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். மேலும் வெளி - *13:2*-ன் படி அந்திகிறிஸ்துவின் சாம்ராஜ்யம் சிறுத்தைக்கு ஒப்பான கிரேக்க சாம்ராஜ்யத்தைப் போல மிக வேகமானதாக இருக்கப்போவதை கடந்த அத்தியாயங்களில் விரிவாகக் கண்டோம். கிரேக்க தேசத்தின் இராஜாவான அலெக்ஸ்சாண்டர் உலகம் முழுவதையும் தன் ஆளுகைக்குக் கீழாகக் கொண்டுவர விரும்பினான். ஆனால் அது கூடாமற் போயிற்று. *11* வருடங்களில் உலகத்தின் *70* சதவீதப் பகுதிகளைத் தன் ஆளுகைக்குக் கீழாகக் கொண்டுவந்தான். ஆனால் அந்திகிறிஸ்துவோ வெறும் மூன்றரை ஆண்டுகளுக்குள்ளாக உலகத்தின் அத்தனை தேசங்களையும், அத்தனை கோத்திரத்தாரையும், பாஷைக்காரரையும், ஜனங்களையும் தன் ஆளுகைக்குக் கீழாகக் கொண்டுவருவான். அவனது வல்லமையை உயர்த்திக்கூறும்படிக்கு இதைக் குறிப்பிடவில்லை. தேவன் தாமே பூமியை அவன் கையில் ஒப்புக் கொடுக்கிறார். அவர்தான் இராஜாக்களைத் தள்ளி இராஜாக்களை உருவாக்குகிறவர். பூமியின் கடைசி அத்தியாயத்தை அந்தி கிறிஸ்துவை வைத்து தேவன் எழுதுகிறார்.

**வெளி *13:10* - சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப் போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும், விசுவாசமும் இதிலே விளங்கும்.**

அந்திகிறிஸ்துவானவன் முதல் மூன்றரை ஆண்டுகள் யுத்தம் செய்து முழு உலகத்தையும் தன் ஆளுகைக்குக் கீழாக கொண்டுவந்து, அடுத்த மூன்றரை ஆண்டுகள் தன் இஷ்டம் போல ஆளுகை செய்வான். மேற்கண்ட வசனத்தின்படி

அந்திகிறிஸ்துவின் உபத்திரவங்களைப் பொறுமையோடே சகித்துக்கொண்டு, அவனுடைய ஆளுகைக்கு தன்னை விட்டுக்கொடாமல் தேவனுக்காகக்காத்திருக்கும் பரிசுத்தவான்களை மீட்பதற்காக, ஏழு ஆண்டுகளின் முடிவில் சகரியா - *14:4*-ன் படி தேவனாகிய கர்த்தர் ஒலிவ மலையில் இறங்கி அவனோடும், அவன் சேனைகளோடும் கூட யுத்தம்பண்ணி, அவனை ஜெயமெடுத்து பூமியிலே ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வார்.

இந்த சம்பவங்களுக்கிடையில் மிக முக்கியமான மற்றுமோர் காரியத்தை நாம் பார்க்கப் போகின்றோம். வெளிப்படுத்தின விசேஷம் *13*-ம் அதிகாரம் *11* முதல் *14* வசனங்கள் வரை பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. *15* முதல் *18* வசனங்கள் வரை சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகம் செய்யப் போகின்ற காரியங்களைக் குறித்து விளக்கப்பட்டுள்ளது. இவ்விரு பகுதிகளையும் தனித்தனியே, வரிசைக்கிரமமாகப் பார்க்க இருக்கின்றோம்.

முதலாவதாக வெளி - *13:11,12*-ல் பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருவதைக் காண இயலும்.

**பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது, வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது.**

**அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படிச் செய்தது.** சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தின் காயம் ஆறி சொஸ்தமாக்கப்பட்ட பின்பு பூமியிலிருந்து இம்மிருகம் எழும்பி வருகின்றது. இம்மிருகத்தைக் குறித்ததான காரியங்கள் *11*-ம் வசனத்தில் தான் கொடுக்கப்பட்டுள்ளபடியினாலும், அந்திகிறிஸ்துவைக் குறித்து முதல் வசனத்திலிருந்தே விளக்கப்படுகிறபடியினாலும், இம்மிருகம் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்குப் பின்பு எழும்பி வருவதாக நினைக்கலாகாது. *12*-ம் வசனத்தை பார்ப்போமானால் சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தின் ஒரு தலையில் சாவுக்கேதுவான காயம் அடைந்து, சொஸ்தமாக்கப்பட்ட பின்னர், பூமியிலிருந்து ஒரு மிருகமானது எழும்பி, முந்தின மிருகத்தை பூமியின் குடிகள் அனைவரும்

*வணங்கும்படி செய்ததாக கொடுக்கப்பட்டுள்ளது.*

*அப்படியானால் பூமியிலிருந்து எழும்பி வரும் இந்த மிருகம் எது? இது எப்போது எழும்பி வந்தது? ஆதியாகமம் 1:10 - ல் தேவன் பூமியை இரண்டாகப் பிரித்து வெட்டாந்தரைக்கு பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பேரிட்டார். சமுத்திரம் என்றால் ஜனக்கூட்டத்தைக் குறிக்கும் என்று வெளி – 17:15 கூறுகின்றது. அப்படியானால் வெட்டாந்தரை என்றால் சமுத்திரம் இல்லாத இடம் அதாவது ஜனங்கள் இல்லாத இடம் என்று பொருள். ஆகவே வெளிப்படுத்தின விசேஷத்தின்படி தண்ணீர் என்பது ஜனங்களைக் குறிக்குமானால், வெட்டாந்தரை என்பது ஜனங்கள் இல்லாத இடம் என்று அர்த்தமாகின்றது. சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருகிறதென்றால் ஜனக்கூட்டத்தின் மத்தியில் இருந்து ஒரு இராஜ்யம் எழும்பி வருகிறதென்று அர்த்தம். அப்படியானால் பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பி வருகிறதென்றால் ஜனங்கள் இல்லாத இடத்திலிருந்து ஒரு இராஜ்யம் எழும்பி வருகிறதென்று அர்த்தம்.*

*நாம் முன்பே கண்டபடி, சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தின் ஒரு தலையில் ஏற்பட்ட சாவுக்கேதுவான காயம் என்பது 1798-ம் ஆண்டு பாப்பரசர், நெப்போலியனால் சிறைபிடிக்கப்பட்ட நிகழ்வைக் குறிக்கின்றது. அப்படியானால் இந்த நிகழ்விற்குப் பின்பு தான் பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பி வர வேண்டும்.*

*1789-ம் ஆண்டிலே பாப்பரசரின் அதிகாரத்திற்கு விரோதமாக அநேக தேசங்கள் எழும்பத் துவங்கின. 1798-ல் பாப்பரசர் சிறைபிடிக்கப்பட்டார். இந்த காலகட்டத்திலே சமுத்திரம் இல்லாத அதாவது ஜனங்களே இல்லாத இடத்திலிருந்து எழும்பி வந்த இராஜ்யம் எது?*

*மேலும் 11-ம் வசனம் சொல்லுகிறபடி இந்த மிருகம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை உடையதாயிருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் 5-ம் அதிகாரத்தின்படியேயும், யோவான் எழுதின சுவிசேஷம் முதல் அதிகாரத்தில் யோவான்ஸ்நானன் கொடுத்த சாட்சியின்படியேயும் ஆட்டுக்குட்டி என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். ஆகவே பூமியிலிருந்து எழும்பின மிருகம் பார்வைக்கு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இருந்தது என்பது அந்த இராஜ்யம் பார்வைக்கு கிறிஸ்தவ நாட்டைப் போல இருக்கும் என்பதை வெளிப்படுத்துகின்றது.*

ஆனால் வெளி – *13:11*-ல் தொடர்ச்சியாக அந்த மிருகம் வலுசர்ப்பத்தைப் போல பேசுவதாகக் கூறப்பட்டுள்ளது. வெளி – *20:2*-ன் படி வலுசர்ப்பம் என்பது பிசாசைக் குறிக்கும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று வேதம் கூறுகின்றது. ஆகவே இந்த மிருகம் பார்வைக்கு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாகவும், வலுசர்ப்பத்தைப் போலவும் இருக்கும் என்பது இந்த இராஜ்யம் பார்வைக்கு கிறிஸ்தவ நாட்டைப் போலவும், உள்ளேயோ வலுசர்ப்பத்திற்குரிய குணாதிசயங்களை முழுவதும் உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு நாடு பாப்பரசர் சிறைபிடிக்கப்பட்ட பின்னர் எழும்பி வந்தது. நாம் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் நம் கண்களுக்கு முன்பாக வந்தது. அந்த தேசம் *1789*-ம் ஆண்டில் திடீரென்று எழும்பி ஒரு கிறிஸ்தவ நாட்டைப் போல காணப்பட்டு, ஆனால் சகலவிதமான அருவருப்புகளும் பூமியில் பரவுவதற்கு காரணமாக இருந்து, பிசாசினுடைய எல்லாத் திட்டங்களையும் செயல்படுத்துகின்ற நாடாகக் காட்சியளிக்கின்றது. அநேக பரிசுத்தவான்கள் கூட இந்த நாட்டை வெளியரங்கமாகப் பார்த்து நம்பி விட்டார்கள். அந்த நாடுதான் அமெரிக்க சாம்ராஜ்யம். பூமியிலிருந்து எழும்பி வருகிறதான மிருகம் என்பது இந்த அமெரிக்க சாம்ராஜ்யம் தான் என்பதை வெளி *13*-ம் அதிகாரம் *11* மற்றும் *12* வசனங்களில் இன்னும் சற்று விளக்கமாகக் காண்போம்.

*11*-ம் வசனம் கூறுகின்றபடி அது பூமியிலிருந்து அதாவது ஜனங்கள் இல்லாத இடத்திலிருந்து எழும்பி வந்தது. *1500*-களில் கொலம்பஸ் அமெரிக்க தேசத்தைக் கண்டுபிடிக்கும்போது அங்கே வெகு சொற்ப ஜனங்களே இருந்தார்கள்.

செவ்விந்தியர்கள் என்று அமெரிக்கர்களால் குறிப்பிடப்படும் மாயன் இனத்தார் என்ற பழங்குடியினர் தான் அங்கே இருந்தார்கள். புரியும் வகையில் சொல்வதென்றால், பாபிலோனிய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டபோது, அது முந்தின அசீரிய சாம்ராஜ்யத்தை முறியடித்து, ஸ்தாபிக்கப்பட்டு ஜனங்கள் மத்தியிலிருந்து எழும்பி வந்தது. மேதிய-பெர்சிய சாம்ராஜ்யம் வரும் போது பாபிலோனிய சாம்ராஜ்யத்தை முறியடித்து எழும்பினது. கிரேக்க சாம்ராஜ்யம் வரும்போது மேதிய-பெர்சிய சாம்ராஜ்யத்தை முறியடித்து எழும்பினது. ஆனால் கொலம்பஸ் அமெரிக்காவிற்கு வரும்போது, யாரையும் முறியடிக்கவில்லை.

அங்கே இருந்த மிகச் சொற்பமான செவ்விந்தியர்களை விரட்டிவிட்டு, இன்னும்

விவரமாகச் சொன்னால் கொடூரமான முறையில் கொலை செய்து விட்டு அமெரிக்க சாம்ராஜ்யம் அங்கே உருவாக வித்திட்டார். அந்த செவ்விந்தியர்கள் வெறும் வில் மற்றும் அம்புகளைக் கொண்டிருந்தனர். கொலம்பஸ் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தார்.

எப்படி தேவன் வெட்டாந்தரையையும், சமுத்திரத்தையும் தனித்தனியே பிரித்த பின்னரும், தண்ணீர் இல்லாத வெட்டாந்தரையிலும் கூட ஆங்காங்கே கொஞ்சம் தண்ணீர் நதிகளாய் காணப்பட்டது போல, கொலம்பஸ் அமெரிக்காவில் நுழையும் போது, அமெரிக்கா மிகப் பரந்த கண்டமாயினும், ஜனங்கள் நிரம்பின தேசமாயிராமல் மிகச் சொற்பமான செவ்விந்தியர்களே காணப்பட்டனர். இவர்களும் அழிக்கப்பட்டு அந்நியர்களால் அமெரிக்கா சுதந்தரிக்கப்பட்டது. வெட்டாந்தரையான பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது – ஜனங்களே இல்லாத இடத்திலிருந்து அமெரிக்க சாம்ராஜ்யம் எழும்பி வந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்குள் பிரவேசிக்கும்போது கர்த்தர் அவர்களை யுத்தத்திற்குப் பழக்குவிக்கும்படிக்கு ஐந்து ஜாதிகளை விட்டு வைத்திருந்தார். ஆனால் அமெரிக்கர்கள் தேசத்தில் நுழையும்போது அங்கே ஜனங்கள் இல்லை. அதைத்தான் வேடிக்கையாக, ***"ஜூலை 4 -ம் நாள் அமெரிக்கர்கள் சுதந்திரதினத்தை கொண்டாடுகிறார்களே, அவர்கள் யாரிடம் இருந்து சுதந்திரம் பெற்றனர் என்று தான் இன்றுவரை கேள்விக்குறியாக உள்ளது"*** என்பார்கள்.

தொடர்ச்சியாக ***"அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது"*** என்ற வசனத்தின் படி அமெரிக்கா இன்றளவும் பார்ப்பதற்கு ஒரு கிறிஸ்தவ நாட்டைப் போல தோற்றமளிக்கின்றது. வெளிப்படையாக கிறிஸ்தவத்திற்கு ஆதரவு அளிக்கக்கூடிய நாட்டைப் போலக் காணப்பட்டாலும், அவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு முற்றிலும் எதிரானவர்கள். அது மட்டுமல்லாது, பிசாசின் உபதேசங்களை முழுவதுமாக கைகொள்ளுகிறவர்கள். அதற்கு சில தெளிவான உதாரணங்களைக் காண்பிக்க இயலும். அமெரிக்காவினுடைய சட்ட திட்டங்களின்படி, அங்கே, யார் வேண்டுமானாலும், எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். எந்த மதத்தையும் விமர்சிப்பதற்கு எவருக்கும் அதிகாரம் உண்டு. குறிப்பாக இயேசு கிறிஸ்துவைக் குறித்து தரக்குறைவாக பேசுவதைத் தடுப்பதற்குக் கூட அங்கே சட்டம் கிடையாது. கேட்டால் அது மக்களின் தனிப்பட்ட உரிமை என்பார்கள்.

இந்தியாவில் இந்துக்களையோ, அரேபியா போன்ற நாடுகளில் இஸ்லாமிய மதத்தினரையோ விமர்சனம் செய்ய இயலாது. இலங்கையில் புத்த மதத்தினரை விமர்சனம் செய்ய இயலாது. அந்தந்த நாட்டில், அவரவருக்குரிய பெரும்பான்மை மதத்திற்கு ஒரு மரியாதை உண்டு. இங்கிலாந்தில் கூட கிறிஸ்தவத்தை விமர்சிப்பதற்கு அந்த நாட்டில் எவருக்கும் உரிமை இல்லை. ஆனால் கிறிஸ்தவ நாடு என்று கூறப்படும் அமெரிக்க சாம்ராஜ்யம் அப்படியல்ல. கிறிஸ்துவை தரக்குறைவாய் விமர்சிக்கின்ற எத்தனையோ திரைப்படங்கள் அங்கே வெளியாகியிருக்கின்றன.

அடுத்ததாக அமெரிக்காவில் ஆரம்ப காலத்தில் ஆபிரகாம் லிங்கன் போன்ற ஒரு சில ஜனாதிபதிகள் கிறிஸ்தவர்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருந்தனர். ஆனால் அதற்குப் பிற்பாடு வந்த ஜனாதிபதிகள் கிறிஸ்தவத்திற்கு எதிரிடையாக செயல்படத் துவங்கினார்கள். அதிலும் மிக முக்கியமாக, பள்ளிக்கூடங்களில் வேதாகமப் பாடங்கள் கற்றுத்தரப்படுதல் ஜான்.எப்.கென்னடி *(John F.Kennedy)* காலத்தில் நிறுத்தப் பட்டது. பிள்ளைகளுக்கு வேதத்தைக் கற்றுத்தரும்படி வேதம் கூறுகின்றது. ஆனால் பிள்ளைகளுக்கு வேதம் கற்றுத்தருவது நிறுத்தப்பட்டபடியினாலே அங்கே வளருகின்ற தலைமுறை வேதத்தை அறியாத தலைமுறையாய், வேதத்திற்கு விரோதமான தலைமுறையாய் வளர்ந்து நிற்கின்றது. குறிப்பாக பள்ளிக்கூடங்களில் துப்பாக்கிக் கலாச்சாரம் வளர்ந்து பிள்ளைகள் அநேகரை கொலை செய்வதை இன்றளவும் செய்திகளாக கேள்விப்பட்டுக் கொண்டே இருக்கின்றோம்.

மூன்றாவதாக வேதம் அருவருக்கின்ற அநேக காரியங்களை, உதாரணமாக ஓரினச் சேர்க்கை, தவறான உறவுகள் எல்லாவற்றிற்கும் அமெரிக்காவில் அனுமதி உண்டு. அமெரிக்காவில் எல்லா மகாணங்களிலும் ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி தரப்பட்டுவிட்டது. மேலும், ஓரினச்சேர்க்கையை எதிர்க்கின்ற தேவ ஊழியர்களைக் கூட பிடித்து, சிறைச்சாலையில் போடுமளவிற்கு அங்கே சட்டத்தில் வழிவகை உண்டு. நாம் இது நாள்வரையில் நினைத்திருப்போம் அமெரிக்கா ஒரு கிறிஸ்தவ நாடென்று. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்காவைக் குறித்து சொல்லுகையில், “இது கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், இந்துக்கள், நாத்திகர்கள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களின் நாடு *(This is the country of Christians, Muslims, Hindus, Atheists and Homosexuals)*” என்று அறிவித்தார்.

சில பரிசுத்தவான்களுக்கு, அமெரிக்காவின் டாலரில் கூட *IN GOD WE TRUST* என்று பதிக்கப்பட்டுள்ளதே என்று ஒரு ஐயம் தோன்றலாம். இந்த *GOD*-க்குப் பின்னால் என்ன இருக்கின்றது? அவர்கள் குறிப்பிடுகின்ற *GOD* எது? அவர்கள் *IN CHRIST WE TRUST* என்று பதிக்கவில்லை, *IN JESUS WE TRUST* என்றும் பதிக்கவில்லை. பொதுவாக *GOD* என்று பதிப்பித்திருக்கின்றனர். இதில் *GOD* என்று எதை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். செய்யும் தொழிலே தெய்வம் என்று தொழிலை தெய்வமாக வைத்துக் கொள்ளலாம். சிலருக்கு பணம் தான் தெய்வம், ஆகவே அந்த இடத்திலே பணத்தை வைத்துக் கொள்ளலாம். அந்த இடத்திலே எவரையும் வைக்க இயலும். மனிதர்களை வைத்துக் கொள்ள முடியும். ஆனாலும் இவர்கள் குறிப்பிடுகின்ற *GOD* என்பது எதைக் குறிக்கின்றது என்பதை விளக்க தற்போது சமயமில்லை.

அமெரிக்காவில் தான் முதல் முறையாக *Houston* நகரில் சாத்தானுக்கென்று ஆலயம் கட்டப்பட்டது. இதுவரையில் சாத்தான் வழிபாட்டுக்காரர்கள் மறைவாக ஆராதித்துக் கொண்டிருந்தனர். பல நாடுகள் மறைமுகமாக சாத்தான் வழிபாட்டிற்கு ஆதரவு அளித்தாலும், எந்தவொரு நாடும் வெளியரங்கமாக, நேரடியாக இவர்களுக்குத் துணை போகவில்லை. ஆனால் உலகத்திலேயே சாத்தான் வழிபாட்டிற்கென்று நேரடியாக சட்டத்தை இயற்றி, அவர்களுக்கு அனுமதி அளித்த நாடு அமெரிக்காதான். இதைத்தான் வெளி - 13:4, **"அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள்"** என்று குறிப்பிடுகின்றது.

வரப் போகின்ற அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் நேரடியாக சாத்தான் வழிபாடு உலகம் முழுவதும் இருக்கும். இந்த வழிபாட்டிற்கு ஆயத்தப் பணியை செய்து வைத்தது அமெரிக்கா தான். இப்படி அமெரிக்க சாம்ராஜ்யத்தின் அருவருப்புகளை எழுதிக் கொண்டே போகலாம். அங்கே இருக்கக்கூடிய தேவ ஊழியர்களே அமெரிக்காவை மகா பாபிலோன் என்று எழுதுகின்றனர். பாபிலோனுக்கும், அமெரிக்காவிற்கும் அநேக ஒற்றுமைகள் உண்டு.

இந்த அமெரிக்க சாம்ராஜ்யம் எழும்பி வந்தது 1789-ம் ஆண்டில்தான். அதுவரையில் அமெரிக்கா ஒரு வல்லரசாக இல்லை. சொல்லப்போனால் ஒரு சாம்ராஜ்யமாகவே இல்லை. ஆளும் தலைவர்கள் இல்லை. 1781 வரையில் அமெரிக்கா ஒரு நாடாக நிலை நிறுத்தப்பட மிகப்பெரிய பல போராட்டங்களைச் சந்தித்தது. தேசம்

பண முதலாளிகள் கையில் இருந்தது. அவர்கள் அமெரிக்காவை உருவாக்க ஆரம்பித்தனர். ஜனாதிபதிகள் ஆளும் முறை கொண்டுவரப்பட்டு, 1781-ம் ஆண்டில்தான் முதல் ஜனாதிபதி வந்தார். 1789-ம் ஆண்டில்தான் இப்போதுள்ள நான்கு ஆண்டுகளுக்கு ஒரு ஜனாதிபதி என்ற முறை அமலுக்கு வந்தது. அந்த சட்டத்தின்படி அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக வந்தவர்தான் ஜார்ஜ் வாஷிங்டன்.

இப்போதுள்ள அமெரிக்க டாலர் நோட்டுகள் அனைத்தும் அப்போது வடிவமைக்கப்பட்டவையே. 1789-ம் ஆண்டு எழும்பி வந்ததான அமெரிக்க சாம்ராஜ்யம் 1929-ல் பாப்பரசர் மீண்டும் வாடிகனின் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பின்பு, 1930-ல் தான் உலக வல்லரசாக அறிவிக்கப்பட்டது. எப்படியென்றால் 1920 முதல் 1930 வரை பூமியில் பெரும் பஞ்சம் நிலவியது. 1930 வரை உலக வல்லரசாக இருந்த ஆங்கிலேய சாம்ராஜ்யம் படைபலத்தோடு இருந்தபோதிலும், அதன் பண மதிப்பு மிகவும் பாதிக்கப்பட்டது. அந்த பஞ்சத்தின் விளைவாக இங்கிலாந்தின் பவுண்டை எடுத்துவிட்டு, உலகத்தின் மையப்பணமாக அமெரிக்க டாலரை கொண்டு வர விரும்பினர்.

1931-ம் ஆண்டு உலக கவுன்சில் உட்கார்ந்து IMF (International Monetary Fund) உலகத்தின் மையப் பணமாக, இங்கிலாந்தின் பவுண்டிற்கு மாற்றாக அமெரிக்காவின் டாலரை மையப் பணமாக அறிவித்தார்கள். மிகச் சரியாக 70 வருடங்கள் உலகத்தின் மையப் பணமாக அமெரிக்க டாலர் இருந்தது. 1931-ல் இந்த உலக வல்லரசு தன் பிரயாணத்தைத் துவங்கிற்று. அதாவது பூமியிலிருந்து ஒரு மிருகம் எழும்பியது.

எழும்பி நின்ற இந்த மிருகம், முந்தின மிருகத்திற்கு முன்பாக தனது சகல அதிகாரத்தையும் நடப்பித்தது என்று 12-ம் வசனத்தில் காண்கின்றோம். பாப்பரசரின் அதிகாரம் 1929-ல் மீண்டுமாக வந்தது. அமெரிக்க சாம்ராஜ்யம் 1931-ல் எழும்பி வந்தது. இந்த ஒற்றுமையை கவனித்துக் கொண்டே வருவோம். 1789-ல் பாப்பரசருக்கு எதிராக கிளர்ச்சி துவங்கிற்று. 1789-ல் தான் அமெரிக்க சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த சம்பவங்களுக்குப் பிறகு அமெரிக்கா உலக வல்லரசாக மாறி ஐ.நா சபை ஸ்தாபிக்கப்பட்டு, அமெரிக்காவின் ஆதிக்கம் வளர்ந்த பிறகு, அமெரிக்கா சொல்வதெல்லாம் சட்டமாக மாறிக் கொண்டு வந்த வேளையில், 1990-களில் ஜார்ஜ் சீனியர் புஷ் என்று அழைக்கப்பட்ட அமெரிக்காவின் ஜனாதிபதிக்கு ஒரு ஆசை

ஏற்பட்டது. என்னவென்றால் உலகம் முழுவதயும் அமெரிக்காவின் ஆளுகைக்குகீழ் கொண்டுவர வேண்டும் என்பதே. இது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைகளில் ஒன்று. ஆனால் அமெரிக்க சாம்ராஜ்யத்திற்கு போட்டியாக *1990* வரைக்கும் சோவியத் ரஷ்ய கூட்டமைப்பு *(Union Soviet Socialist Republic)* எழும்பி வளர்ந்து நின்றது. இது அமெரிக்காவிற்கு பெரும் சவாலாக இருந்துவந்தது.

தொழிற்புரட்சி, விண்வெளி ஆராய்ச்சி, இராணுவ பலம், விளையாட்டு மற்றும் தகவல் தொடர்பு என எல்லாத் துறைகளிலும் அமெரிக்காவிற்கு ஈடாக ரஷ்யா போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வந்தது. அது மட்டுமல்லாது பல துறைகளில் பல்வேறு தருணங்களில் அமெரிக்காவை மிஞ்சத் துவங்கியது.

இது அமெரிக்காவிற்கு பெருத்த பின்னடைவாகக் காணப்பட்டது. ஆனால் *1990*-களில் மைக்கேல் கார்பச்சேவ் *(Mikhail S.Garbachev)* என்ற ரஷ்யாவின் ஜனாதிபதி அதின் கம்யூனிஸத் திரையை விலக்கி ஜனநாயகத்திற்கு கதவைத் திறக்கிறேன் என்று சொல்லி பெரஸ்ட்ரோயிக்கா *(Perestroika)* என்ற புதிய சட்டத்தை இயற்றினார். அதின் மூலமாக ரஷ்ய கம்யூனிஸ கட்டுக்கோப்பு உடைந்து அங்கே பொருளாதார வீழ்ச்சி துவங்கிற்று. இந்த பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக விளாடிமர் லெனினால் *(Vladimir Lenin)* ஒருங்கிணைக்கப்பட்டு வளர்ந்து நின்ற சோவியத் ரஷ்ய கூட்டமைப்பு, சிதறுண்டு பல நாடுகளாக பிரிவுற்றது. அமெரிக்க சாம்ராஜ்யத்திற்கு ஒரே போட்டியாக இருந்த சோவியத் ரஷ்ய கூட்டமைப்பு உடைந்து, ரஷ்யா என்ற தனி நாடாக மாறியது.

ஒரே நாடு உலகம் முழுமைக்கும் வல்லரசாக இருக்க வேண்டுமானால் அந்த நாட்டின் ஜனாதிபதி அல்லது ராஜாதான் உலகம் முழுவதும் ஆளுகை செய்ய வேண்டும் - *One King.*

- இரண்டாவதாக ஒரே மதம் இருக்க வேண்டும் – *One Religion.*
- மூன்றாவதாக ஒரே மொழி இருக்க வேண்டும் – *One Language.*
- நான்காவதாக ஒரே பணம், ஒரே வர்த்தகம் காணப்பட வேண்டும் – *One Economy.*
- இதற்கு புதிய உலக ஒழுங்குப் பின்னணி *(New World Order)* என்று பெயர். இந்த

புதிய உலக ஒழுங்குப் பின்னணியை அமெரிக்கா ஸ்தாபிக்க விரும்பியது. எப்படி கிரேக்க சாம்ராஜ்யம், ரோம சாம்ராஜ்யம், பாப்பரசர் சாம்ராஜ்யம் பூமியை ஆண்டதோ, அதுபோல தன்னுடைய சாம்ராஜ்யமும் எல்லைகளை விரிவாக்கி உலகம் முழுவதும் ஆளுகை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா விரும்பியது. இதற்குத் தடையாக அந்நாள் வரையில் இருந்து வந்தது சோவியத் யூனியன். இப்போது அதுவும் சிதறடிக்கப்பட்டாயிற்று. இப்போது உலகம் முழுவதும் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த அமெரிக்காவிற்கு பிரகாசமான ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.

இரண்டாவதாக உலகம் முழுவதும் ஒரே மொழியாக ஆங்கிலம் கொண்டு வரப்பட்டது. மூன்றாவதாக உலகம் முழுவதும் ஒரே மையப் பணமாக அமெரிக்காவின் டாலர் கொண்டுவரப்பட்டது. இவை எல்லாம் சாதகமாக்கப்பட்டாயிற்று. அடுத்ததாக உலகம் முழுவதும் ஒரே மதம் இருக்க வேண்டும். உலகம் முழுவதும் ஒரே மதத்தை ஸ்தாபிப்பதற்கு அமெரிக்கா ஒரு நூதனமான முறையைக் கையாண்டது. *1991*-ம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியான சீனியர்.புஷ் எனப்பட்ட *George H.W.Bush* திடீரென்று அப்போதைய பாப்பரசர் ஜான் பால் *II*-ஐ சந்தித்து தன்னுடைய *New World Order*-க்கான திட்டத்தை முன்வைத்தார்.

முந்தின மிருகம் அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் முந்தின மிருகத்தின் நோக்கம் என்னவென்றால் பாப்பரசரின் அதிகாரம் பூமியெங்கும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் அமெரிக்காவின் நோக்கமோ உலகம் முழுவதையும் தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே. மதத்திற்கு மாத்திரம் பாப்பரசர் தலைமையில் ரோமன் கத்தோலிக்கத்தை உலகம் முழுவதும் ஒரே மதமாகக் கொண்டு வர வேண்டும் என விரும்பியது. இது முற்றிலும் வேதத்திற்கு புறம்பானது. ஆனால் பாப்பரசரும் இதற்கு சம்மதித்தார். ஆனால் சீனியர்.புஷ்ஷின் பதவிக் காலம்


பாப்பரசர் வெள்ளை மாளிகை விஜயம்

முடிவுற்றது. அவருக்குப் பின்னர் பில் கிளிண்டர் வந்தார். அவரது ஆட்சியிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜூனியர் புஷ்ஷான ஜார்ஜ் டபிள்யூ புஷ் *(George W. Bush) 1999*-ம் ஆண்டு வியத்தகு காரியம் ஒன்றைச் செய்தார்.

அப்போது பாப்பரசராக இருந்த பெனடிக்ட் *XVI* என்பவரை *2004*-ல் வெள்ளை மாளிகைக்கு அழைத்து ஒரு கூட்டுப் பிரார்த்தனையை நடத்தினார். இதில் ஆச்சர்யமான காரியம் என்னவென்றால் ஜனாதிபதி புஷ் ஒரு மெத்தடிஸ்ட் கிறிஸ்தவர், பாப்பரசரோ ரோமன் கத்தோலிக்கர். மெத்தடிஸ்ட் என்பது மார்ட்டின் லூதரின் மூலம் உண்டான பிரிவினைக்காரர்களின் *(Protestants)* ஒரு பிரிவு. பாப்பரசரின் அதிகாரத்திலிருந்து பிரிந்த மெத்தடிஸ்ட் பிரிவு மீண்டும் அவரோடு இணைந்தது. அதற்கான கோப்புகளில் புஷ் கையெழுத்திட்டார். பாப்பரசர் ஒரு மிகப் பெரிய கிறிஸ்துவின் சிலையைக் கொண்டுவந்து வெள்ளை மாளிகையில் வைத்தார். அது பாப்பரசரின் அதிகாரம் மீண்டும் அமெரிக்காவில் வந்துவிட்டதற்கான அடையாளம்.

அதின் பின்னர் உலகம் முழுவதும் ஒரே மதத்தை நிறுவும்படி, இருக்கின்ற எல்லா மதங்களையும் இணைக்கின்ற பொறுப்பை பாப்பரசரின் கையில் ஒப்படைத்தனர். அதிலும் குறிப்பாக உலகம் முழுவதும் இருக்கக்கூடிய அத்தனை கிறிஸ்தவப் பிரிவினரும், அவர்களின் ஸ்தாபனங்களும் ரோமன் கத்தோலிக்கத்தோடு



வெள்ளை மாளிகையில் விக்கிரகம்

**CHURCHES AGREE THAT POPE HAS OVERALL AUTHORITY**

•**THE Pope was recognised as the overall authority in the Christian world** by an Anglican and Roman Catholic commission yesterday which described him as a "gift to be received by all the Churches". **...if a new united Christian Church was created it would be the 'Bishop of Rome who would exercise a universal primacy**. The 43-page document, The Gift of Authority, has been produced by the 18-member Anglican-Roman Catholic International Commission, after five years of debate.

•The commission concluded that the Bishop of Rome had a "**specific ministry concerning the discernment of truth**" and accepted that **only the Pope had the moral authority to unite the various Christian denominations**. Mark Birchall, a member of the Church of England Evangelical council, said: "It speaks as if the Bishop of Rome has always been on the side of the angels while it is well known that for several centuries past the Bishop of Rome was certainly not." The Rt Rev Cormac Murphy-O'Connor, Bishop of Arundel and Brighton and the other co-chairman, added: "The primacy of the Pope is a gift to be shared." *- Electronic Telegraph-UK News May 13, 1999 Oliver Poole* http://www.freerepublic.com/

இணைக்கப்படத் துவங்கின. அதன் பின்னர்தான் பல சினாடுகள் *(Synods)* வரத் துவங்கின.


இந்தியாவிலும் கூட திடீரென்று சினாடுகள் என்ற பெயரில் ஊழியர்களின் ஒருங்கிணைப்பு கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருவதின் அடிப்படைக் காரணம் இது தான். ஆனால் இதனை அறியாமல் ஆவிக்குரிய ஊழியர்களும் கூட ரோமன் கத்தோலிக்கர்களோடு கூட சினாடு என்ற பெயரில் இணைந்து தேசத்திற்காக, தங்கள் தேவைகளுக்காக அரசாங்கத்தை நாடுகின்றார்கள். இது முழுக்க முழுக்க வேதத்திற்கு புறம்பானது.

இந்த சினாடுகளிலே கர்த்தருடைய கிருபை இருக்காது. இவை எல்லாவற்றையும் இணைத்து பாப்பரசரின் கீழ் மதரீதியாகவும், அமெரிக்காவின் கீழ் அரசியல் ரீதியாகவும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சீனியர் புஷ் தனது இந்த முயற்சிகளின் மூலமாக அமெரிக்காவின் இத்தகைய வெளியுறவுக் கொள்கையை உறுதிப்படுத்தினார்; பில் கிளிண்டன் அதனை வழிநடத்தினார்; ஜூனியர் புஷ் அதற்கான முடிவுரையை எழுதினார். ஆனால் கர்த்தருடைய திட்டம் இதுவல்ல.

ஒரு புறம் அமெரிக்கா தனது இராணுவ பலத்தின் மூலமாக உலகத்தின் நாடுகள் மேல் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்க, பாப்பரசர்கள் ஜான்பால் *II*, பெனடிக்ட் *XVI*, பிரான்சிஸ் முதலியோர் அனைத்து மதங்களையும் இணைக்கக்கூடிய வேலையில் தீவிரமாய் ஈடுபட்டனர். ஆனால் அமெரிக்காவின் ஒரு உலக ஒழுங்குப் பின்னணி கனவு தற்போது ரஷ்யாவால் மீண்டும் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒபாமா காலத்தில் இந்த கனவு கலைந்தது.

ஆனால் முந்தின மிருகமாகிய பாப்பரசரின் அதிகாரம் மட்டும் அவர்கள் நினைத்தபடி வளர்ந்து கொண்டே இருக்கின்றது. எல்லா கிறிஸ்தவப் பிரிவுகளும் பாப்பரசரின் தலைமையில் இணைக்கப்படுவது மட்டுமல்ல எல்லா மதங்களையும் இணைக்கும் ஒரே மதக் கொள்கையில் அவர்கள் கணிசமான முறையில் வெற்றி கண்டுள்ளனர்.

இனி வெளி *13:11-12* வசனங்களின் தீர்க்கதரிசன வார்த்தைகள் வரலாறாய் நம் கண்களுக்கு முன்பாக விரியப் போகின்றது.



# 7

இந்த அத்தியாயத்தை *13-ம்* அதிகாரத்தின் *13-ம்* வசனத்திலிருந்து துவங்க இருக்கின்றோம்.

**அன்றியும், அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து....**

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணுகிற காரியத்தினை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்பதை விவரமாக அறிந்து கொள்வதற்கு முன்பாக ஏன் வானத்திலிருந்து அக்கினியை பூமியின் மேல் இறக்கப் போகிறார்கள் என்பதற்கான காரணங்களை தெரிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் காரிய சித்தியை விட காரண யுக்தியே வெகு முக்கியம். ஆராய்ந்து பார்ப்போமானால் இரண்டு காரணங்களுக்காகத்தான் வானத்திலிருந்து அக்கினி இறக்கப்படப் போகிறது.

**“ “ஏனெனில் காரிய சித்தியை விட காரண யுக்தியே வெகு முக்கியம்.” ”**

இயேசு கிறிஸ்துவின் சபை எடுத்துக் கொள்ளப்படுதலுக்குப் (இரகசிய வருகை) பின் வரப் போகின்ற ஏழு ஆண்டுகாலம் என்பது நியாயப்பிரமாண காலம். அதாவது தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தின் 9-ம் அதிகாரம் 24 முதல் 27 வசனங்கள் வரை கூறப்பட்டுள்ள 70 வாரக் கணக்கின்படி இஸ்ரவேல் ஜனங்களுக்கு இன்னும் ஏழு ஆண்டுகள் மட்டுமே மீதம் உள்ளன. இதைக் குறித்து விவரமாக எழுத தற்போது சமயம் வாய்க்கவில்லை. கர்த்தருக்குச் சித்தமானால் இந்த எழுபது வாரங்களைக் குறித்து இன்னொரு புத்தகத்தில் விரிவாகக் காண்போம். மீதமுள்ள இந்த ஏழு ஆண்டுகளும் நியாயப்பிரமாண காலமாயிருக்கிறது. நாம் இப்போது இருப்பதோ கிருபையின் காலத்தில். நமக்குரியதோ கிருபையின் பிரமாணம்.

நியாப்பிரமாணத்திற்கும், கிருபையின் பிரமாணத்திற்கும் அநேக வேறுபாடுகள் உண்டு. நியாயப்பிரமாணம் பழிவாங்குதலைக் குறித்து பேசுகிறது. கிருபையின் பிரமாணம் மன்னிப்பைக் குறித்துப் பேசுகிறது. நியாயப்பிரமாணத்திலே பாவம் மூடப்பட்டது. கிருபையின் பிரமாணத்திலே பாவம் மன்னிக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் வந்தது. கிருபையின் பிரமாணமோ ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் வந்தது. நியாயப்பிரமாணத்திலே நாம் பலிபீடத்தண்டையிலே நிற்க இயலும். ஆனால்

கிருபையின் பிரமாணத்தில்தான் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள்ளே, கிருபாசனத்தண்டையிலே கிட்டிச்சேர்கின்றோம். எஞ்சிய ஏழு ஆண்டுகளும் இந்த நியாயப்பிரமாண காலத்திற்குரியவை. அக்காலத்தில் யூதர்களே தேவனுடைய ஜனங்களாக பூமியில் இருப்பார்கள்.

இதனை நாம் இன்னும் தெளிவாகப் பார்ப்போமானால் ஆரம்பம் முதல் அதாவது ஆபிரகாம் காலத்திலிருந்து யாக்கோபின் காலம் வரை எபிரெயர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தனர். அதன் பின்பு யாக்கோபின் சந்ததியாகிய பன்னிரு கோத்திரங்களும் தெரிந்து கொள்ளப்பட்டாலும் யூதா கோத்திரத்தோடு கூட தேவனுடைய பிரமாணம் இருந்தது. அதன் பின்பு நியாயப்பிரமாணம் முடிவடைகிற வரைக்கும் அதாவது இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுகிற வரைக்கும் தேவனுடைய ஜனங்களாக இந்த யூதர்கள் இருந்தனர். அவர்களின் பிரமாணமாக நியாயப்பிரமாணம் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் புறஜாதியார் என்று அதுவரையில் அழைக்கப்பட்ட நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றப்பட்டு இப்போது தேவனுடைய ஜனங்களாய் இருக்கின்றோம்.

இப்போது கிருபையின் பிரமாணம் நம்மிடத்தில் இருக்கின்றது. அதோடு கூட வேதாகமம், தேவாராதனை, வாக்குத்தத்தங்கள் யாவும் நம்மிடத்தில் தான் உள்ளன. எப்படி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயப்பிரமாணத்தை யூதர்கள் கையில் கொடுத்துவிட்டு, அதை ஏற்றுக்கொள்ளுகிற அந்நியனுக்கும், உனக்கும் ஒரே பிரமாணம் என்று யூதர்களுக்குச் சொல்லப்பட்டதோ *(எண்ணாகமம் 15:16)*, அதைப்போல, கிருபையின் பிரமாணத்தை புறஜாதியாரின் கையில் கொடுத்துவிட்டு, அதை ஏற்றுக்கொள்ளுகிற யூதர்களுக்கும், நமக்கும் ஒரே பிரமாணம் என்று தேவன் மாற்றியமைத்திருக்கின்றார். அதற்கு ஒரு ஆதாரமாக முதலாம் தேவாலயம் பென்யமீன் கோத்திரம் வாசம்பண்ணுகிற எருசலேமில் சாலமோனால் கட்டப்பட்டது.

தேவாலயம் இஸ்ரவேலுக்குள் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு சபையின் காலத்தில், வெளிப்படுத்தின விசேஷத்தில் ஆவியானவர் சபைகளுக்கு பேசும் போது எபேசு சபை முதல் லவோதிக்கேயா சபை வரையிலான ஏழு சபைகளில் ஒன்று கூட இஸ்ரவேல் தேசத்தில் இல்லை. இந்த சபைகள் அனைத்தும் இஸ்ரவேலுக்கு வெளியில் துருக்கியில் *(கான்ஸ்டாண்டின் நோபிள்)* ஆசியாமைனர் பகுதியில் இருந்தன. இது எதைக் காட்டுகிறது என்றால்

தேவனுடைய வாசஸ்தலமானது தற்போது இஸ்ரவேலை விட்டு வெளியே புறப்பட்டு புறஜாதிகளாகிய நம் மத்தியில் உள்ளது. யூதர்கள் நம்முடைய கிருபையின் பிரமாணத்தோடு இணைய வேண்டி உள்ளது. அப்போது தான் அவர்களுக்கு மீட்பு.

இயேசு கிறிஸ்துவினால் உண்டான கிருபையின் பிரமாணம் முடிவடைந்தவுடன் அதாவது சபையின் காலம் முடிவடைந்தவுடன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மீதம் உள்ளதான ஏழு ஆண்டுகள் பூமிக்கு வரும். இந்த ஏழு ஆண்டுகளைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் *12*-ம் அதிகாரத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

*வெளி - 12:6*

**ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.**

மேற்கண்ட வசனத்தின்படி ஸ்திரீயானவள் அதாவது சபையானது ஆயிரத்திருநூற்றறுபது நாள் ஓடிப் போவதாகக் கூறப்பட்டுள்ளது. வேதாகம கணக்கின்படி ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள். ஆயிரத்திருநூற்றருபது நாட்கள் என்பது மூன்றரை வருடங்களைக் குறிக்கும்.

*வெளி – 12:14*

**ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.**

இவ்வசனத்தின்படி காலம் என்பது ஒரு வருடம், காலங்கள் என்பது இரண்டு வருடங்கள் அரைக் காலம் என்பது ஆறு மாதங்களாகும். மொத்தம் மூன்றரை வருடங்கள். இவ்விரு வசனங்களையும் இணைத்துப் பார்ப்போமானால் மொத்தமுள்ள வருடங்கள் ஏழு. இந்த ஏழு வருட நியாயப்பிரமாண காலம்தான் யூதர்களுக்கு வர இருக்கின்றது. இந்த நியாயப் பிரமாண காலத்திலே தேவ ஜனங்களாக இருக்கின்ற யூதர்களை மோசம் போக்கும்படி, பிசாசானவன் அந்திகிறிஸ்துவின் மூலம் அநேக தந்திரமான காரியங்களை நடப்பிப்பான்.

ஏனெனில் உலகத்தில் அந்த நாட்களில் இருக்கப் போகின்ற அத்தனை

ஜனங்களும் அந்திகிறிஸ்துவை தங்களுடைய ராஜாவாகவும், தங்களுடைய இரட்சகனாகவும் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். யூதர்கள் மட்டும் அதை எதிர்த்துக் கொண்டிருப்பார்கள் அல்லது வரப் போகின்ற மேசியா இவன்தானா, இல்லையா என்று சந்தேகத்துடன் காணப்படுவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யூதர்களை நம்ப வைப்பதற்கு வெளி *13*-ல் குறிப்பிடப்பட்டுள்ள வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணும் சம்பவம் தான் மிக முக்கியமாக பயன்படப் போகின்றது.

எப்படியெனில் ஏற்கனவே இப்படியொரு சம்பவம் நடந்திருக்கின்றது. *1* இராஜாக்கள் *18*-ம் அதிகாரத்தில் எலியா தீர்க்கதரிசி பாகாலின் தீர்க்கதரிசிகளை எதிர்த்து நிற்கும்போது அவர்களை நோக்கி வானத்திலிருந்து அக்கினியை இறக்கும் தேவனே மெய்யான தேவன் என்று சவால் விடுக்கின்றார். பாகால் தீர்க்கதரிசிகளும் இதனை ஏற்றுக் கொள்கிறார்கள். வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணும்படிக்கு பாகால் தீர்க்கதரிசிகள் மிகவும் போராடிக் கொண்டிருந்தும் அவர்களால் கூடாமற் போயிற்று. ஆனால் எலியாவோ அந்திப்பலி செலுத்தும் நேரத்தில் பலிபீடத்தைச் செப்பனிட்டு வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணினார் என்று *36-38* வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எலியாவின் வார்த்தைகளின்படியே வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணின கர்த்தரே தெய்வம் என்றும் பாகால் தீர்க்கதரிசிகளின் தெய்வமான பாகால், தெய்வம் அல்ல என்றும் நிரூபணமானது. இதன்மூலம் நம்முடைய தேவனின் ஊழியக்காரர்கள், நம்முடைய தேவனிடத்தினின்று அக்கினியை இறங்கப் பண்ண வல்லமை உடையவர்கள் என்று யூதர்களுக்கு அப்போதிலிருந்தே ஒரு நம்பிக்கை உண்டு.

*1* கொரி *1:11* கூறுகின்றபடி யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடுகிறார்கள்; இதன்படி யூதர்கள் எப்போதும் ஒரு அடையாளத்தை எதிர்பார்ப்பவர்களாகவே உள்ளனர் என்று வேதத்தில் அநேக இடங்களில் காண இயலும். உதாரணமாக கிதியோன் ஆண்டவரிடம் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார். மோசேக்கு தேவனால் ஒரு அடையாளம் கொடுக்கப்பட்டது. மேலும் கர்த்தர் ஏசாயா *7*-ம் அதிகாரத்தில் "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள்; அதை ஆழத்திலிருந்தாகிலும், உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள்" என்று கூறுவதோடு கூட "ஒரு

கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள்" என்று ஒரு விசேஷித்த அடையாளத்தையும் தருகின்றார். யூதர்கள் அடையாளத்தை விரும்புபவர்கள் என்பதை மேற்கண்ட வசனங்கள் வாயிலாக தெளிவாகக் காணலாம்.

இப்படி அடையாளத்தை எதிர்பார்க்கும் யூதர்களை தன்வசப்படுத்த, அவர்களிடத்தில் முன்பே செய்யப்பட்டிருந்த வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணுகிற அடையாளத்தை அந்திகிறிஸ்து செய்வான். அவ்வேளையில் அக்கினியை இறக்கக் கூடியவனை தீர்க்கதரிசியாகவும், அவன் சொல்லுகிற கடவுளை மெய்யான கடவுளாகவும் ஏற்றுக் கொள்வார்கள். இதே போன்று, உலகப் பிரகாரமாக எல்லா மதத்தினருக்குள்ளும் தங்கள் கடவுளை அக்கினியிலே பார்க்க முடியும் என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. எந்த மதத்தின் வழிபாட்டு ஸ்தலத்திற்கு சென்றாலும் அங்கே ஒரு நெருப்பு எரிந்து கொண்டேயிருப்பதைக் காணலாம்.

உதாரணமாக சீனர்களின் வீடுகளில் வாசலிலே சிவப்பு நிறத்தில் ஒரு விளக்கு எரியவிடப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். இந்துக்களுடைய வீடுகளில் அகல்விளக்கோ அல்லது குத்து விளக்கோ ஏற்றப்பட்டிருப்பதைக் காணலாம். அதுபோல கிரேக்கர்கள் மற்றும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தார் ஒரு விளக்கையோ அல்லது ஒரு மெழுகுவர்த்தியையோ எரியச் செய்வதை வழிபாட்டு முறைகளில் ஒன்றாகக் கொண்டுள்ளனர். இதற்கு மிக முக்கியமான பூர்வீகமாகக் கருதப்படுவதென்னவென்றால் யாத்திராகமம் : 3:2-ல் தேவன் முட்செடியின் நடுவிலிருந்து மோசேக்கு தரிசனமானதாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் தேவன் அக்கினி மயமாக இருக்கிறார் என்று அநேகர் முடிவு செய்துவிட்டனர்.

இந்த இடத்தில் நான் உங்களோடு கூட ஒருசில காரியங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தேவனை நீங்கள் எந்தவொரு ரூபத்திலும், எந்தவொரு வடிவத்திலும் கொண்டு வர முடியாது. ஆனால் அவர் மனிதனை சந்திப்பதற்கு ஒவ்வொரு ரூபத்தில் வெளிப்பட்டார். பழைய ஏற்பாட்டில் மோசேக்கு முட்செடியின் நடுவில் எரிகிற அக்கினிஜுவாலையிலிருந்து தரிசனமாகின்றார். புதிய ஏற்பாட்டிலே இயேசுவின் மேல் புறா வடிவில் வந்து இறங்குகின்றார். அது மட்டுமல்லாது இயேசு தான் உயிர்த்தெழுந்த பின்னர் சீஷர்களிடத்தில் "அவர்கள் மேல் ஊதி பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி காற்றைப் போல தன்னை வெளிப்படுத்துகிறார். வேதத்தில் சில இடங்களில் பரிசுத்த ஆவியை நதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெறுகிற வேளையில் அக்கினி மயமான நாவுகள் அவர்கள் மேல் காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக தேவன் தன் ஜனங்களைச் சந்திப்பதற்கு வெவ்வேறு ரூபத்தில் வெளிப்படுகின்றார். கடைசியாக தேவன் மாம்ச உருவிலே இயேசு கிறிஸ்துவாகவும் வெளிப்பட்டார். இவை யாவும் தேவனுடைய உண்மையான ரூபங்கள் இல்லை. அவ்வப்போது அந்த ரூபங்களில் தன்னை வெளிப்படுத்துகிறார். அவ்வளவே. இதனை சரியாகப் புரிந்து கொள்ளாமல் அநேகர் தேவன் அக்கினியாயிருக்கிறார், பரிசுத்தாவியானவர் புறாவைப் போலிருக்கிறார். தேவன் நமது கன்மலை என்று குறிப்பிடப்படுவதால் தேவன் கல்லாயிருக்கிறார் என்று பலவிதங்களில் தேவனை உருவகப்படுத்தி வைத்திருக்கின்றனர். நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தேவன் எந்த ரூபத்திலும் இல்லை. அவருக்கு ஒப்பான ஒரு ரூபத்தையும், சொரூபத்தையும் உண்டாக்கவும் கூடாது.

தேவன் எல்லா நிலைகளிலும் எப்படி வேண்டுமானாலும் மனிதனோடு கூட இடைபடுவார். வானம் அவரது சிங்காசனம், பூமி அவரது பாதபடி என்பதால் எந்த ரூபத்திலும் அடக்க முடியாத அளவிற்கு அவர் மிகவும் பெரியவராயிருக்கிறார். அதே வேளையில் மரியாளின் வயிற்றில் ஒரு சிறிய குழந்தையாகவும் தன்னை மாற்றி வெளிப்படுத்திய சர்வ வல்லமையுள்ள தேவனவர். இவ்விடத்திலே ஒரு உபதேசத்தைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு ஆவிக்குரிய சபைகளிலே பரிசுத்தாவிக்கு ஒப்பாக என்று சொல்லி புறாவை வரைந்து வைத்துள்ளனர். ஒரு சில சபைகளிலே சிங்கத்தையும் கழுகையும் வரைந்து வைத்துள்ளனர். அதற்குக் காரணமாக இயேசுவை யூதா கோத்திரத்துச் சிங்கம் என்றும், கழுகு உயரமான இடங்களில் பறப்பது போல தேவன் உன்னதத்திலே வீற்றிருக்கிறவர் என்றும் கூறுகின்றனர். ஆனால் திருச்சபைகளில் இப்படிப்பட்ட சித்திரங்கள் காணப்படக் கூடாதென்றும் அவைகள் கர்த்தருக்கு அருவருப்பானதென்றும் வேதம் தெளிவாக எச்சரிக்கின்றது.

***எசேக்கியேல் 8:10***

**நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல்**

**வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீட்டப்பட்டிருந்தன.**

வசனம் இப்படியிருக்க இன்றைக்கு திருச்சபைகளில் சித்திரங்கள் தீட்டப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. முன்பு திருச்சபைகளில் வசனங்கள் தான் இடம் பெற்றிருந்தன. வசனத்தைத் தவிர வேறு ஒன்றுமே இருக்காது. ஆனால் இன்றோ இயற்கை காட்சிகள் என்ற பெயரில் பலவிதமான மிருகங்கள், பறவைகள் என்று சித்திரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வரத் துவங்கியிருக்கின்றன. முன்பு ரோமன் கத்தோலிக்கர்களின் திருச்சபைக்கும், ஆவிக்குரிய திருச்சபைகளுக்கும் உள்ளதான மிகப்பெரிய வித்தியாசங்களில் ஒன்று ரோமன் கத்தோலிக்க சபைகள் முழுவதும் தீட்டப்பட்ட சித்திரங்களால் நிறைந்திருக்கும். ஆனால் ஆவிக்குரிய திருச்சபைகளில் ஒரு சிலுவை கூட இருக்காது. வசனம் மட்டுமே இருக்கும். மாறாக இன்றோ வசனத்திற்குப் பதிலாக *Interior Decoration* அதாவது உள்கட்டமைப்பு அலங்காரம் என்ற பெயரிலும், கலைநயம், சித்திரநயம் என்ற பெயர்களிலும் திருச்சபைக்குள்ளே அருவருப்புகளை அழகாய் அரங்கேற்றியிருக்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்கள் திருச்சபைகளில் இருக்கவே கூடாது.

சரி. நாம் நம்முடைய தலைப்பிற்கு வருவோம். இப்படியாக அக்கினியை தேவனை அறியாத ஜனங்களும் கூட தேவன் என்று நம்புகிறபடியினால், அந்திகிறிஸ்து அக்கினியை இறக்கும்போது யூதர்களும், மற்ற ஜனங்களும் இவன் சொல்லுகிற கடவுளை தங்கள் கடவுளாகவும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவெனில் இவன் வேறு யாரையும் இவர் தான் அந்த தேவன் என்று காண்பிக்கப் போவதில்லை. மாறாக தன்னையே தேவன் என்று கூறப் போகிறான். இதனை கீழ்கண்ட வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**தானியேல் – *11:31* அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும், எந்தத் தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி, அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி, தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனை பொன்னினாலும், வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம்பண்ணுவான்.**

***2 தெசலோனிக்கேயர் – 2:4***

**அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.**

அந்திகிறிஸ்துவானவன் இதுவரைக்கும் இல்லாத புது கடவுள் என்று அறிமுகப்படுத்தி, கடைசியில் தானே கடவுள் என்ற நிலைக்கு கொண்டு செல்லப் போகிறான். அப்படி யூதர்களையும், மற்றவர்களையும் நம்பவைப்பதற்காகத்தான் அவன் வானத்திலிருந்து அக்கினியை இறங்கப் பண்ணப் போகிறான்.

அந்திகிறிஸ்து வானத்திலிருந்து அக்கினியை இறக்கியவுடன் எல்லா இஸ்ரவேலர்களும் அதனை நம்புவார்களா என்றால் இல்லை. 1,44,000 இஸ்ரவேல் ஜனங்கள் இந்த காரியத்தை நம்ப மாட்டார்கள். அவன் வானத்திலிருந்து அக்கினியை இறக்குவதுடன் மட்டுமல்லாது இன்னும் என்னென்ன அற்புதங்களை செய்தாலும் கூட அவனை நம்ப மாட்டார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 7-ம் அதிகாரம் 1 முதல் 8 வசனங்கள் வரை இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் கோத்திரத்துக்குப் பன்னீராயிரம் பேர் வீதம் 1,44,000 பேர் முத்திரையிடப்படுவதைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இவர்கள்தான் அந்த நாட்களில் தேவனுக்காக வைராக்கியமாய் நிற்கக் கூடியவர்கள். இவர்கள் அந்திகிறிஸ்துவை தேவனென்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் மேல் அந்திகிறிஸ்து தன் ஆதிக்கத்தை செலுத்தப் போகிறான். மகா உபத்திரவ காலமும் இவர்களை நோக்கித் தான் வரப் போகின்றது.

இதுவரையில் வானத்திலிருந்து அக்கினி இறக்கப்படுவதன் காரணங்களைப் பார்த்தோம். இந்த அற்புதங்கள் எப்படி நடக்கும் என்றும் தேவன் வேதத்தில் தெளிவாக முன்னுரைத்திருக்கின்றார்.

*2 தெசலோனிக்கேயர் – 2:9*

***அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்...***

மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "பொய்யான அற்புதம்" என்ற வார்த்தை மிக முக்கியமானது. வானத்திலிருந்து அக்கினி இறக்கப்படுகிறதான ஒரு பெரிய அற்புதம் நடக்கப் போகின்றது. ஆனால் அந்த அற்புதம் பொய்யாய்

நடைபெறப் போவதாக வேதம் கூறுகின்றது. எப்படிப் பொய்யான அற்புதத்தை நடப்பிக்கப் போகிறார்கள்.

சமீபத்திய நாளிதழில் செய்தி ஒன்றை வாசிக்க நேர்ந்தது. தென்னிந்தியாவிலே மிகவும் பிரபலமான ஒரு வழிபாட்டு ஸ்தலத்தில் சில நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட நாளில் இலட்சக்கணக்கான மக்களுடைய கண்களுக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினி தோன்றுவதாகவும், சில நிமிடங்களிலேயே அந்த அக்கினி மறைந்து விடுவதாகவும் நம்பப்பட்டு வந்தது. இந்த அக்கினியைக் காண்பதற்கு ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான மக்கள் புறப்பட்டு வந்தனர். திடீரென்று வானத்தில் அந்த அக்கினி தோன்றும். பின்பு சில நிமிடங்களிலேயே அந்த அக்கினி மறைந்தும் போகும்.

இது மிகவும் ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் நம்பப்பட்டு வந்தது. இலட்சக்கணக்கான மக்கள் இந்த சில நிமிட அக்கினியைக் காண்பதற்கு பல மணி நேரங்கள் காத்துக் கிடப்பார்கள். அக்கினியைக் கண்ட மாத்திரத்திலே பக்திப் பரவசமடைவார்கள். உற்சாகத்தின் மிகுதியிலே கூக்குரலிடுவார்கள். அக்கினியைக் கண்ட மாத்திரத்திலே தேவனையே கண்டதுபோல பூரிப்படைவார்கள். இந்த அற்புதம் எப்படிப்பட்டதென்று கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஆராய்ச்சிகளின் வாயிலாக கண்டறியப்பட்து.


இந்த அக்கினியானது இயற்கையாகத் தானாகத் தோன்றுவது இல்லை. ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட நாட்களில் ஒரு சில மனிதர்கள் இலட்சக்கணக்கான மக்கள் நிற்கக்கூடிய அவ்விடத்திலிருந்து பல மைல்கள் தூரத்திலுள்ள ஒரு மலையின் சிகரத்தில் இரவிலே போய் தங்கி விடுவார்களாம். குறிப்பிட்ட அந்த நாளில் சில நூறு கிலோகிராம் எடை கொண்ட கற்பூரத்தை ஏற்றுவார்களாம். எற்றினவுடனேயே அது மலைச் சிகரத்தின் மேல் இருக்கிறபடியினாலும், அந்த காலம் பனிமூட்டமான காலமானபடியினாலும் பல மைல்களுக்கு அப்பால் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மக்களுக்கு அக்கினி சிகரத்தின்மேல் எரிவதாகத் தோன்றாமல், அந்தரத்தில் அக்கினி எரிவது போலத் தோற்றமளிக்குமாம். சில நிமிடங்களிலேயே அதை அணைத்து விடுவார்களாம். இப்படித்தான் அநேக ஆண்டுகளாக நடந்து வந்திருக்கின்றது.

சில பகுத்தறிவாளர்கள் பின் தொடர்ந்து போய், ஆய்வு செய்து உண்மையைக் கண்டறிந்த பின்னர் நீதிமன்றத்தில் இது மக்களை ஏமாற்றுகிற காரியம் என்று வழக்குத் தொடர்ந்தனர். அதற்கு, அந்த வழிபாட்டு ஸ்தலத்தை நிர்வகிக்கக் கூடிய தேவஸ்தானமும் அது இயற்கையாகத் தோன்றுவது கிடையாது. மனிதர்களால் தான் ஏற்றப்படுகிறதென்று ஒப்புக் கொண்டது. இதனை சற்று கவனிப்போமானால் சில நூற்றாண்டுகளாக கோடிக்கணக்கான மக்கள் போலியான இந்த அற்புதத்தின் மூலம் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வந்துள்ளனர். இது அதிகாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுமாயிற்று. இதே போன்ற ஒரு காரியத்தைத்தான் அந்தி கிறிஸ்துவானவனும் அவனது ஆட்சியிலே செய்யப் போகின்றான். எல்லாரும் தன்னை தேவனென்று நம்பும்படி பொய்யான அற்புதங்களை நடப்பிக்கப் போகின்றான். அவன் எப்படி பொய்யான அற்புதங்களை நடப்பிக்க இயலும் என்பதற்கான சாத்தியக் கூறுகளை இப்போது காண்போம்.

1998-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் நாள், 16 நாடுகள் இணைந்து வானத்திலே *International Space Station* சர்வதேச விண்வெளி நிலையம் ஒன்றை உருவாக்கினார்கள். எதற்காக இந்த விண்வெளி நிலையம் உருவாக்கப்பட்டதென்று கேட்டதற்கு அவர்கள் பின்வரும் காரணங்களைச் சொன்னார்கள். வருகின்ற நாட்களில் நிலாவை ஒரு சுற்றுலாஸ்தலமாக மாற்றப் போகிறோம். ஏறக்குறைய 3,84,403 கிலோமீட்டர் தூரத்திலுள்ள நிலாவிற்கு பூமியிலிருந்து மனிதர்களை சுற்றுலாவிற்கு அனுப்பப் போகிறோம். இப்படி சுற்றுலாவிற்கு வருபவர்களை சில மணி நேரங்கள் விண்வெளியில் அந்தரத்தில் மிதந்தும், நடந்தும் அவர்களை பரவசமூட்டும் அனுபவங்களுக்குள்ளாக கொண்டு செல்லவும் இந்த விண்வெளி நிலையத்தில் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றனர்.

மேலும், நிலாவிற்கும், செவ்வாய் போன்ற கிரகங்களுக்கும் ஆராய்ச்சி செய்யப் போகும் விஞ்ஞானிகள் இடையிலே சற்று நேரம் தங்கி ஒய்வெடுத்து பின்பு நிலாவிற்குச் செல்வதற்கு வசதியாக இந்த விண்வெளி நிலையத்தை உருவாக்கியிருக்கிறோம் என்று பதிலளித்தனர்.

இதற்கு முன்பாகவே 1971-ம் ஆண்டிலேயே ரஷ்யா மிர் என்கிற சர்வதேச விண்வெளி நிலையத்தை உருவாக்கியது. விண்வெளி ஆராய்ச்சியைப் பொருத்தமட்டில் அமெரிக்காவை விட ரஷ்யாவே கோலோச்சியது. விண்வெளிக்கு



சர்வதேச விண்வெளி நிலையம் *ISS*

முதன்முதலில் சென்ற மனிதன் யாரெனில் ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின் என்பவரே ஆவார். அதன் பின்னர் மிர் தனது வேலையை நிறுத்திக் கொண்டது. அதன் பின்னரே 16 நாடுகளோடு கூட இந்த சர்வதேச விண்வெளி நிலையம் உருவாக்கப்பட்டது. இது நிலாவிற்குப் போகிறவர்களுக்கு இளைப்பாறுகிற இடமாகவோ, அல்லது சுற்றுலாத்தலமாகவோ உருவாக்கப்பட்டது அல்ல. இது ஜனங்களை 24 மணி நேரமும் கண்காணிக்கக் கூடிய ஒரு நிலையம். பூமியின் சுற்றுவட்டப் பாதையோடு இணைந்து பூமியோடு கூட இதுவும் நகரும். பூமியில் இருக்கக்கூடிய ஒவ்வொருவரையும் கண்காணிக்கக் கூடிய சாதனங்கள் இதிலே பொருத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன.

சில வருடங்களுக்கு முன்பாக ஊழியத்தின் நிமித்தம் வெளிநாட்டிற்கு விமானத்தில் பிரயாணப்பட்ட போது ஒரு விஞ்ஞானியை சந்திக்க நேர்ந்தது. அவர் என்னுடன் பகிர்ந்து கொண்ட விஷயம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. என்னவென்றால் விண்வெளியில் ஸ்தாபிக்கப்படுகிற இது போன்ற விண்வெளி மையங்களின் நோக்கமே பூமியின் ஜனங்களை ஒரு கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவருவதே. அது மட்டுமல்லாது இஸ்ரயேலும், அமெரிக்காவும் இணைந்து "வானத்திலே ஒரு கண் *(The Eye On The Sky)*" என்ற பெயரில் ஒரு அதி நவீன

தொலைநோக்கியை வடிவமைத்திருக்கின்றனர். இதன் விசேஷம் என்னவெனில் தனிப்பட்ட ஒரு மனிதனை நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்றால் அந்த மனிதன் பூமியில் நடந்து கொண்டிருப்பதைக் கூட இந்த தொலைநோக்கியின் மூலம் கண்காணிக்க இயலும். இது அந்த அளவிற்கு அதி நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய சக்தி வாய்ந்த தொலைநோக்கியாகும்.

சமீபத்தில் ஒரு தனியார் நிறுவனத்தின் மூலமாக மக்கள் பயன்பாட்டிற்காக ஒரு கேமரா வெளியிடப்பட்டது. அதின் சிறப்பம்சம் என்னவென்றால் பூமியிலிருந்து 300 கிலோமீட்டர் உயரத்திற்கு மேல் பறந்து கொண்டிருக்கும் விமானத்தின் அடிப்பாகம் வரைக்கும் நாம் பார்க்க முடியுமாம். மக்கள் பயன்பாட்டிற்கான ஒரு கேமராவிலேயே இவ்வளவு அதி நவீன அம்சங்கள் இருக்குமானால் ஒட்டு மொத்த உலகத்தையும் கண்காணிப்பதற்கு, ஆளுகை செய்வதற்கு பயன்படுத்தப்படும் மேற்கூறிய தொலைநோக்கிகள் மிகவும் மேம்பட்டதாய் இருக்கும். இந்த விண்வெளி நிலையமும் அப்படிப்பட்ட ஒன்று தான். அதற்காகத்தான் இது நிறுவப்பட்டிருக்கிறது. எனக்கு வந்த ஒரு உறுதி செய்யப்படாத தகவலின்படி இது போல நான்கு விண்வெளி நிலையங்கள் உருவாக்கப்பட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சீனாவும், ரஷ்யாவும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த விண்வெளி நிலையத்திலிருந்து தான் பூமிக்கு அக்கினியை இறக்க அநேக வாய்ப்புகள் இருக்கின்றன. நம்முடைய பூமியானது முழுவதும் காந்தப் புலத்தால் சூழப்பட்டுள்ளது. இந்த காந்தப் புலம் மிகவும் வலிமையானது. வான்வெளியின் விண்கற்கள், விண்துகள்கள் பூமிக்கு மேல் வந்து விழாதபடிக்கு கர்த்தர் இந்த பூமியைச் சுற்றிலும் ஒரு வளையம் போல பாதுகாப்பிற்காக வைத்திருக்கின்றார். இப்படியிருக்க பூமியின் காந்தப்புலத்தை இந்த விண்கற்களோ, வான் பொருட்களோ நெருங்கும் போது, பூமியின் காந்தப்புலம் அதை சுட்டெரித்து விடும். இப்பொருட்கள் பற்றி எரிவதை பூமியிலுள்ள நம்முடைய கண்களாலே காண இயலும். இது பார்ப்பதற்கு வானத்திலிருந்து அக்கினி பூமியை நோக்கி விழுவது போலத் தெரியும்.

உதாரணமாக சில வருடங்களுக்கு முன்பு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கல்பனா சாவ்லா சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கு திரும்பும்போது, தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக பூமத்திய ரேகையை நெருங்கும் போது விண்வெளி ஓடம் தீப்பற்றி வெடித்துச் சிதறியது. அவர் மரித்துப் போனார்.

இதே போல நம் கண்களால் காண இயலாத ரசாயனக் கலவையை விண்வெளி நிலையத்திலிருந்து பூமியை நோக்கி அனுப்பும்போது அந்தக் கலவை பூமியின் காந்தப் புலத்தை நெருங்கும் போது அது தீப்பற்றிக் கொள்ளும். பூமியிலுள்ளவர்கள் அதைக் காணும் போது வானத்திலிருந்து அக்கினி இறங்குவது போல் இருக்கும். இது எப்படியென்பதை புரிந்து கொள்ள இன்னும் ஒரு உதாரணத்தைக் காண்போம்.

நம்முடைய வீடுகளிலே கேஸ் சிலிண்டர்களை பயன்படுத்துகிறோம். ஒருவேளை அதில் கசிவு ஏற்பட்டு எரிவாயு வெளியே வரும்போது தீக்குச்சியை பற்ற வைப்போமானால் எரிவாயு காற்றில் கலந்து விட்ட படியினாலே தீக்குச்சியின் சிறு தீப்பொறி பட்டவுடனே நெருப்பு பற்றி எரிகிறது. இதற்கு ஒப்பாக அந்திகிறிஸ்துவின் ஆட்சியிலே விண்வெளி நிலையத்திலிருந்து இரசாயனக் கலவைகள் பூமியை நோக்கி அனுப்பப்படும் போது அவைகள் பூமத்திய ரேகையை நெருங்கும் போது வானத்தில் அக்கினி தோன்றும். முன்பே திட்டமிடப்பட்டபடி, அந்திகிறிஸ்து சொல்லுகிற ரூபத்தில், அவன் சொல்லுகிற நேரத்தில் மிகச் சரியாக வானத்தில் அக்கினி தோன்றும். மக்கள் அவனை தேவனாக ஏற்றுக் கொள்வார்கள். இதற்காக விண்வெளியில் உபகரணங்கள் தயாராக இருக்கின்றன. அக்கினியும் தயாராக இருக்கிறது. அதை நம்புவதற்கு மக்களும் தயாராகி வருகின்றனர்.

அடுத்த அத்தியாயத்திற்குள் செல்லும் முன் நினைவிற்கு வரும் வேதவசனம் ஒன்று : "நீ கழுகைப் போல உயரப் போனாலும் நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத் தள்ளுவேனென்று கர்த்தர் சொல்லுகிறார்". *(ஒபதியா – 1:4).* அஸ்திபாரம் போடப்பட்ட அகண்ட கட்டிடங்களே, கலைத்து போட்ட சீட்டுக்கட்டுகளாய் சிதறும் போது, அந்தரத்தில் தொங்கும் இந்த விண்வெளி நிலையம் எம்மாத்திரம். நாம் காணும் இந்த விண்வெளி நிலையங்கள், விண்வெளி ஓடங்கள் எல்லாம் ஒரு நாள் தேவனால் தள்ளப்படும், பின்பு தள்ளாடித் தூளாகும்.

# 8



வெளி – *13:14,15*

மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ண வேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.

**மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங் கொடுக்கப்பட்டது.**

மேற்கூறிய இரு வசனங்களில் அந்திகிறிஸ்துவின் ஏழு ஆண்டு கால ஆட்சியில் பூமியின் ஜனங்களுக்கு உபத்திரவம் எதினால் வருகிறதென்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மிருகம் என்பது சாம்ராஜ்யத்தை, அரசாங்கத்தைக் குறிக்கும் என்று கடந்த அத்தியாயங்களிலே பார்த்தோம். அந்தி கிறிஸ்துவின் ஆட்சியிலே ஒரு சிலை செய்யப்பட்டு, அந்த சிலையை எல்லோரும் வணங்கும்படி செய்வார்கள். அப்படி வணங்காத யாவரும் கொலை செய்யப்படுவார்கள். மேற்கண்ட இரு வசனங்களின் சாராம்சம் இதுவேயாகும்.

இதற்கொத்த மற்றுமோர் சம்பவம் இதற்கு முன்பே நடந்திருப்பதாக வேதம் குறிப்பிடுகின்றது. தானியேல் தீர்க்கதரிசன புத்தகம் 3-ம் அதிகாரம் 1 முதல் 4 வசனங்களில் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு சிலையை செய்விக்கிறார். பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் காலத்தில் இது நடைபெற்றது. அந்த சிலையை செய்துவிட்டு, அதை தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தி, அனைவரும் அதை வணங்க வேண்டும் என்று உத்தரவிடுகிறார். தன் உத்தரவை மீறி, அந்த சிலையை வணங்காத யாவரையும் நெருப்பிலே தூக்கிப் போட்டு கொலை செய்து விடுகிறார். நேபுகாத்நேச்சார் ஏன் அந்த சிலையைச் செய்தார்? அது என்ன சிலை? என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போமானால், அதற்கு விடையாக முந்தின அதிகாரத்தில் முக்கியமான சம்பவமொன்று நடந்திருப்பதைக் காணலாம். தானியேல் 2-ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் வித்தியாசமான ஒரு சிலையைப் பார்க்கிறார். அந்த சிலையின் தலை தங்கமாகவும், மார்பும் கரங்களும் வெள்ளியாகவும், வயிறும் தொடையும் வெண்கலமாகவும், கால்கள் இரும்பும், பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாயிருந்தது.

இப்படிப்பட்ட ஒரு சிலையை அவர் சொப்பனத்திலே கண்டு கலங்கிப் போனார். அதன் பின்பு தானியேல் தீர்க்கதரிசி வந்து அதற்கான விளக்கங்களைத் தருகிறார். தானியேல் தந்த விளக்கங்களை இவ்வதிகாரத்தில் வாசிக்கும்போது 38-ம் வசனத்திலே மிக முக்கியமான ஒரு காரியத்தைக் குறிப்பிடுகிறார்.

**சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புகொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே.**

அடுத்த வசனங்களிலே அதற்குப் பின்பு எழும்பப்போகின்ற மற்ற சாம்ராஜ்யங்களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட வசனத்திலே பொன்னான அந்த தலை என்பது ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக் குறிக்கும், அவரது ராஜ்யமாகிய பாபிலோனிய சாம்ராஜ்யத்தையும் குறிக்கும். இதற்கடுத்த அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் ஒரு பொற்சிலையைப் பண்ணுவிக்கிறார்.

முந்தின அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார், தான் கண்ட சொப்பனத்தின் விளக்கத்தைப் பெறுகையில் அந்த சிலையில் காணப்படும் பொன்னான தலை என்பது ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக் குறிக்கும். அதற்குப் பின்பு மகிமை குறைந்த மற்றுமோர் சாம்ராஜ்யம் வெள்ளிக்கொப்பாக வர இருப்பதையும், அதின் பின்னர் சிலையின் வயிறும், தொடையும் வெண்கலமாகக் காணப்பட்டபடி மற்றுமோர் சாம்ராஜ்யமும், சிலையின் கால்களில் இரும்புக்கொப்பாய் மற்றுமோர் சாம்ராஜ்யமும், பாதங்கள் இரும்பும், களிமண்ணுமாய் கடைசி சாம்ராஜ்யமும் எழும்பும் என அவருக்கு தானியேலால் முன்னறிவிக்கப்படுகிறது.

இதைக் கேட்ட நேபுகாத்நேச்சாருக்கு இருதயத்தில் ஒரு எண்ணம் தோன்றுகிறது. நமக்குப் பின்பு நம்முடைய சாம்ராஜ்யம் நம்மை அல்லாத வேறொருவனுக்குப் போகிறதே. அவ்வாறு இல்லாதபடிக்கு உலகம் முடியும் வரைக்கும் பாபிலோனிய சாம்ராஜ்யம்தான் ஆளுகையில் இருக்க வேண்டும் என்று எண்ணியதன் விளைவாக, பொன்னான அந்த தலை தான் என்றால் தலை மட்டுமல்ல, முழு சிலையும் தானாகவே இருக்கவேண்டும் அதாவது இப்போது மட்டுமல்ல, எப்போதும், உலகத்தின் முடிவுமட்டும் தன்னுடைய பாபிலோனிய சாம்ராஜ்யமே பூமியில் ஆளுகை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு பெரிய பொற்சிலையைச் செய்விக்கிறார். இதனை பாபிலோன் சாம்ராஜ்யத்தின் சிலை என்றும் வைத்துக் கொள்ளலாம், நேபுகாத்நேச்சாரின் சிலை என்றும் வைத்துக் கொள்ளலாம். ஏனெனில் மேற்கண்டபடி பொன் என்பது நேபுகாத்நேச்சாரையும் குறிக்கும், பாபிலோன் சாம்ராஜ்யத்தையும் குறிக்கும்.


இதைப் போலத்தான் வெளி 13-ம் அதிகாரத்திலேயும் ஒரு சிலை செய்யப்படப் போகின்றது. அது ஐரோப்பிய யூனியன் சாம்ராஜ்யத்தின் சிலையாகவும் இருக்கலாம் அல்லது அந்த சாம்ராஜ்யத்தில் ஆளுகை செய்யப் போகும் அந்தி கிறிஸ்துவின் சிலையாகவும் இருக்கலாம். அந்திகிறிஸ்துவின் ஆட்சியின் போது இந்த சிலை செய்யப்படப் போகின்றது. மேலும் இவ்வதிகாரத்தின் 16-ம் வசனத்தில் ***"மிருகத்தின் சிலையை வணங்காத யாவரும் கொலை செய்யப்படுவார்கள்"*** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கொத்த சம்பவம் தான் தானியேல் மூன்றாம் அதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு சிலை செய்யப்படப் போகின்றது.

இச்சிலையின் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த சிலை பேசத்தக்கதாகவும், தன்னை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும் அந்த சிலைக்கே சத்துவம் அளிக்கப்பட்டதென்று காண்கிறோம். நேபுகாத்நேச்சார் செய்வித்த சிலைக்கு அப்படிப்பட்ட சத்துவம் ஏதும் இல்லை. அதை ஒருவர் வணங்கவில்லை என்றால் தண்டிப்பதற்கென்று நியமிக்கப்பட்ட போர்ச்சேவகர்கள் தான் நெருப்பிலே தூக்கி எறிவார்கள். ஆனால் வெளி 13-ல் சொல்லப்படுகின்ற சிலையோ அதாவது சொரூபமோ, தானே பார்க்குமாம், பேசுமாம், தன்னை வணங்காதவர்களை தானே கொலையும் செய்யுமாம். இப்படிப்பட்ட விசேஷித்த ஒரு சிலையை நாம் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

உலகம் உண்டானது முதற்கொண்டு எந்தவொரு சிலையும் பேசினதில்லை. வேதாகமத்திலே தேவன் விக்கிரகத்தைக் குறித்து கூறும்போது, அது கண் இருந்தும் காணாது, காதிருந்தும் கேட்காது என்று சொல்லுகிறார். மேலும் திருச்சபையைக் குறித்துச் சொல்லும்போது வெளிப்படுத்தின விசேஷம் – 2:20-ல் தியத்தீரா சபைக்குச் சொல்லுகையில் ஆகிலும், ***"உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில் தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம் பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்"*** என்று கடிந்து கொள்கிறார். இப்படியாக விக்கிரக வழிபாட்டையும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதையும் நம்முடைய வேதம் வெறுக்கின்றது.

இப்படியாக விக்கிரகம் காணாது, பேசாது, கேளாது என்று நாம் அறிந்திருக்க, வெளி *13-ல்* கூறப்பட்டுள்ள விக்கிரகமோ பேசத்தக்கதாகவும், கொலை செய்யத்தக்கதாகவும் உள்ளதே, அது எவ்வாறு சாத்தியப்படும் என்று விவரமாகக் காண்போம். இந்த நாட்களிலே விக்கிரகங்கள் பலவிதமான உலோகங்களிலே, பலவிதமான வடிவங்களிலே செய்யப்படுவதை நாம் கண்டிருக்க இயலும். விக்கிரகங்களைக் கல்லிலே, ஐம்பொன்னிலே, வெள்ளியிலே, தங்கத்திலே பார்த்திருப்போம். இது மட்டுமல்லாது இன்னும் அநேக உலோகங்களிலே சிலைகள் செய்யப்படுவதையும் கண்டிருப்போம். இதையும் தாண்டி வசனத்தில் கூறப்பட்டுள்ளபடியே சொரூபங்கள் வரத் துவங்கியுள்ளன.

சொரூபம் என்ற வார்த்தைக்கு சமஸ்கிருதத்திலே ஒரு ரூபத்தைப் போலவே இருத்தல் என்று பொருள். ஆங்கிலத்தில் சொரூபம் என்பதற்கு *Image* என்று கூறப்பட்டுள்ளது. இப்போது வருகிறதான சிலைகள் சிலிகான் என்று சொல்லப்படுகிற உலோகத்தினால் செய்யப்படுகிறது. சிலிகானால் செய்யப்பட்டதான இந்த சிலையின் பூர்வீகத்தை சற்று ஆராய்வோம்.




அசிமோ

நாம் நன்றாக அறிந்த, கேள்விப்பட்ட ஒரு வார்த்தை *Robot* – இயந்திரமனிதன். இது முழுவதும் இயந்திரமாக இருக்கும். உள் பாகங்கள் அனைத்துமே உலோகங்களால் செய்யப்பட்டிருக்கும். இதற்கு உயிர் இருக்காது, ஆனால் பார்க்கும். அதற்கு அடுத்தபடியாக சில இயந்திர மனிதர்கள் பேசவும் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டன. அதற்கடுத்த படிநிலையாக முழுவதும் உலோகத்தால் செய்யப்பட்ட இயந்திர மனிதனின் சரீரத்தின் மேல் தோல் மட்டும் மனிதத் தோல் போலவே காட்சியளிக்கும் வகையில்

அசிமோ என்ற பெண் உருவைக் கொண்ட இயந்திர மனிதன் *(Robot)* உருவாக்கப்பட்டது. இதனுடைய தோல் சிலிகானால் செய்யப்பட்டது.

சிலிகான் என்பது களிமண்ணை ஆய்வுக்கூடத்தில் வைத்து சில சோதனைகளின் மூலம் பெறப்படுவதாகும். இதனை இன்னும் அநேக வேதிப் பொருட்களுடன் சேர்த்து, வினை புரியச் செய்து, முடிவாக மனிதத் தோல் போலவே காட்சியளிக்கும் சிலிக்கான் தோல் இந்த இயந்திர மனிதனில் பொருத்தப்படுகிறது. இது பார்ப்பதற்கு மனிதனுடைய தோலைப் போல மென்மையானதாக இருக்கும். இதெல்லாம் ஆரம்ப நாட்களில் வந்த ரோபோட்கள். இவற்றை வடிவமைப்பதற்கு ரோபோடிக்ஸ் *(Robotics)* என்று ஒரு படிப்பும் உண்டு. நம்மில் அநேகர் இவைகளை எல்லாம் ஏற்கனவே அறிந்திருக்கக் கூடும்.

இயந்திரமனிதனைப் பற்றின இந்த ஆராய்ச்சிகளின் வேகம் இன்னும் அதிகரித்து இன்று செயற்கை மனிதனை *(Artificial Man)* உருவாக்கும் அளவிற்கு வளர்ந்து விட்டது. இயந்திரமனிதன் *(Robot)* உருவாக்கப்பட்ட காலத்தைத் தாண்டி தற்போது செயற்கை மனிதன் *(Artificial Man)* உருவாக்கப்படுகிறான். இயந்திர மனிதனுக்கு குறிப்பிட்ட பணியைச் செய்ய யாராவது கட்டளை கொடுக்க வேண்டும். ஆனால் செயற்கை மனிதனுக்கு அனைத்து புரோகிராம்களும் செய்துவிட்டு, எல்லா கட்டளைகளையும் உள்ளேற்றம் செய்துவிட்டால் அது சமயத்திற்கேற்றாற்போல் தானாகவே முடிவெடுத்து செயல்படத் துவங்கும். இந்த செயற்கை மனிதனுடைய அடுத்த வடிவம் தான் பயோனிக் மனிதன் *(Bionic Man)* என்பதாகும்.



REX பயோனிக் மனிதன்

செயற்கை மனிதனுக்கும், பயோனிக் மனிதனுக்கும் *(Bionic Man)* உள்ளதான வித்தியாசம் என்னவென்றால் செயற்கை மனிதனுக்கு கைகள் இருக்கும். ஆனால் உணர்ச்சி

இருக்காது. ஒரு கட்டையைப் போலத்தான் இருக்கும். அதனுள்ளே இரத்தம் இருக்காது. ஒரு சாதாரண கை செய்யக்கூடிய அத்தனை வேலைகளையும் அது செய்யாது. பயோனிக் மனிதன் *(Bionic Man)* என்றால் முழுவதும் செயற்கை உறுப்புகளைக் கொண்டது. செயற்கை மூளை, செயற்கை கண், செயற்கை ஜீரணக் குழாய்கள் என அனைத்து உறுப்புகளும் செயற்கையாக செய்யப்பட்டிருக்கும். ஒரு மனிதன் செய்யக்கூடிய எல்லா வேலைகளையும் இது செய்யும். செயற்கையாய் சிந்திக்கவும் செய்யும். அதற்குள்ளே செயற்கை இரத்தம் ஓடும். உடலில் செயற்கை நரம்புகள் இணைக்கப்பட்டிருக்கும். உணர்ச்சி இருக்கும். தொடுதலை உணரும்.

இயற்கை இரத்தத்திற்கும், செயற்கை இரத்தத்திற்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. அதென்னவெனில் செயற்கை இரத்தத்திற்கு உயிரணுக்கள் இல்லாமல் இருந்தது. ஆனால் தற்போது செயற்கையாக உயிரணுக்களும் உண்டாக்கப்பட்டு, செயற்கை இரத்தம் தற்போது உயிரணுக்களோடு கூட காணப்படுகிறது. *72* மணி நேரம் ஒரு மனிதனை உயிரோடு இருக்கச் செய்யுமளவிற்கு தற்போது உயிரணுக்கள் செயற்கை இரத்தத்தில் கிரியை செய்கின்றன. சமீபத்தில் நடைபெற்ற இஸ்ரேலிய – ஹிஸ்புல்லா யுத்தத்தின் போது காயமடைந்த இஸ்ரேலிய இராணுவ வீரர்களுக்கு இந்த செயற்கை இரத்தத்தைப் பயன்படுத்தினார்கள். அவசர நிலைகளுக்கு அதைப் பயன்படுத்தி *72* மணி நேரம் அவர்களை உயிரோடு கூட வைத்தார்கள். அதன் பின்னர் அவர்களுக்கு இயற்கை இரத்தம் ஏற்றப்பட்டு இன்றும் அவர்கள் உயிரோடு கூட உள்ளனர். இப்படியாக பயோனிக் மனிதன் *(Bionic Man)* உருவாகி விட்டது.

வேதம் சொன்னபடியே பார்க்கக்கூடிய சிலை, பேசக்கூடிய சிலை, சிந்திக்கக் கூடிய சிலை இப்போது ஆயத்தமாய் நிற்கிறது. இப்படிப்பட்ட பயோனிக் மனிதர்களை *(Bionic Man)* இராணுவத்திலும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணம் என்னவென்றால் தன்னுடைய படைகளுக்கு உயிர்சேதம் வராமல், எதிரிப் படைகளுக்கு மாத்திரம் உயிர்சேதம் உண்டாக்குவதற்கு பயோனிக் மனிதன் இராணுவத்தில் பயன்படப் போகின்றது. சொரூபமான இந்த பயோனிக் மனிதன் *(Bionic Man)* கொலையும் செய்யப் போகின்றது. இதற்கான ஆராய்ச்சிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.


கடந்த *2013*-ம் ஆண்டு உலகின் முதல் பயோனிக் மனிதன் இலண்டனில்

உருவாக்கப்பட்டு காட்சிக்காக வைக்கப்பட்டது. ஜனங்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். இந்த பயோனிக் மனிதனுக்கு *(Bionic Man)* அவர்கள் வைத்த பெயர் தான் மிகவும் விசேஷமானது. அதென்னவென்றால் ரெக்ஸ் *(Rex)* என்பதாகும். ரெக்ஸ் *(Rex)* என்றால் இலத்தீன் மொழியில் இராஜா என்று அர்த்தம். ஆங்கில நாட்டிலே உருவாக்கப்பட்டதும், இலண்டனிலே காட்சிக்கு வைக்கப்பட்டதுமான இச்சிலைக்கு ஏன் ஒரு இலத்தீன் பெயர் வைக்கப்பட்டது? அதுவும் இராஜா என்கிற பொருள்படும் பெயர் ஏன் வைக்கப்பட்டது?

இதில் கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான காரியம். வரப் போகிற அந்திகிறிஸ்து உலகம் முழுவதும் ஆளுகை செய்வான். ரோமில் இருந்து வரப் போகிறதான அந்திகிறிஸ்து, தான் ஒரு ராஜாவாக வெளிப்பட்டவுடன், அவனுக்காக செய்யப்படப் போகிற சொரூபத்திற்கு முன்னோட்டமாக இப்போது செய்யப்பட்டுள்ள பயோனிக் மனிதனுக்கு *(Bionic Man)* அவர்கள் வைத்த பெயர்தான் ரெக்ஸ் *(Rex)*.

கடைசி நாட்களில் வேதம் கூறிய பார்க்கக்கூடிய, பேசக்கூடிய, கொலைசெய்யக்கூடிய சிலை தயாராகி விட்டது. சரி நடைமுறையில் இது எவ்வாறு செயல்படப் போகிறதென்று காணும்முன் ஒரு சம்பவத்தை உங்களோடு கூட பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். *2015*-ம் ஆண்டு *CNN* தொலைக்காட்சி நிறுவனத்தார் ஒரு வீடியோவை ஒளிபரப்பினார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஒரு பெரிய கூட்டத்தில் மேடையில் நின்று உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, அந்த கூட்டத்தின் மத்தியில் இருந்த *CNN* நிருபர் ஒருவரின் நேரடி வர்ணனைதான் அது.

இது வரைக்கும் நாம் பார்த்திருக்கின்ற வர்ணனைகளிலே நிருபர் கூட்டத்தினருகே நின்று கொண்டு நேரடியாக அந்த காட்சிகளை தொகுத்து தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அனுப்புவார். நாம் அதை நேரடி ஒளிபரப்பாக தொலைக்காட்சியின் மூலமாக அதைப் பார்க்க இயலும். ஆனால் இப்போது வெளிவந்த அந்த வீடியோ அப்படியல்ல. கூட்டத்தின் மத்தியில் நின்ற நிருபரை மாத்திரம் தனியே படம் பிடித்து அவரது சொரூபத்தை நேரடியாக தொலைக்காட்சி நிறுவனத்தின் ஒளிபரப்பு நிலையத்தில் கொண்டு வந்தனர். அவர் உண்மையாகவே இருந்தது பெருங்கூட்டத்தின் மத்தியில். ஆனால் அவரின் சொரூபம் ஒளிபரப்பு நிலையத்திற்குள் இருந்தது. நிகழ்ச்சித் தொகுப்பாளர் கேட்கும் கேள்விகளுக்கு அவரது




சொரூபம் பதிலளித்தது. உண்மை என்னவென்றால் சொரூபம் பதிலளிக்க வில்லை. அவர் கூட்டத்தின் மத்தியில் நின்று, தான் காண்கின்ற அத்தனை காரியங்களையும் விவரிக்கும் போது ஒளிபரப்பு நிலையத்தில் நின்று அவர் விவரிப்பது போல காண்பிக்கப் பட்டது. இதற்கு *Virtual Image* அல்லது ஹாலோகிராபிக் முறை - *Holographic Method* என்று பெயர்.

இந்தியாவிலும் கூட சமீபத்தில் ஒரு அரசியல் தலைவர் தனது தேர்தல் பிரச்சாரத்திற்கு இந்த யுக்தியைப் பயன்படுத்தினார். அவர் டெல்லியிலே ஒரு ஒளிபரப்பு நிலையத்தில் இருந்தார். அவரது அந்த உருவம் அப்படியே மூன்று மாநிலங்களிலே பிரச்சார மேடைகளிலே தோன்றினது. மேடைக்கும், மக்களுக்கும் நூறு அடி தூரம் இடைவெளி ஏற்படுத்தப்பட்டிருந்தது. நூறு அடிக்குப் பின்னால் இருந்து பார்க்கும் மக்களுக்கு, அங்கே தலைவர் உண்மையாகவே நின்று பேசிக்கொண்டிருப்பது போலத் தெரியும்.


இந்த மூன்று பகுதிகளிலும் மேடைக்கு முன்னால் திரண்டிருந்த மக்கள் கூட்டம் படம் பிடிக்கப்பட்டு டெல்லியிலே ஒளிபரப்பு நிலையத்தில் அமர்ந்திருக்கும் தலைவருக்கு முன்பாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.. அவர் ஜனங்களைப் பார்த்தார். ஜனங்களும் அரசியல் தலைவரைப் பார்த்தனர். ஆனால் இருவரும் வெவ்வேறு இடத்தில் இருந்தனர். ஆனால் இருவரும் ஒரே இடத்தில் உள்ளது போன்று இருக்கும். இதுதான் *Virtual Image* என்ற தொழில்நுட்பமாகும். இதில் உள்ள *Image* என்ற வார்த்தையின் பொருள் சொரூபம். இதே காரியத்தைத் தான் மிருகத்தின் சொரூபம் *(Image)* என்று வெளி – *13:15,16,17*-ல் வாசிக்கின்றோம்.

அந்திகிறிஸ்துவானவன் ரோம் நகரத்திலிருந்து ஆளுகை செய்யும்போது உலகம் முழுவதும் உள்ள எல்லா அரசாங்க அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள் , தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டு ஸ்தலங்கள் என அனைத்து இடங்களிலும்

அவனது சொரூபம் வைக்கப்பட்டிருக்கும். இது பார்க்கும், பேசும். இச்சொரூபத்திற்கு முன்பாக நடக்கின்ற காரியங்கள் அந்திகிறிஸ்துவிற்கும் நேரடியாக ஒளிபரப்பப்படும். இந்த சிலைக்கு முன்னால் அத்தனை ஜனங்களும் ஒரு மரியாதையைச் செலுத்தும்படி கட்டளையிடப்படுவர். வெளி – *13:15*-ல் தன்னை வணங்காத யாவரையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை ஆங்கில வேதத்திலே *Not Worship the image* என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அதன் முன்பாக ஆராதனை செய்யாத என்று பொருள். ஆராதனை மற்றும் வணங்குதல் என்பது ஒவ்வொரு கலாச்சாரத்திலும் வேறுபடும்.

இந்தியாவிலே கடவுளுக்கு ஆராதனை என்றால் சிலைக்கு முன்பாக விழுந்து பணிந்து கொள்வதைக் காண்கிறோம். அதே வேளையில் சீனர்கள் நின்று கொண்டு குனிவார்களே அன்றி விழுந்து பணிய மாட்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்களோ ஒருவருக்கு மரியாதை செய்ய நின்று கொண்டு ஒரு சல்யூட் அடிப்பார்கள். இந்தியாவிலோ கைகூப்பி வணங்குவார்கள். இப்படியாக வணக்கம் செலுத்துதல் மற்றும் ஆராதனை முறை நாட்டிற்கு நாடு வேறுபடும். அந்திகிறிஸ்துவானவனும் கூட தன்னை ஆராதிப்பதற்கு ஒரு ஆராதனை முறையை வைப்பான். உதாரணமாக இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் ஒரு கையை உயர்த்தி வணங்கும்படி செய்தார். ரோம சாம்ராஜ்யத்திலே ரோம மன்னர்கள் ஜனங்கள் தங்கள் ஒரு கையை உயர்த்தி *Hail Caesar* என்று சொல்லி வணங்கும் படி செய்தனர். இப்படியாக ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு முறை உண்டு. அதேபோல வணங்குதல் என்றாலே காலில் விழுந்து வணங்குதல் என்றல்ல வழக்கத்திலுள்ள ஒரு முறையில் மரியாதை செய்ய வேண்டும். அப்படி செய்யாதவர்களுக்கு நேரடியாகவே அந்த சொரூபமே தண்டனையளிக்கக்கூடிய வகையில் இன்னும் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஜனங்களைக் கண்காணிக்கப் போகின்றார்கள்.

இப்போது வரை நாம் பார்த்த நடைமுறை உதாரணங்களைக் கொண்டு இது தான் அது என்று ஆணித்தரமாக கூற இயலாது. அறிவியல் இன்னும் வளர்ச்சியடைய, அடைய **இவைகளுக்கு ஒத்த** இன்னும் அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு, மேம்பட்ட சொரூபத்தை, சிலையை வடிவமைக்கவும் வாய்ப்பிருக்கிறது. வெளி – *13:14,15,16,17* வசனங்களில் கூறப்பட்டுள்ள பார்க்கக்கூடிய, பேசக்கூடிய, சிலை தயாராகிவிட்டது. தன்னை வணங்காதவர்களை கொலை செய்யவும் தயாராகிவிட்டது. கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசனங்கள் நம் கண்களுக்கு முன்பாக ஆம் என்றும் ஆமென் என்றும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.



# 9

*இந்த அத்தியாயத்திலே வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தில் 16,17 மற்றும் 18-ம் வசனங்களின் விளக்கங்களைப் பார்க்க இருக்கின்றோம்.*

**அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,**

**அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின்**

**இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.**

*மேற்கண்ட வசனங்களின் விளக்கத்திற்குள் செல்லும் முன்பாகவே ஒரு குறிப்பை எழுதிவிட்டு நான் கடந்து செல்ல விரும்புகிறேன். மேற்காணும் கடைசி வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறுநூற்றறுபத்தாறு – 666 என்கிற எண்ணைக் குறித்தும், அதினுடைய ஆதிக்கத்தைக் குறித்தும், அது எவ்வளவாய் நம்முடைய வாழ்க்கையில் கலந்திருக்கிறது என்பதைக் குறித்தும் கர்த்தருக்குச் சித்தமானால் ஒரு தனிப் புத்தகமாக எழுத விரும்புகிறேன். ஆகவே அந்த எண்ணைக் குறித்தும் அது தொடர்பான காரியங்களைக் குறித்தும் இந்த புத்தகத்தில் விவரிக்கவில்லை. அந்திகிறிஸ்துவின் முத்திரையை வலதுகையிலும், நெற்றியிலும் போடுவார்கள் என்று எழுதியிருக்கிறதே, அதைக் குறித்துதான் இவ்வத்தியாயத்திலே மிக முக்கியமாக காண இருக்கின்றோம்.*

*கடைசிக் காலங்களில் எல்லோருடைய வலது கைகளிலாவது நெற்றியிலாவது ஒரு முத்திரை பதிக்கப்படும் என்று 16-ம் வசனம் கூறுகின்றது. இது இனி சம்பவிக்கப் போகின்ற ஒரு காரியம் தானே என நினைப்பீர்களானால், இதற்கொத்த ஒரு காரியம் முன்னோட்டமாக நம்முடைய காலத்திலே நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் முத்திரை பதிக்கப்படுகின்ற கை மட்டும் தான் மாறி இருக்கின்றது.*

*நம் எல்லோருடைய இடது கையிலும் ஒரு முத்திரை இருப்பதை பார்த்திருப்பீர்கள். இதற்கு அம்மை முத்திரை, BCG தடுப்பூசி என பலவிதமான பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கும். நமது இடது கையில் காணப்படுகின்ற இந்த முத்திரையானது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள எல்லா ஜனங்களுடைய இடது கையிலும் இந்த முத்திரை காணப்படுகின்றது.*


*முதலாம் உலக யுத்தத்திற்குப் பின்னர், உலக சுகாதார நிறுவனத்தினால் உலக மக்கள் அத்தனை பேருடைய இடது கையிலும் இந்த முத்திரை பதிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது. இந்த BCG ஊசி போடப்படுவதற்குக் காரணம் நோய் எதிர்ப்பு சக்திக்காக என்று நம்மில் பெரும்பாலானோர் நினைப்பது உண்டு. ஆனால் காரியம்*

அப்படியல்ல. நோய் எதிர்ப்பு சக்தியானது அதற்குப் பிறகு போடப்படும் மற்ற ஊசிகளில்தான் உள்ளது. உண்மையிலேயே இந்த முத்திரை என்ன?

இடது கையில் இருக்கும் இம்முத்திரையை சற்று கவனித்துப் பாருங்கள். இதற்குப் பிற்பாடு நமக்கு போடப்பட்ட எந்தவொரு ஊசியினாலும் இப்படிப்பட்ட அடையாளங்கள் ஏற்படவில்லை. அதன் பின்னர் ஏற்பட்ட எத்தனையோ அடிகள், காயங்கள், தழும்புகள் கூட உண்டான இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. ஆனால் இந்த முத்திரை மட்டும் மறையவில்லை. நாம் பிறந்த சில மணி நேரங்களுக்குள்ளாக, சில நாட்களுக்குள்ளாக போடப்பட்ட இந்த தழும்பு, நாம் மரிக்கும் வரையில் நம்மோடு கூடவே காணப்படுகின்றது. இது உலக நாடுகள் அனைத்தும் உட்கார்ந்து, முடிவெடுத்து உலகத்தில் பிறந்த அத்தனை பேருக்கும் அவர்களின் இடது கையில் அடையாளமாக இருப்பதற்காக இந்த முத்திரையைக் கொண்டு வந்தனர். ஒரு குழந்தையின் கையில் இந்த முத்திரை போடப்படுகிறது என்றால் அந்த குழந்தை பிறப்பது அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கிறது மற்றும் அரசாங்கத்தின் மக்கட் தொகை கணக்கெடுப்பிற்கு உட்பட்டு பிறந்திருக்கிறது என்று பொருளாகும்.

எப்படியென்றால் மருத்துவமனையில் குழந்தை பிறந்தவுடன் அதன் பிறப்பு பதிவு செய்யப்பட்டு இந்த முத்திரை போடப்படுகிறது. அரசாங்கத்தின் கணக்கெடுப்பிற்கு குழந்தை உட்பட்டது என்பது இந்த முத்திரையின் மூலம் உறுதியாக்கப்படுகிறது. இந்த முத்திரை இல்லாவிட்டால் அரசாங்கத்தின் கணக்கெடுப்பிற்கு உட்பட்டது அல்ல என்று பொருள். ஆனால் இந்த *BCG* தடுப்பூசியை போட்டுக் கொண்டால்தானே நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகிறது என்று நினைப்பீர்களானால், நான் ஒரு உண்மையை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஒரு மனிதனுக்குத் தேவையான அத்தனை நோய் எதிர்ப்பு சக்திகளையும் வைத்தேதான் தேவன் குழந்தையை உண்டாக்கி பூமிக்கனுப்புகிறார். மனிதன் உண்டாக்கப்பட்ட நாளிலிருந்து இது தான் நடைமுறை. ஆனால் கருவில் குழந்தை உண்டானது முதல் எடுக்கின்ற மாத்திரை மற்றும் மருந்துகள், இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தியோடு கூட உருவாகும் குழந்தையை இந்த மருந்துகளுக்கேற்றார்போல மாற்றியமைக்கிறது. அதனால்தான் எந்த ஒரு சிறிய நோயானாலும், பலவீனமானாலும், குழந்தையானது மருந்து இல்லாமல் சுகமாக முடியாது என்ற நிலையில் வளருகிறது. இதைக் குறித்து விவரமாகக் கூற இப்போது சமயமில்லை.

இப்படிப்பட்ட முத்திரை உலகம் முழுவதும் எல்லோருக்கும் போடப்படுகிறது. இதற்கொத்த ஒரு முத்திரை அந்தி கிறிஸ்துவின் ஆட்சியின் போது எல்லோருடைய வலது கையிலோ அல்லது நெற்றியிலோ போடப்படும். இதற்காக எந்த அளவிற்கு உலகத்தில் ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இன்னும் சற்று விரிவாகக் காண்போம்.


பயோசிப்

இங்கே நாம் காண்கிற இந்த கருவியின் பெயர் பயோசிப் *(Biochip)*. இது பயோமெட்ரிக் சிப் *(Biometric Chip)* என்பதன் சுருக்கமாகும். இது நம்மை கண்டுபிடிப்பதற்காக நமது உடலிலே பொருத்தப்படப் போகின்ற ஒரு கருவி. நமது உடலிலே நம்மை கண்டுபிடிப்பதற்கென்று நமக்குள்ளே காணப்படுகின்ற எல்லா உயிரியல் அளவீடுகளும் பயோமெட்ரிக் அளவீடுகள் *(Biometric Measurements)* எனப்படும். உதாரணமாக நம்முடைய கைரேகை, கண் கருவிழி, உதடுரேகை, இரத்தப்பிரிவு, டி.என்.ஏ ஆகியவற்றைக் கொண்டு நம்மை அடையாளப்படுத்தி கண்டுபிடிக்க இயலும். அதனோடு கூட இந்த பயோசிப்பையும் நம்முடைய உடலிலே

பொருத்திவிட்டால் நம்மை மிக எளிதாக கண்டுபிடித்துவிட இயலும்.

இதனுடைய அளவு வெறும் *7* முதல் *11mm* மட்டுமே. இதனுள்ளே ட்ரான்ஸ்போன்டர், லித்தியம் பேட்டரி ஆகிய பாகங்கள் உள்ளன. இந்த பயோசிப்பை நம்முடைய உடலில் பொருத்திவிட்டால் நாம் எங்கே இருந்தாலும் செயற்கைக்கோள் மூலமாக அரை நொடியில் நம்மை கண்டுபிடித்து விட முடியும். இது ஒரு அதி நவீன கண்காணிப்பு சாதனமாகும். *IBM* நிறுவனத்தார் இந்த பயோசிப்களை பெருமளவில் தயாரிக்கின்றனர். இவர்களைக் குறித்து விவரமாக அடுத்து வருகின்ற பக்கங்களிலே பார்க்கலாம்.

பயோசிப்பை மக்களுக்குப் பொருத்துவதற்கு அவர்கள் கூறும் காரணம், ஒரு குழந்தை காணாமல் போய் விட்டால் பயோசிப் பொருத்தப்பட்டிருந்தால், அரை நொடியில் செயற்கைக்கோள் உதவியுடன் அந்த குழந்தையை கண்டுபிடித்து விட முடியும். மேலும் அவசரமாக ஒருவருக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறதென்றால் அவருக்கு பயோசிப் பொருத்தப்பட்டிருந்ததேயானால், அவரை 24 மணி நேரமும் கண்காணிப்பில் வைத்திருந்து, அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை மிகச் சரியான நேரத்தில் கொடுக்க இயலும். இப்படிப்பட்ட காரணங்களைக் கூறி பயோசிப்பை எல்லோருக்கும் பதிக்க அவர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

பயோசிப்பில் *RFID* என்று ஒரு பகுதி உண்டு. இதன் மூலமாகத்தான் ஒருவர் கண்காணிக்கப்படுகிறார். ஆரம்பத்தில் இதை மேலை நாடுகளில் பிரபலப்படுத்தும்போது, பயோசிப்பில் உள்ள *RFID*-யின் மூலம் அவர்கள் இருக்கும் இடம் காட்டிக்கொடுக்கப்படும் என்பதாலும், தாங்கள் எப்போதும் கண்காணிக்கப்படுவோம் என்பதாலும் தங்களுடைய தனி மனித சுதந்திரம் பாதிக்கப்படும் என்று கூறி இந்த பயோசிப்பிற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது. பயோசிப் நம்முடைய உடலில் பொருத்தப்பட்டுவிட்டால் நாம் எங்கே இருக்கிறோம் என்று மாத்திரமல்ல, நாம் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் செயற்கைக்கோள் மூலமாக ஒரு நேரடி வீடியோவாகவே எடுத்து இன்னொருவருக்கு அனுப்ப இப்போது இருக்கின்ற அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியால் முடியும்.

முன்பெல்லாம் நாம் போன் இருக்கும் இடத்திற்கு சென்று பேசினோம். ஆனால் இப்போது நாம் எங்கே செல்கிறோமோ அங்கே நம்முடைய செல்போனும் கூட வருகின்றது. செல்போன் சிம் கார்டில் உள்ள *RFID*-யின் மூலமாக நாம் எந்த இடத்தில் இருந்தாலும் நாம் கண்காணிக்கப்பட்டு நமக்கு ஒரு அழைப்பு *(Call)* வரும் போது நமக்குத் தெரியப்படுத்துகிறது. அடுத்ததாக, முன்பு செல்போனில் பேசிகொண்டிருந்தபோது. ஒருவரையொருவர் பார்க்க முடியாது. ஆனால் இப்போதோ வீடியோ கால் *(Video Call)* மூலமாக நேரடியாக நாம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே பேச முடிகிறது.


இதற்காக செல்போனில் இப்போது வீடியோ கால் என்ற சேவையைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஆனால் வரப் போகின்ற தொழில்நுட்பத்திலே இனி

பேசுகிறவரைப் பார்ப்பதற்கு வீடியோ கால் சேவையை தெரிந்தெடுக்கத் தேவையில்லை. மாறாக ஒருவர் அழைப்பை ஏற்றுக் கொண்டவுடனேயே அவர் நின்று பேசுகிற இடத்தை செயற்கைக்கோள் நமக்கு காட்டிக் கொடுத்து, செயற்கைக்கோள் அவரை நமக்கு நேராகத் திருப்பும். நாம் அவரைப் பார்க்க முடியும். எப்படி கிரிக்கெட் போட்டியை நேரடியாக *(Live)* பார்க்கிறோமோ, அதைப் போல நாம் ஒருவரையொருவர் பார்த்துப் பேச முடியும். இந்த பயோசிப்பை உடலில் பொருத்திக்கொள்வதன் மூலம் இவையனைத்தும் சாத்தியம்.

இந்த பயோசிப்பை மனிதனுக்குள் பொறுத்தும் முயற்சியை கார்ல் சேன்டர்ஸ் *(Carl W Sanders)* என்ற விஞ்ஞானி மேற்கொண்டார். இந்த பயோசிப்பை முதலில் மிருகங்கள், பறவைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் உடலில் பொருத்தப்பட்டு அவைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்பு மனிதர்களுக்கு பொருத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் உள்ளே மிகச் சிறிய அளவிலான லித்தியம் பேட்டரி ஒன்று உள்ளது. பயோசிப் இயங்குவதற்கு இந்த லித்தியம் பேட்டரி தினந்தோறும் மின்னேற்றம் *(Charge)* செய்யப்பட வேண்டும். ஒரு முறை பயோசிப்பை மனித உடலில் பொருத்திவிட்டு தினந்தோறும் அதை வெளியே எடுத்து மின்னேற்றம் செய்வது என்பது இயலாத காரியம். ஆகவே மனித உடலிலே இயற்கையாகவே வெளிப்படுகின்ற மின்காந்த அலைகளைக் கொண்டு இந்த லித்தியம் பேட்டரி உள்ளுக்குள்ளேயே மின்னேற்றம் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்லாது அன்றாடப் பயன்பாட்டிற்காக எளிதாக உபயோகப்படுத்தும் வகையில் உடலில் பொருத்தப்பட வேண்டும்.

*IBM* நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த கார்ல் சேன்டர்ஸ் என்பவர் பயோ சிப் எங்கே பொருத்தப்பட வேண்டும் என்று ஆய்வுகளை மேற்கொண்டு முடிவாக மனித உடலில் வலது கை மற்றும் நெற்றி ஆகிய இவ்விரு இடங்களே பயோ சிப் பொருத்தப்படுவதற்கு மிகவும் ஏற்ற இடங்கள் என்று தனது அறிக்கையை *IBM* நிறுவனத்திற்கு அனுப்பினார்.

இந்த *IBM* நிறுவனத்தின் பூர்வீகத்தை சற்று ஆராய்வோமானால் அதிர்ச்சியடைவோம். இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் தனது நாசி இயக்கத்தை ஏற்றுக் கொண்ட யூதர்களுக்கு அவர்களின் இடது கையிலே ஒரு ஐந்து இலக்க எண்ணை முத்திரையாகப் பதித்தார். அவ்வாறு பதிக்கப்பட்ட யூதர்கள்




உயிரோடு வைக்கப்பட்டனர். இந்த யோசனையை ஹிட்லருக்கு அறிமுகப்படுத்தியவர் யாரெனில் மேற்கண்ட *IBM* நிறுவனத்தை துவக்கியவரும் ஹிட்லரின் நண்பருமான தாமஸ்.ஜெ.வாட்சன் என்பவராவார். இதற்கு ஹோலோகாஸ்ட் *(Holocaust)* என்ற இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. ஒரு புரிந்து கொள்ளுதலுக்காக அந்த நாட்களின் கணினி என்று வைத்துக் கொள்ளலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் போது யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு அவர்களின் இடது கையில் ஐந்து இலக்க எண் முத்திரையாகப் பதிக்கப்பட்டது. இந்த இயந்திரத்திற்குரிய எண் ஒன்றும் சேர்த்து ஆறு இலக்கம். இந்த ஆறு இலக்க எண்ணிற்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு அடிமைகளாக கண்காணிக்கப்பட்டனர். இந்த ஆறு இலக்க எண்ணிற்கு உட்படாத யூதர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இதே காரியத்தைத் தான் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களோடு எல்லா மக்களுக்கும் புகுத்துவதற்கு *IBM* நிறுவனம் முயற்சித்து வருகிறது. பயோசிப்பிலே பதினாறு இலக்க எண் ஒன்று இருக்கும். அதனை இயக்குகின்ற கணிப்பொறிக்கு இரண்டு எண்கள் *(0,1)*. ஆக மொத்தம் பதினெட்டு இலக்க எண்ணைக் கொண்ட பயோசிப் வலது கைக்கும், நெற்றிக்கும் வர இருக்கின்றது. இந்த பதினெட்டு இலக்க எண்ணை மூன்று பகுதிகளாக ஆறு ஆறு ஆறு எனப் பிரித்தால் வெளி – *13:18* கூறுகின்றபடி மிருகத்தின் இலக்கமான *666*, வலது கைக்கும், நெற்றிக்கும் முத்திரையாக வருவதைக் காணலாம்.


பயோசிப்பானது உலகத்தில் நடைமுறையில் உள்ள எல்லா பயன்பாட்டு அட்டைகளுக்கும், கண்காணிக்கிற கருவிகளுக்கும் மாற்றுப் பொருளாக கொண்டு வரப்படப் போகின்றது. அதற்கு முன்னோட்டமாக ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, காப்பீட்டு அட்டை *(Insurance Card)*, வங்கியின் பற்று அட்டை *(Debit Card)*, கடன் அட்டை *(Credit Card)*, கடவுச்சீட்டு *(Passport)*, நுழைவு இசைவுச் சீட்டு *(Entry Visa)* என இருக்கின்ற அத்தனை அட்டைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே அட்டை முறையாக *(One Card System)* மாற்றப்படப் போகின்றது. இனி வரும் நாட்களில் பண நோட்டுகள் முழுமையாக புழக்கத்திலிருந்து அகற்றப்பட்டு அட்டையின் மூலமாக மட்டுமே பணப்பரிமாற்றம் நடைபெற இருக்கின்றது. அப்படி நடப்பதெற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்று நீங்கள் நினைப்பீர்களானால், நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே ஸ்வீடன் நாட்டிலே பண நோட்டுகளின் உபயோகம் முழுவதுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. முழுவதுமாக அட்டை முறை கொண்டுவரப்பட்டு விட்டது. இந்தியாவிலும் *2016*-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆதார் அட்டையை வங்கி அட்டையாகப் பயன்படுத்தும் முறை வந்துவிட்டது.

ஆதி நாட்களில் நம்மிடம் உள்ள பொருட்களைக் கொடுத்துவிட்டு நமக்குத் தேவையான பொருட்களை வாங்கும் பண்டமாற்று முறையைக் கொண்டிருந்தோம். பின்னாட்களில் வாங்கிய பொருளுக்குப் பதிலாக காசைக் கொடுக்கும் முறை வந்தது. அது தங்கத்தினால் செய்யப்பட்ட காசாகவோ, வெள்ளியினால் செய்யப்பட்ட காசாகவோ இருந்தன. மேலும், செப்புக் காசுகளும் உபயோகப்படுத்தப்பட்டன. பின்னர் மற்ற உலோகங்களால் செய்யப்பட்ட காசுகளும் புழக்கத்தில் வந்தன. தற்போது பேப்பரில் செய்யப்பட்ட காசுகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

தற்போது இவையெல்லாவற்றிற்கும் மாற்றாக அட்டையின் மூலமாக பணப்பரிமாற்றம் செய்யத் துவங்கியிருக்கிறோம். இப்போது எல்லா நாடுகளிலும் அட்டை முறையும், நேரடி பண நோட்டுகளின் உபயோகமும் *(Cash Transaction & Cash-free Transaction)* புழக்கத்தில் உள்ளன. நம்முடைய நாட்டிலும் கூட பெட்ரோல் வங்கி, ரெஸ்டாரண்டுகள் போன்ற இடங்களில் பணம் கொடுப்பதற்கு அட்டையைப் பயன்படுத்துகிறோம். ஆனால், சிறிய தேநீர் கடைகளில் அட்டையைப் பயன்படுத்த இயலாது. அங்கே நேரடியாக பணத்தைத்தான் பயன்படுத்துகிறோம்.

எல்லா நாடுகளிலும் இதே நிலைதான் நிலவுகிறது. ஆனால் ஸ்வீடன் நாட்டிலே 2015-ம் ஆண்டிலே நேரடி பண உபயோக முறை முழுவதும் ஒழிக்கப்பட்டு, இப்போது வரை அட்டை முறை மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. அங்கே மிகச் சிறிய தேநீர் கடை துவக்கி, பெரிய நிறுவனங்கள் வரை அனைத்து இடங்களிலும் அட்டை தேய்க்கும் இயந்திரம் *(Swiping Machine)* வைக்கப்பட்டுள்ளது. இந்த அட்டை முறை நேரடிப் பணப்பரிமாற்றத்திற்கு மாற்றாக மட்டுமல்ல, இன்னும் நாம் உபயோகப்படுத்தும் அத்தனை அட்டைகளையும் ஒருங்கிணைத்து, ஒரே அட்டை முறையாக *(One Card System)* மேம்படுத்தப்படும். இந்த அட்டை முறை தான் கையில் பயோசிப்பாக மாறப் போகின்றது.

ஏனென்றால் இந்த அட்டையில் மஞ்சள் நிறத்தில் ஒரு சதுரம் இருப்பதைப் பார்த்திருப்போம். அதற்கு *RFID (Radio Frequency Identification)* என்று பெயர். இது நம்மைக் கண்காணிக்கும் கருவியாகும். இதைக் குறித்து *(666, ஜாக்கிரதை)* ஒளிப்பேழைகளிலே விளக்கமாகப் பேசி இருக்கிறோம். அதைத் தவிர்த்து இதர முக்கியமான காரியங்களைத் தான் இந்த புத்தகத்தில் எழுதுகிறோம்.





அட்டைக்குப் பதிலாக பயோசிப்பை கையில் பொருத்திக்கொண்டால் இனி நாம் செல்லும் எல்லா இடங்களுக்கும் எந்தவொரு ஆவணத்தையும் கொண்டு செல்லத் தேவையில்லை. உதாரணமாக ஒரு சிம் கார்டு வாங்க வேண்டுமானால் நம்முடைய ரேஷன் அட்டையை கொண்டு செல்கிறோம். இனி அது தேவைப்படாது. ரயிலிலே பிரயாணம் செய்ய வேண்டுமானால் ஒரு அடையாள அட்டையை கண்டிப்பாக கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இனி அந்த நிர்பந்தம் இருக்காது. ஒருவேளை வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால் பாஸ்போர்ட் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் பாஸ்போர்டை புத்தகமாகக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இராது. ஏனெனில் இந்த அத்தனை விவரங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு நம்முடைய வலது கையில் பயோசிப்பாக பதிக்கப்பட்டு விட்டபடியினாலே பரிசோதனையின் போது ஸ்கேனர் முன்பாக நாம் நின்றால் போதும், ஸ்கேன்

செய்யப்பட்டவுடன் நாம் செல்லலாம். இப்போது வலது கைக்கும், நெற்றிக்குமான முத்திரை தயாராக இருக்கின்றது. உலக நாடுகள் எல்லாம் இதை போட்டி போட்டுக்கொண்டு பயன்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். *120* நாடுகளிலே தற்போது பயோசிப் பயன்பாட்டிற்குத் தயாராக உள்ளது.

இந்த பயோசிப் சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் என அனைவரின் கைகளிலும் பதிக்கப்படுமென வெளி – *13:16* கூறுகின்றது. இந்த வேதவசனம் எப்படி நம் கண்களுக்கு முன்பாக நூறு சதவீதம் நிறைவேறுகின்றது என்பதை இப்போது காண்போம். கடந்த *2013*-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து மகாராஷ்டிரா அரசாங்கம் பள்ளிக் குழந்தைகளைக் கண்காணிப்பதற்கு பயோசிப்பைப் பொருத்துவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான ஆதாரச் செய்தி ஒரு தினசரி நாளிதழில் வந்ததுள்ளது. ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் *2012*-ம் ஆண்டிலிருந்தே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த *2016*-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து ஐரோப்பிய யூனியனின் *27* நாடுகளில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் பயோசிப்பைப் பதிக்கச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. *2017*-ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் உள்ள எல்லா பிரஜைகளுக்கும் மருத்துவக் காப்பீட்டு வசதியை கொடுக்கும்படிக்கு அனைவருக்கும் பயோசிப் பொருத்தப்பட இருக்கின்றது. இதில் முக்கியமான காரியம் என்னவெனில், எப்படி நம் நாட்டில் ரேஷன் அட்டை இல்லாமல் வாழ முடியாதோ, அப்படியே அமெரிக்காவில் காப்பீட்டு அட்டை இல்லாமல் வாழ முடியாது. அந்த

**All European newborn Babies will be Microchipped from December 2016**



824.8K SHARES

On December 2016, through Europe newborn children will be compelled to take in a subcutaneous RFID chip.

Public clinics in the European Union are to be alerted. The chip in inquiry will be contributed

காப்பீட்டு அட்டையைத் தான் பயோசிப்பாக மாற்ற இருக்கின்றனர். மலேசிய அரசாங்கம் தற்போது வரை இரண்டு கோடி பயோசிப்களை தயாராக வைத்துள்ளது.

இப்படி பொருத்தப்படும் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறு ஒருவனும் வாங்கவும், விற்கவும் கூடாதபடிக்கு செய்யப்படும் என்று வெளி - *13:17* கூறுகின்றது. சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்திலே ஹெர்னாண்டஸ் என்பவர் தனது மகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கச் சென்றார். அப்போது பள்ளிக்கூட நிர்வாகம் ஹெர்னாண்டஸிடம், "உங்கள் மகளை சேர்த்துக் கொள்ள எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எங்கள் பள்ளியின் முறைமையின்படி உங்கள் பிள்ளைக்கு இந்த பயோசிப்பைப் பொருத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறினர்.

அப்போது ஹெர்னாண்டஸ், "நான் ஒரு கிறிஸ்தவன். வேதத்தைப் படிக்கிறவன். எங்களுடைய பரிசுத்த வேதாகமத்திலே இந்த பயோசிப்பைத் தரித்துக் கொள்ளக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இதை என் மகளுக்கு பொருத்துவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்" என்றார். அதற்கு அந்த பள்ளி நிர்வாகம், "அப்படியானால் உங்கள் பிள்ளையை எங்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ள முடியாது, அப்படியே சேர்த்துக் கொண்டாலும், அவள் பள்ளியின் நூலகம், சிற்றுண்டி நிலையம் என எந்த இடங்களுக்கும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாள், அவள் தனியாக உட்கார வைக்கப்படுவாள்" என்று பதிலளித்தனர். உடனடியாக ஹெர்னாண்டஸ் டெக்சாஸ் மாநிலத்தின் நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். வழக்கு விசாரணை நடைபெற்று முடிந்தது. அதன் தீர்ப்பு ஆச்சரியப்படத்தக்க வகையில் இருந்தது. அவர்கள் ஹெர்னாண்டஸுக்கு கூறிய அறிவுரை என்னவெனில், "இது பள்ளிக்கூடத்தின் பாதுகாப்புக் காரியம். இதில் நாங்கள் தலையிட முடியாது. ஒன்று, நீங்கள் பள்ளி நிர்வாகம் கூறுவது போல இந்த பயோசிப்பை உங்கள் பிள்ளைக்கு பொருத்தக் கொள்ளுங்கள் அல்லது வேறு பள்ளிக்கு உங்கள் பிள்ளையை மாற்றிக் கொள்ளுங்கள்" என்றனர். அது மட்டுமல்லாது டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள *112* பள்ளிகளில் படிக்கும் மொத்தம் ஒரு இலட்சம் பிள்ளைகளுக்கு பயோசிப் பொருத்தப்பட உள்ளது.

கடைசி நாட்களில் இந்த முத்திரை இல்லாமல் வாங்கவும், விற்கவும் முடியாது என்கிற நிலை உண்டாகும் என்ற வசனத்தின்படியே, உங்கள் பிள்ளையின்

எதிர்காலமே இதில்தான் உள்ளது என்று நீங்கள் விசுவாசிக்கக்கூடிய படிப்பு இந்த பயோசிப் இல்லாமல் கிடைக்காது என்ற நிலை உண்டாகிவிட்டது. இப்போது இந்தியப் பள்ளிகள் அனைத்திலும் அடையாள அட்டை முறை *(Identification Card)* கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தனை பிள்ளைகளும் அடையாள அட்டை *(I.D.Card)* அணிந்து தான் பள்ளிக்கூடம் செல்கின்றன. இந்த *I.D.Card* தான் பயோசிப்பாக மாறப் போகின்றது. இந்த *I.D.Card*-ல் பள்ளியின் பெயர், விலாசம், உங்கள் பிள்ளையினுடைய பெயர், வகுப்பு, பிரிவு, பிள்ளையின் தகப்பன் பெயர், பிள்ளையினுடைய இரத்தப் பிரிவு, தொலைபேசி எண் என அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த அத்தனை விவரங்களும் பயோசிப் ரூபத்தில் வலது கைக்கு மாறப் போகின்றது. வெளிப்பாடு *13*-ம் அதிகாரத்தின் கடைசி மூன்று வசனங்களில் கூறப்பட்டுள்ள வலது கைக்கும், நெற்றிக்குமான முத்திரை தயாராகி விட்டது.

இப்போது சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே ஒரு முறை ஒருவன் தவறு செய்துவிட்டு கைதியாக சிறைச்சாலைக்கு வந்தால், அவனுக்கு இந்த பயோசிப்பைப் பொருத்தி விடுகிறார்கள். அதன் பிறகு அது வெளியே எடுக்கப்படுவதில்லை. அவன் விடுதலையாகி வெளியே வந்த பின்னரும் *24* மணி நேரமும் அவன் கண்காணிக்கப்படுகிறான். ஒருவேளை அவன் பயோசிப்பை வெளியே எடுக்க முயற்சி செய்வானானால் உடனடியாக காவல் நிலையத்திற்கு அந்த தகவல் சென்றுவிடும். அவன் மாட்டிக்கொள்வான். பொருத்தப்பட்ட இந்த பயோசிப்பை வெளியே எடுப்பதற்கு ஒரு செயல்முறை உண்டு. அந்த முறைப்படி பயோசிப் செயல்பாட்டு நீக்கம் செய்யப்பட்டு *(Deactivate)* பின்பு வெளியே எடுக்கப்பட வேண்டும். அப்படி செய்யாமல் வெளியே எடுக்க முயற்சித்தால் பயோசிப்பில் உள்ள லித்தியம் பேட்டரி வெடிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி வெடித்தால் பேட்டரியில் உள்ள லித்தியம் உடலின் இரத்தத்தோடு கலந்து கொடிய புற்று நோய் வர வாய்ப்புள்ளது. அதனோடு இந்த நச்சுத்தன்மையுள்ள லித்தியம் உடலில் உள்ள பொட்டாசியம் முதலிய தனிமங்களோடு வினைபுரியுமானால் வெடிப்பொருளாக மாறவும் வாய்ப்புள்ளது. இந்த பயோசிப்பைத் தரித்தவர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாகும் என்று வெளி – *16:2* கூறுகின்றது.

இவ்வளவு ஆபத்தான பயோசிப் நம்முடைய கைககளில் பதிக்கப்படுவதற்கு தயாராக உள்ளது. நம்முடைய ரேஷன் அட்டை, ஓட்டுனர் உரிமம், வங்கிக் கணக்கு, பாஸ்போர்ட் என எல்லாவற்றிற்கும் ஆதார் அட்டை கட்டாயமாக்கப்படுகிறது. இந்த ஆதார் அட்டைக்குப் பதிலாகத்தான் பயோசிப் கொண்டுவரப்படப் போகின்றது. தமிழ்நாட்டில் உள்ளதான வார இதழ் ஒன்று இதைக் குறித்து தெளிவாக செய்தி வெளியிட்டிருக்கிறது. அதற்கான ஆதாரப் புகைப்படத்தை இங்கே காணலாம்.

## ஆதார் அட்டையை கொண்டு ஏடிஎம்மில் பணம்

மும்பை வங்கி முதல்முதலாக அறிமுகம்

மும்பை, ஏப்.4 : ஆதார் அட்டையை அடிப்படையாக கொண்டு ஏடிஎம்மில் பணம் எடுக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை மும்பையைச் சேர்ந்த தனியார் வங்கி அளிக்கிறது.

வங்கிகளுக்கு சென்று கால் கடுக்க வரிசையில் நின்று பணம் பெற்ற காலம் மலையேறிவிட்டது. இப்போது தெருவுக்கு தெரு நிறைந்துள்ள ஏடிஎம் மையங்களில் நினைத்த நேரத்துக்கு பணம் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அனைவருக்கும் வங்கி சேவை வசதி சாத்தியமாகி விட்ட நிலையில், வங்கிகளின் டெபிட் உட்பட ஸ்மார்ட் கார்டுகளை பயன்படுத்தி அதற்கான ரகசிய எண்ணை கொண்டு தேவைப்படும் பணத்தை எடுக்க முடிகிறது.

இந்நிலையில், ஆதார் அட்டையை அடிப்படையாக கொண்டு ஏடிஎம்களில் பணம் எடுக்கும் வசதியை மும்பையைச் சேர்ந்த டிசிபி பேங்க் என்ற தனியார் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் ஆதார் அட்டை ஏடிஎம் இயந்திரத்தில் செலுத்தி பணத்தை எடுக்க முடியும். பரிவர்த்தனையை உறுதி செய்ய ரகசிய எண்ணுக்குப் பதிலாக அவர்கள் கைரேகையை பதிவு செய்ய வேண்டும்.



ஆதார் அட்டையில் இடம் பெற்றுள்ள 12 இலக்க எண்ணை பயன்படுத்தியும் இதே முறையில் பணம் எடுக்க, இருப்பு குறித்து தகவல் அறிய முடியும் என அந்த வங்கியின் அதிகாரி முரளி நடராஜன் கூறியுள்ளார்.

இந்த வசதியை பயன்படுத்த வங்கி வாடிக்கையாளர்கள் ஆதார் அட்டை தகவல்களை வங்கி கணக்குடன் இணைக்க வேண்டும். ஆதார் அட்டைக்கு மத்திய அரசு சட்டபூர்வ அங்கீகாரம் அளித்துள்ளது. அரசின் பயன்களை பெற இது அத்தியாவசிமாகி உள்ளது.

மும்பை தனியார் வங்கியின் ஆதார் அட்டையை ஏடிஎம்களில் பயன்படுத்தும் இந்த வசதி பின் எனப்படும் ரகசிய எண்ணை நினைவில் வைத்து கொள்ள முடியாதவர்கள், படிக்காதவர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

இந்த புகைப்படத்தில் கூறப்பட்டுள்ள காரியத்தை சற்று கவனியுங்கள். இப்போது கொடுக்கப்படுகிற ஆதார் அட்டைக்கு மாற்றாக வலது கை அல்லது நெற்றியிலே அரிசி அளவு உள்ள சிப் பொருத்தப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. இப்போது கூறப்படுகின்ற நம்முடைய கண்கள் கண்டு கொண்டிருக்கின்ற இந்த பயோசிப்பைக் குறித்து, கி.பி.95-லேயே கர்த்தர் வெளிப்படுத்தின விசேஷத்தில் எழுதியிருக்கிறார். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசனங்கள் நம் கண்களுக்கு முன்பாக ஆம் என்றும் ஆமென் என்றும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

இது அந்திகிறிஸ்துவின் ஆட்சியிலே எப்படி செயல்படப் போகிறது? அந்திகிறிஸ்து உலகம் முழுவதும் ஒரே உலக அரசாங்கத்தை நிறுவுவான் *(One World Government)*. அப்போது உலகத்தின் ஜனங்களுக்கு ஒரே உலக அட்டை *(One World ID)* கொடுக்கப்படும். இந்த ஒரே உலக அட்டைக்கு மாற்றாகத்தான் பயோசிப் எல்லோருக்கும் பொருத்தப்படும். அதற்கு ஆயத்தப்படுத்தும் விதமாக இப்போதே உலகத்தின் அத்தனை வங்கிகளும், *ATM* இயந்திரங்களும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் இணைக்கப்பட்டுவிட்டன. உலகின் எல்லா விமானங்களும் இணைக்கப்பட்டுவிட்டன. ஓர் உலக அரசாங்கத்திற்கான ஆயத்தப்பணியில் உலகம் வெகு தூரம் முன்னேறி விட்டது. இன்னும் எஞ்சியிருப்பது மிகச் சொற்பமான காரியங்கள் மட்டுமே.

நீங்கள் சற்று கவனித்துப் பார்ப்பீர்களானால், அநேக இடங்களில் *One World* என்ற பதம் பயன்படுத்தப்படுவதைப் பார்க்க இயலும். உதாரணமாக ஒரு தனியார் விமான நிறுவனம் *One World* என்று விளம்பரப்படுத்த துவங்கியிருக்கிறது. இந்தியாவிலுள்ள ஒரு செருப்பு நிறுவனம் *One World* என்று பயன்படுத்தத் துவங்கியிருக்கிறது. சமீபத்தில் உலகத்தின் அரசியல் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய உலக ஒழுங்குப் பின்னணியை *(New World Order)* உருவாக்க வேண்டும் என்று பேசி இருக்கின்றனர். இந்த புதிய உலக ஒழுங்குப் பின்னணி நடைமுறைக்கு வரும் போது அத்தனை பேருக்கும் இடது கையில் உண்டாக்கப்பட்ட முத்திரைக்கு பதில் வலது கையில் பயோசிப் பொருத்தப்படும். அவ்வாறு இந்த முத்திரை பதிக்கப்பட்ட அனைவரும் அரசாங்கத்தின் கணக்கிற்கு உட்பட்டவர்களாயிருப்பார்கள். ஓர் உலக அரசாங்கத்தில் போடப்படும் இந்த முத்திரையும் *(Biochip)*, வங்கிகளும், *ATM* இயந்திரங்களும், அரசாங்கத்தின் அலுவலகங்களும், அவைகளின் தானியங்கி கதவுகளும் இணைக்கப்பட்டிருக்கும். இந்த முத்திரை இருந்தால்தான் நீங்கள் *ATM*-ல் பணம் எடுக்க முடியும். இந்த முத்திரை இருந்தால்தான் வங்கிகளுக்குள் நீங்கள் நுழைய முடியும். இந்த முத்திரை இருந்தால்தான் அரசாங்க அலுவலகங்களுக்குள் நுழைய முடியும். அதுமட்டுமல்ல, இந்த முத்திரை இருந்தால்தான் விமான நிலையத்திற்குள் நுழைய முடியும். இந்த முத்திரை இருந்தால்தான் எல்லா வணிக வளாகங்களுக்குள் நுழைய முடியும். நீங்கள் இப்போது ஒரு வணிக வளாகத்திற்குள் நுழையும்போது, தானியங்கி கதவுகள் தானாகத் திறக்கிறதைப் பார்த்திருப்பீர்கள்.

இப்போது நீங்கள் அருகில் வந்தவுடன் தானாக திறக்கும் இந்த கதவுகள் அந்திகிறிஸ்துவின் ஆட்சியில், பயோசிப் கையிலோ அல்லது நெற்றியிலோ பொருத்தப்பட்டிருந்தால் மட்டுமே திறக்கும். அது இல்லாவிட்டால் திறக்காது. இப்போது நாம் அந்த கதவிற்கருகில் சென்றவுடன் நம்முடைய அருகாமையை உணர்ந்து கதவைத் திறக்கும் வகையில் அதிலுள்ள ஸ்கேனரில் மென்பொருட்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் வரப்போகிற நாட்களிலே கையில் பதிக்கப்பட்டுள்ள பயோசிப்பில் இருந்து வரக் கூடிய ரேடியோ அலைகளை ஏற்றுக் கொண்டு, அது பொருந்தினால் மட்டுமே கதவுகள் திறக்கும் வகையில் எல்லா அலுவலகங்களின் ஸ்கேனர்களிலும் மென்பொருள்கள் மாற்றியமைக்கப்படும். அந்திகிறிஸ்துவின் ஆட்சியிலே மனிதர்களைக் கண்காணிப்பதற்குத் தேவையான அத்தனை காரியங்களும் தயாராகிவிட்டன.

இந்த பயோசிப்பை தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலே இரண்டு இடங்களில் மிக வேகமாகத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். தெற்காசியாவிலேயே இந்தியாதான் அதிகமாக பயோசிப் தயாரிக்கக்கூடிய ஒரு நாடு. கர்த்தர் சொல்லியபடி வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரம் நம் கண்களுக்கு முன்பாக நிறைவேறத் துவங்கிவிட்டது.

ஏன் இந்த 13-ம் அதிகாரத்தின் விளக்கவுரையை ஒரு புத்தகமாகக் கொண்டு வந்தோமென்றால் முடிவு காலத்திலே, இவ்வதிகாரத்தின் சம்பவங்களுக்கு ஊடே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வெகு சீக்கிரத்திலே அந்திகிறிஸ்துவின் ஆட்சி வெளியரங்கமாய் வரப் போகின்றது. அது வருவதற்கு முன்பாக ஆண்டவர் மிக மிக முக்கியமான ஒரு காரியத்தை செய்யப்போவதாக கூறியிருக்கிறார். அது என்னவென்று அடுத்த அத்தியாயத்திலே பார்ப்போம்.



# முடிக்கும் முன்...

நாம் கடைத்தொகைக்கு வந்துவிட்டோம். ஆம், இந்த புத்தகத்தின் கடைசி அத்தியாயத்திற்கு வந்துவிட்டோம். நாம் இதுவரையில் கண்ட சம்பவங்கள் எல்லாமே சம்பவிக்க வேண்டியவைகளே. இந்த வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கவுரையை எழுதுவதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, இந்த 13-ம் அதிகாரத்தின் விளக்கத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக. இரண்டு, இந்த அதிகாரத்தின் விளக்கத்தை நீங்கள் புரிந்து கொண்டு உங்கள் வேத அறிவை வளர்த்துக் கொள்வதற்காக மட்டுமல்ல, இதில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பாக நடைபெற இருக்கின்ற மகிமையான நிகழ்விற்கு உங்களை ஆயத்தப்படுத்தவே.

இந்தப் புத்தகத்தை எழுதுவது எங்களுடைய ஊழிய பிரயோஜனத்திற்காக அல்ல. இந்தப் புத்தகத்தின் உண்மையான நோக்கம் என்ன தெரியுமா? இந்த உலகம் இதுவரையில் கண்டிராத ஒரே ஒரு முறை காணப் போகின்ற மகிமையான ஒரு சம்பவத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்தவே. அதுதான் சபை எடுத்துக்கொள்ளப்படுதல்.

இயேசு கிறிஸ்துவின் வருகையானது இரண்டு பாகங்களைக் கொண்டது. முதலாவதாக, அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாக வெளிப்பட வேண்டும். இரண்டாவதாக நீதியுள்ள நியாதிபதியாக உலகத்தை ஆளுகை செய்கிறவராக வெளிப்பட வேண்டும். இதை அறிந்தே ஆண்டவருடைய வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளில் ஒருவராகிய யோவான்ஸ்நானன் கூட ஆண்டவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாக வெளிப்படப் போவதை தீர்க்கதரிசனமாக உரைத்த பின்னரும் அவர் ராஜாதிராஜாவாக அரசாள்வதற்காகவும் காத்திருந்தார். இயேசு கிறிஸ்துவும் கூட தான் பூமியில் இருந்த நாட்களில் தான் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாய், தான் நிறைவேற்ற இருக்கின்ற தன்னுடைய மரணத்தைக் குறித்தே அதிக கவனம் செலுத்தினார். அவர் சிலுவை சுமந்த பின்னர் தான் அவர் ராஜாவாக மாற வேண்டும். ஆனால் யூதர்களோ தங்கள் மேசியா உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாய் வெளிப்படுவார் என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்தும் அதைக் கவனியாமல், அவர் ராஜாதி ராஜாவாக வெளிப்படுவார் என்கிற இரண்டாம் பாகத்திற்காகவே காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதே தவறை இப்போது திருச்சபையும் செய்யத் துவங்கியிருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று, சபை எடுத்துக் கொள்ளப்படுதல். அதாவது பரிசுத்தவான்கள் மறுரூபமாகி பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசித்தல், ஏழு ஆண்டு காலத்தின் முடிவில் இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக வருதல். ஆனால் இன்று அத்தனை பேரும் இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்து, இடைப்பட்ட ஏழு ஆண்டுகளைக் குறித்து, அவர் ராஜாவாக வருவதைக் குறித்தே அதிக கவனம் செலுத்துகிறார்களே ஒழிய சபை எடுத்துக்கொள்ளப்படுதல் என்று அழைக்கப்படக்கூடிய பரிசுத்தவான்கள் மறுரூபமாகிறதைக் குறித்து கவனம் செலுத்துகிறதில்லை. ஒரு சில திருச்சபைகளே

இந்தக் காரியத்தில் கவனம் செலுத்துகின்றன. சில திருச்சபைகளுக்கு இந்த உபதேசங்களே தெரியாது. சில திருச்சபைகள் இவை எல்லாவற்றையும் அறிந்திருந்தாலும் கூட வருகைக்கு ஆயத்தப்படவில்லை. அவர்கள் இந்த பூமியில் தங்கள் ராஜ்யத்தைக் கட்டுவதற்கும், தங்கள் ஊழியத்தின் எல்லைகளையும், தங்களுடைய தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையின் எல்லைகளையும் விஸ்தாரமாக்குவதற்கே செலவிட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர மறுரூபமாவதற்கு ஏற்ற ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழவில்லை. ஆனால் எல்லாவற்றையும் நஷ்டமும், குப்பையும் என்று விட்ட அப்போஸ்தலர் பவுல் ஒன்றே ஒன்றிற்காகத்தான் காத்திருந்தாராம். எதற்காகத் தெரியுமா? கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் மேகங்கள் மேல் அவர்களோடு கூட எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று காத்திருந்தார், எதிர்பார்த்திருந்தார், அதை அடைய வாஞ்சையாய் தொடர்ந்தார். அந்த மகிமையான தருணத்திற்காகவே அவர் காத்திருந்தார். நாம் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று விசுவாச அறிக்கையிட்டார். ஆனால் அன்று பவுல் எதை நஷ்டமென்றும், குப்பையென்றும் விட்டாரோ, இன்று அதே நஷ்டத்தையும், குப்பையையும் தன் தலையின் மேல் தூக்கி வைத்துக் கொண்டு, அவர் எதை இலாபமானதாகக் கருதினாரோ அந்த மகிமையான இயேசு கிறிஸ்துவின் வருகையில் பங்கடைதலை நஷ்டமென்றும், குப்பையென்றும் எண்ணி இன்றைய திருச்சபை கைவிட்டுக் கொண்டிருக்கின்றது.

பிரியமானவர்களே, இந்த புத்தகத்தின் நோக்கம் வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒரு அதிகாரத்தின் விளக்கவுரையை எழுதி, கர்த்தர் எங்களுக்கு வெளிப்படுத்தினார் என்று எங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் மேன்மையை மார்தட்டிக் கொள்வதற்காக அல்ல. இதை வாசிக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் மகா மகிமையான கனம் பொருந்திய, சரித்திரத்திலேயே ஒரேயொரு முறை நடைபெறப் போகின்ற இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பங்கடைய வேண்டும். அதற்கான ஆயத்தத்தைத்தான் இந்த புத்தகம் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

இந்த புத்தகத்தை நீங்கள் படித்துவிட்டு இதை உங்கள் அலமாரியை அலங்கரிப்பதற்கு வைத்துவிடாதிருங்கள். அதனால்தான் இந்த புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே எழுதினோம். இந்த புத்தகம் உங்கள் அலமாரியை

அலங்கரிப்பதற்கல்ல. படித்துவிட்டு பலரிடம் பகிர்ந்துகொள்ள. பத்திரமாய் பாதுகாக்க ஒரு பிரதி வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்படி, அநேகரை ஆதாயம் பண்ண, இப்புத்தகத்தை அன்பளிப்பாய் பரிசளியுங்கள்.

உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் பிரயோஜனத்திற்கு. இது வேதாகமத்திற்கு மாற்று அல்ல. இது வேதாகமத்தைப் படித்துவிட்டு நேரம் கிடைக்கும்போது படிப்பதற்கான புத்தகமே. இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களில் உங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்குமானால், தைரியமாய் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். ஒருவேளை எங்கள் கருத்துக்களில் தவறுகள் இருக்குமானால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஒருவேளை உங்களிடத்தில் தவறுகள் இருக்குமானால் இன்னும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

இந்த இயேசு கிறிஸ்துவின் மகிமையான, மகா மேன்மையான, கனம் பொருந்திய வருகையில் பங்கடைவதற்கு

**1. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டு,**

**2. பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து,**

**3. மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையான பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டு,**

**4. இந்த உலகம் எனக்குப் பாத்திரம் அல்ல என்று சொல்லும் வேறுபாடுள்ள வாழ்க்கையை வாழ்ந்து,**

**5. ஒவ்வொரு நாளும் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட மகிமையான சுவிசேஷத்தை அநேகருக்கு அறிவித்து,**

**6. ஒவ்வொரு நாளும் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தத்தோடு காணப்படுவோமானால்,**

**7. மேற்கூறிய ஆறிலும், முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப் படுவான்.**

*அவர் வருகையின் போது எக்காளம் தொனிக்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தோரெல்லாம் மண்ணைவிட்டு மகிமையிலே மணாளனை சந்திக்க வீறுகொண்டு விரைந்தோட, பின்பு உயிரோடிருக்கும் நாமும் உன்னதமானவரை உவகையாய் சந்திக்க உலகை விட்டு மறுரூபமாகிப் பறந்தோட, வல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்த நல்லவரும் வருவோரை வரவேற்க வானம்வரை இறங்கி வர, குதூகலம் நிறைந்த நேரம் நடுவானில் நடந்தேற, பரலோகம் பரவசமாகிட, தூதர்கள் துள்ளிக் குதித்திட, அண்ட சராசரங்களும் ஆர்ப்பரிக்க ஆண்டவன்மாரை சந்திக்கும் அத்தருணம் நெருங்கிடுதே, அதில் பங்கடைய நெஞ்சமும் ஏங்கிடுதே!*

**மகிமையில் இயேசுவை**

**தர்சிக்கும் நேரத்தில்**

**அந்த நாள் நல்ல நாள்**

**பாக்கிய நாள்**

**மாரநாதா இயேசு வருகிறார்...**

NOTES

# Our releases...



THE RAPTURE IS A GLORIUS EVENT WHICH GOD HAS PROMISED TO THE CHURCH.
**BE READY**. IT WILL HAPPEN ANYTIME. VERY SOON!

# Our Magazines



# மிருகங்கள்

வெளிப்படுத்தின விசேஷத்தின்
13ம் அதிகாரத்தின் விளக்கவுரை

MD JEGAN

## உள்ளே உள்ளவை...

- சமுத்திரம் மிருகம் என்றால்...
- சிறுத்தை, கரடி, சிங்கம் – ஓர் விளக்கம்
- மிருகத்தின் முத்திரை
- பூமியிலிருந்து ஏறிவரும் மிருகம்
- வேதகால வெளிப்பாடுகள்
- நிகழ்கால வெளிச்சங்கள்
- வேதாகமத்தில் அமெரிக்கா...
- 13–ம் அதிகாரத்தின் 18 வசனத்திற்கும் விளக்கம்
- இன்னும் பல... பல...

@arts4christ

HEAVENLY LADDER MINISTRIES
#1, Suresh Nagar Main Road, Janaki Nagar Extn.,
Valasaravakkam, Chennai - 600 087
Mob : +91 94443 42018

M.R.P.
₹100/-